பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 01 ஞாயிற்றுக்கிழமை (17.08.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 264

ஓரிடத்தில் தொடர்ந்து தங்கமுடியாத நிச்சயமற்ற பேரவலத்தில் அகதிகள்!

களநிலைமை மோசமாக இடம் பெயர்வும் அதிகரிக்கிறது கிளிநொச்சி அரச அதிபர் நிலைமையை விவரிக்கிறார்

கிளிநொச்சி, ஓகஸ்ட் 17

இன்று தங்கியிருக்கும் இடத்தில் நாளைக்கும் தொடர்ந்து இருக்க முடியுமா என்ற நிச்சயமற்ற, நிலையற்ற, பதற்றமுற்ற பேரவல நிலையிலேயே வன்னியில் மக்கள் நாள்களை கழிக்க நேரிட்டுள்ளது.

களநிலைமை மோசமடைய, மோசமடைய மக்களின் அன்றாட வாழ்க்கையும் மேலும் மேலும் சீரழிகிறது.

வன்னி வாழ் மக்களின் இப்போதைய நிம்மதியற்ற நிலை குறித்து மேற்கண்டவாறு 'உதயனு'க்குத் தெரிவித்தார் கிளிநொச்சி அரசாங்க அதிபர் நா.வேதநாயகன்.

மக்களின் இயல்பான வாழ்வாதார நிலைமை மோசமடைந்து வருவது குறித்து அவர் மேலும் விவரித்ததாவது:-

வன்னியில் தொடரும் அசாதாரண சூழ்நிலையில் இடம் பெயர்ந்த மக்கள் நிச்சயமற்ற நிலையில்- பெரும் அவல நிலையில்- உள்ளனர்.

அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில், எமது கையிருப்பில் உள்ளவளங்களைப் பயன்படுத்தி உதவிகளை வழங்கி வருகின்றோம்.

இருப்பிடங்களையும் உடைமைகளையும் தொழில் வாய்ப்புக்களையும் இழந்து அவர்கள் விவரிக்க முடியாத பேரவலத்தை

(16 ஆம் பக்கம் பார்க்க)

வீதியில் நடந்து சென்ற எம்.கே. நாராயணனை வெள்ளைவான்கடத்தாமல் விட்டது அதிர்ஷ்டமே!

குல தெய்வத்துக்கு அவர் நன்றிசொல்ல வேண்டும் என்கிறார் மனோ

கொழும்பு, ஓக.17

தேசிய அடையாள அட்டை மற்றும் சிறிலங்கா காவல்துறை பதிவு பத்திரம் எதுவும் இல்லாமல் கொழும்பு வீதியில் நடந்து கொண்டிருந்த இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனை வெள்ளை வான் குழுவினர் கடத்தவில்லை என்றால் அதற்கு அவர் தனது குலதெய்வத்துக்கு நன்றி சொல்ல வேண்டும்.மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்திய பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் எம்.கே.நாராயணன் (16 ஆம் பக்கம் பார்க்க)

லண்டன் வீதிச் சண்டையில் தமிழ் இளைஞன் கொலை; மற்றொரு தமிழ் இளைஞன் பொலிஸாரால் கைது

லண்டன், ஓக.17

கொலைக் குற்றச்சாட்டின் பேரில் இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை லண்டனில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

லண்டனின் வீதியில் நடந்த குழு மோதலில் 17 வயது இளைஞர்ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டே அந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெற்கு லண்டனில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கத்தியால் குத்தப்பட்டு கழுத்தில் படுகாயமடைந்த நிலையில் வீதியில்கிடந்த இலங்கையைச் சேர்ந்த இளைஞரை பொலிஸார்எடுத்துச் சென்று ஆஸ்பத்திரியில் சேர்த்தனர் என்றும் -

(16 ஆம் பக்கம் பார்க்க)

பாலமோட்டைப் பகுதியில் மும்முனைத் தாக்குதலை முறியடித்ததாக புலிகள் அறிவிப்பு

வவுனியா, ஓக.17

வவுனியா பாலமோட்டை, குஞ்சுக்குளம் பகுதிகளில் மூன்று முனைகளில் படையினர் மேற்கொண்ட ஊடுருவல் தாக்குதல் முயற்சியை முறியடித்து விட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை தொடக்கம் தொடர்ந்து இடம்பெற்ற இந்த மோதல்களில் வெள்ளிக்கிழமை மாலை படையினரின் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோதலில் 15 படையினர் கொல்லப்பட்டனர் என்றும் இருபதுக்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தனர் என்றும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் கிளைமோர்; படையினர் 2பேர் பலி!

வவுனியா, ஓக.17

வவுனியா, இரணைஇலுப்பைக் குளம் பகுதியில் நேற்று முற்பகல் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலில் 2இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் மேலும் 5 பேர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்கு இன்று 2,86,000 மாணவர்கள் தோற்றுகின்றனர்

வன்னியில் இடம்பெயர்ந்த மாணவருக்கு மாற்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக.17

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை இன்று நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு மொத்தம் 2லட்சத்து 86ஆயிரத்து 807 மாணவர்கள் தோற்றுகின்றனர். இவர்களில் தமிழ்மொழி மூலத்தில் இருந்து 70 ஆயிரத்து 323 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இந்தப்பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 2ஆயிரத்து 626 பரீட்சை நிலையங்களும், 491 இணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

மாணவ மணிகளுக்கு உதயனின் நல்வாழ்த்து

இன்று நடைபெறும் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவமணிகள் அனைவரும் சிறந்த பெறு பேறுகளைப் பெற்று கல்வியில் மேலும் சிறந்தோங்குக! எல்லோருக்கும் 'உதயன்' கல்விச் சுடரின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம் -

யாழ்.முன்னரங்க நிலைகளில் 2 நாள்களாக கடும் மோதல்கள்; நாச்சிக்குடாவிலும் சண்டை

கொழும்பு, ஓக.17

யாழ்ப்பாணத்தின் முன்னரங்க நிலைகளில் தொடர்ந்து மோதல்கள் இடம் பெற்று வருவதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது.

கிளாலி மற்றும் நாகர்கோயில் முன்னரங்க நிலைகளில் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற மோதல்களில் விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். இரு படையினர் காயமடைந்தனர் என்றும் படைத்தரப்பு தெரிவித்தது.

நேற்றுக் காலையிலும் முன்னரங்க நிலைகளில் இடைக்கிடையே மோதல்கள் இடம் பெற்றன என்றும் தெரிவிக்கப்பட்டது

இதேவேளை கிளாலி, முகமாலை பகுதிகளை நோக்கி நேற்று நண்பகலுக்கு பின் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் தென்மராட்சி அதிர்ந்த வண்ணம் இருந்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

கச்சதீவில் இந்தியக் கொடியை ஏற்றுவதற்கு செல்ல முனைந்தவர்கள்பொலீஸாரால் கைது

இராமேஸ்வரம், ஓக.17

கச்சதீவில் இந்தியத்தேசியக் கொடியை ஏற்றுவதற்காக இந்து மக்கள் கட்சித் தொண்டர்கள் மேற்கொள்ளவிருந்த பயணத்தை பொலீஸார் தடுத்து நிறுத்தினர்.

இந்து மக்கள் கட்சித் தொண்டர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இராமேஸ்வரத்தில் இருந்து படகுகளில் சென்று கச்சதீவில் இந்தியக் கொடியை ஏற்றுவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

அந்தக் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத் இராமேஸ்வரத்தில் வைத்து பயணத்தை ஆரம்பித்து வைத்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

சந்திர கிரகணம் அதிகாலை முழுமையாகத் தென்பட்டது

கொழும்பு, ஓக.17

இலங்கையில் இன்று ஞாயிற்றுக் கிழமை ஓகஸ்ட் 17 ஆம் திகதி 2.25 மணிக்கு தென் மேற்குத் திசையில் சந்திரகிரக ணத்தைத் தெளிவாகப் பார்க்கக் கூடியதாக இருந்தது.

நேற்று நள்ளிரவு 11.53 மணிக்கு சந்திர கிரகணம் ஆரம்பித்த போதிலும் இலங்

(16 ஆம் பக்கம் பார்க்க)

ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சை

பிரபல இரசாயனவியல் ஆசிரியர்

ஏ.லோகநாதன்

(யாழ்.மத்திய கல்லூரி)

தயாரித்து வழங்கும்

மாதிரி இரசாயனவியல் வினாப்பத்திரம்II-A

உள்ளே 13 ஆம் 14 ஆம் பக்கங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருக்கள்/பூசகர் தேவை

எமது ஆலயத்துக்கு 01.09.2008 தொடக்கம் குருக்கள்/ பூசகர் தேவை.

23.08.2008 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பித்தவர்களும் விண்ணப்பிக்கத் தவறியவர்களும் 27.08.2008 பிற்பகல் 3 மணிக்கு எமது ஆலயத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு சமுகம் கொடுக்கவும்.

தர்மகர்தா சபை,
வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோயில்
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்),
(77280) 655, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே

G.S.லிங்கநாதன் அன்கோ ஸ்தாபனம்

இன்று(17.08.2008)ஞாயிற்றுக்கிழமை
பகல் ஒரு மணி வரை

இரு கடைகளும் வியாபாரத்துக்காக
திறந்திருக்கும் என்பதனைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

★புதுவகையான சல்வார் செற்களும்
சாறி வகைகளும் உங்களுக்காக
தருவிக்கப்பட்டுள்ளன.

G.S.லிங்கநாதன் அன்கோ

13,14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (சி-554175) 47, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான
மகோற்சவகால 2008 ஆம் ஆண்டிற்கான உற்சவத்தை முன்னிட்டு
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தால்
தற்காலிக கடைகள் வழங்குவதற்கான

ஏலம் போடும் அறிவித்தல்

இடம் - தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கப் பணிமனை
காலம் - 22.08.2008 வெள்ளிக்கிழமை
நேரம் - காலை 9.30 மணி

நிபந்தனைகள்

1. ஒருவர் தனது பெயரில் ஒரு கடை மாத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.
2. பழைய நிலுவை உள்ளவர்கள் பழைய பாக்கியைச் செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.
3. இந்து இளைஞர் சங்கத்தின் விதி முறையை மீறும் கடை உரிமையாளரின் ஏலம் உடன் ரத்துச் செய்யப்படும்.
4. ஏலம் கேட்டவுடன் கேட்கும் தொகையின் அரைவாசி உடன் செலுத்த வேண்டும். அல்லாவிடின் இவருக்கு முன்பு கேட்டவருக்கு கடை வழங்கப்படும்.
5. இளிப்புக்கடை, ஐஸ்கிறீம் கடை என்பவற்றுக்கு பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுமதி பெற்றிருக்க வேண்டும்.
6. ஒவ்வொருவரும் தாம் கேட்கும் கடை ஏலத் தொகையுடன் பிரதேச சபைக்கான வரியையும் சேர்த்துச் செலுத்த வேண்டும்.

இந்து இளைஞர் சங்கம்,
(சி-554172) தெல்லிப்பழை.

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு
Pentium 4 மாபெரும் மெகா ஸ்பெஷல்

17" Dell Black Moniter, Intel Mother Board, Intel Processor 1.6, 256 Ram, 32 MB VGA Card, Silver, Black Casing CD ROM, 40GB Hard Disk, Keyboard & Optical Mouse

ரூபா 22,750 மட்டுமே

மாபெரும் இச்சலுகை 16 தொடக்கம் 20ம் திகதி மட்டுமே!

திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி. (ஆக் சிவசோதி டிஸ்ரிப்யூட்டர்ஸ் முன்பாக) யாழ்ப்பாணம்

உள்நாடு வெளிநாடுகளிற்கான!
FedEx Express
துரித தபால்கள் பொதிகள் சேவை
யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆக் சிவசோதி டிஸ்ரிப்யூட்டர்ஸ் முன்பாக)
46, ஆஸ்பத்திரி வீதி, கிளிநொச்சி. தொ.பே. (நல்லூர் ப.தொ.க.க.சங்கம் முன்பாக)

கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள்
மற்றும் VDO பிரதிகள், CD க்கள்
என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப்
பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
குறிப்பு:- அனுப்பப்படும் ஒவ்வொரு பொதிகளிற்கும் காப்புறுதி உண்டு

திணைக்களச் சாரதிகளுக்கு மூன்று நாள் பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் தற்காலிக அமைய, பதிலீட்டு அடிப்படை, ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் சாரதிகளுக்கான மூன்று நாள் பயிற்சி நெறி எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

இப் பயிற்சி நெறி மேற்கூறிய தினங்களில் தினமும் காலை 8.30மணி தொடக்கம்மாலை 4.15 மணிவரை நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியின் போது வழங்கப்படும் சான்றிதழ்கள் அவர்களின் பதவி நிரந்தரப்படுத்தலின் போது கவனத்தில் கொள்ளப்படும் என்பதனால் இப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள அழைக்கப்பட்ட சாரதிகளை இத்தினங்களில் இப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விடுவிக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களை யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் கோரியுள்ளார். (1-350)

வடிகாலுக்குள் வீழ்ந்த குடும்பஸ்தரின் கை முறிந்தது

யாழ்ப்பாணம், ஓக.17

வீதியோரத்தில் வெட்டப்பட்டிருந்த வடிகாலுக்குள் மிதிவண்டி சக்கரம் இறங்கியதால் தூக்கி வீசப்பட்டு குடும்பஸ்தரின் கை முறிந்தது.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வேலன் சிங்கராஜா (வயது 45) என்பவர் கை முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (1-207)

தாச்சிப்போட்டி

வலி.வடக்கு, ஓக.17

யாழ்.மாவட் தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கி, இலங்கை வங்கி என்பவற்றின் அனுசரணையுடன் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையே 13 ஆவது ஆண்டாக நடத்திவரும் லீக் முறையிலான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தாவடி காளியம் பாள் விளையாட்டுக் கழக மைதானத் தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு-

* தாவடி காளியம்பாள் வி.க. எதிர் மயிலிட்டி நியூகிட் வி.க.
* கோண்டாவில் மறுமலர்ச்சி வி.க. எதிர் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் வி.க.

(1-86)

குறுக்கே ஓடிய நாயுடன் மோதி விபத்தில் யுவதி காயம்

யாழ்ப்பாணம், ஓக.17

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில்மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த யுவதி தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் சங்கத்தானையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.தனோஜினி (வயது-18) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ-1)

நாவலர் வீதியில் கிரேனேட் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்ப்பாணம் நகரை அண்டி, நாவலர் வீதியில் ரயில்வே தண்டவாளத்துக்கு அருகில் அமைந்துள்ள காவலரணை நோக்கி நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணிக்கு கிரேனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் ஏதும் வெளியாக வில்லை. (அ-1)

ராஜா 2 யாழ்ப்பாணம்
60 ஆவது நாளை நோக்கி
20 வரை சகல
வசதிகளுக்கும் அனுகுங்கள்
காட்சிகள் 10.30–2.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை வாழ்த்திப் பிரார்த்திக்கின்றோம்

இன்று 17.08.2008 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களும் உயர்புள்ளி பெற்று சிறந்த பெறுபேறுகளால் யாழ். மாவட்டத்துக்கு பெருமை சேர்க்கவேண்டும். உயர் கல்வியால் சிறக்க வேண்டும் என வாழ்த்திப் பிரார்த்திக்கின்றோம். சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்கள் 2009.02.16 ஆம் திகதி நடைபெறவுள்ள கிராஜ மாணிக்க கல்யாண மண்டபத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவில் பாராட்டிக் கௌரவிக்க உள்ளோம் என்பதை மன மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வீடியோ கலாமினி,
அச்சுவேலி.

மரண அறிவித்தல்கள்

சுப்பிரமணியம் நகுலாம்பிகை

(விடத்தற்பளை)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், மிருசுவில், விடத்தற்பளையை வசிப்பிடமாகவும் உசன் தெற்கு, மிருசுவிலை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நகுலாம்பிகை நேற்று (16.08.2008) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னத்தங்கம் தம்பதியரின் அருமை மருமகளும், சுப்பிரமணியத்தின் (முன்னாள் உத்தியோகத்தர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், கணேசதாஸ் (சுவிஸ்), முருகதாஸ் (கனடா), சுபாங்கினி, சுமதி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயும், சாந்தகுமாரி (சுவிஸ்), அருட்சகோதரி (கனடா), காலஞ்சென்ற பிரபாசங்கர் மற்றும் சிறீதரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியும், நமசிவாயம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), சிவபாக்கியம் மற்றும் காலஞ் சென்றவர்களான தெல்லியூர் நடராஜா, சிவக்கொழுந்து, சரஸ்வதி ஆகியோரின் அருமைச் சகோதரியும், கீர்த்தனா, பிருந்தாபன், ருஷானி, டிதுசன், மிதுசா, புருஷோத்மன், வைஷ்தமன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் பி.ப. ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக ஈச்சங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன் தெற்கு, மிருசுவில். தகவல்: ச.சுப்பிரமணியம் (மணியம்).

திருமதி இரத்தினம்மா மயில்வாகனம்

கோண்டாவில், நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் நவரட்ணராஜா வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம்மா மயில்வாகனம் நேற்று (16.08.2008) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் பாசமிகு மனைவியும், யோகேஸ்வரன், காலஞ்சென்ற விக்னேஸ்வரன் மற்றும் புஸ்பராணி(ஜேர்மனி), ஜெயம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சுந்தரராஜா, பத்மா மற்றும் பூலோகம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெட்டிலிப்பாய், கோண்டாவில். (77281) தகவல்: வைத்திலிங்கம் (ஆசிரியர்-மகன்).

திருமதி பத்மலிங்கம் இந்திரா

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மலிங்கம் இந்திரா நேற்று(16.08.2008)சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு. (77279) தகவல்: பத்மலிங்கம் -கிளி (கணவர்).

இராஜரட்ணம் கந்தசாமி

(வைத்திலிங்கம் கம்பனி முன்னாள் ஊழியரும், நல்லூர் பஜனைச் சபைத் தொண்டரும்)

இராஜரட்ணம் கந்தசாமி நேற்று (16.08.2008) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மூத்த மகனும் காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும் மகாலட்சுமி, பத்மாவதி, இராஜகோபால் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோகிலாம்பாள், குணேஸ்வரி, புஸ்பராணி, பாலசுப்பிரமணியம், ஜெயவரதன், கமலேஸ்வரி, பகீரதி, தயாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவி, விக்கினேஸ்வரன், செல்வி, சரோஜினி, குணசேகரம், திருநாவுக்கரசு ஆகியோரின் பாசமிகு மாமனும் குட்டி, ஜெயராணி, ராதிகா, துளசி, கௌசி, ரேணுகா, துஸ்யந்தன், அனுசியா, தகீசன், தர்சன், உமா மகேஸ்வரி, உமாமகேஸ்வரன், சத்தியநிதி ஆகியோரின் அன்புப் பேரனும் அனோஜன், அபினஜா, அக்ஷனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.08.2008) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 4 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சட்டநாதர் வீதி, நல்லூர். (77278) தகவல்: க.ஜெயவரதன்(மகன்).

குடாநாட்டு மக்களில் பலருக்கு உரிய நேரத்தில் உரிய சிகிச்சை இல்லை; மிகப் பலர் நிரந்தரமாக கண்பார்வையை இழக்கக்கூடும் என்ற நிலை

கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்ட கண்சிகிச்சை இயந்திரங்கள் இன்னமும் இங்கு வந்து சேராமல் அங்கு கிடப்பில்...!

அதிர்ச்சி தரும் தகவல்கள் இவை. இதனைப் படித்ததும், உரிய நேரத்தில் உரிய சிகிச்சை பெற முடியாமல் திண்டாடும் நோயாளர் பலருக்கு ''பொத்துக் கொண்டு'' கோபம்வரும். ஏன் சிலர் திட்டித் தீர்க்கவும் செய்வர். பலரது வாழ்க்கையை இருளாக்கி விடும் ஆபத்து நிறைந்த இந்த விவகாரம் குறித்து மேலும் பீடிகை போட விரும்பவில்லை.

ஒரு சிலரின் அசமந்தமும், அக்கறை இன்மையும்-அல்லது இயலாத் தன்மையும் - எத்தனை பேரின் எதிர்கால வாழ்க்கையுடன் விளையாடப் போகிறது என்பதனை நினைக்கும் போது...

அதனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து மக்கள் நலன்நாடி சில தகவல்களை வெளிக்கொணர வேண்டிய தேவை உண்டாகிறது. எவரையும் புண்படுத்துவதற்காக அல்ல; சம்பந்தப்பட்ட மக்களுக்கு - நோயாளருக்கு - விமோசனம் கிடைக்க வேண்டும் என்ற சமூக நலன் நாடிய நோக்கத்துடன் ....

குடாநாட்டில் வாழும் மக்களின் சுமாரான எண்ணிக்கையானோர் தமது கண்பார்வையை இழக்கும் ஆபத்து வரக்கூடும் என்ற நிலையை இந்தக் கட்டத்திலாவது தவிர்க்க எவரும் உதவ மாட்டார்களா என்ற ஆதங்கத்துடன் ...

மறைந்திருந்த சில விடயங்களை வெளிச்சத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம்.

யாழ்.ஆஸ்பத்திரி கண்சிகிச்சைப் பிரிவின் பாவனையில் இருந்த முக்கிய இரண்டு இயந்திரங்கள் பழுதடைந்தன. அவை திருத்த வேலைகளுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டன.

கண் அழுத்தத்தைச் சோதிக்கும் இயந்திரம் ஏ-9 பாதை மூடப்படுவதற்கு முன்னர் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படும் ''லேசர் இயந்திரம்'', ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அந்த இரு இயந்திரங்களும் திருத்தப்பட்டு, பாவிக்கக் கூடிய நிலையில் இருப்பதாக அவற்றை திருத்தம் செய்த 'டிமோ' நிறுவனம் ஆஸ்பத்திரி நிர்வாகத்துக்கும் ஆஸ்பத்திரிக்குப் பொருள்கள் வாங்கி அனுப்ப கொழும்பில் தங்கியுள்ள இணைப்பதிகாரிக்கும் தெரியப் படுத்தியது.

ஆனால், அந்த இயந்திரங்கள் இரண்டும் திருத்தப்பட்டு ஒரு வருடமாகியும் இன்னமும் யாழ்ப்பாணத்தை வந்தடையவில்லை.

அந்த இயந்திரங்கள் திருத்தப்பட்ட காலத்தில் வைத்திய உபகரணங்களைக் கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டிய தேவைஇருக்கவில்லை.

அவற்றை இங்கு அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டதால் இப்போது பாதுகாப்பு அனுமதிக்குக் காத்திருக்க வேண்டிய நிலை உருவானது.

இத்தகைய சூழ்நிலையில் இரண்டு இயந்திரங்களில் ஒன்றுக் குப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டபோதிலும் - ஒன்றேனும் இங்கு எடுத்துவரப்படவில்லை - வந்து சேரவில்லை.

நீரிழிவு நோயாளருக்கு இரத்தம் வெளியேறாத நிலையில், கண் சத்திர சிகிச்சை அளிக்க ''லேசர்'' கருவி பயன்படுத்தப்பட்டு வந்தது. அந்தக் கருவி கொண்டு சிகிச்சைப் பெறுவதற்கு 3 ஆயிரத்து 500 ரூபா கட்டணம் கொழும்பில் பெறப்படுகின்றது.

கண் அழுத்தம் ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து அதற்குச் சிகிச்சையளிக்கும் இயந்திரம் மற்றையது.

இந்த இயந்திரத்தின் மூலம் கண்ணில் ஏற்படும் அழுக்கத்தைக் கண்டறிந்து அதன்பின்னர் தேவைப்படும் சிகிச்சைகளை வழங்கமுடியும்.

இந்த இரு இயந்திரங்களும் யாழ்.ஆஸ்பத்திரியில் இல்லாத காரணத்தால் கண்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதற்கான சிகிச்சையைஉரியமுறையில்பெறமுடியாத நிலை தோன்றியுள்ளது.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் கண்பாதிப்பை எதிர்நோக்க நேரிடுவது வழக்கம். அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்காவிட்டால், கண்களுக்குச் செல்லும் நாளங்கள் செயலிழந்து நிரந்தர குருட்டுத் தன்மை ஏற்பட்டுவிடும் பெரும் ஆபத்து உண்டு. அதன் பின்னர் அவர்களை அதில் இருந்து மீட்க முடியாது என்பதும் மிகவும் பயங்கரமான ஒன்றாகும்.

கண்ணில் அழுக்கம் உண்டாவோரின் நாளங்களும் செயலிழந்து போனால் அதிலிருந்தும் நோயாளர்களைக் காப்பாற்ற முடியாது என்பது நோயின் இயல்பு. அவர்கள் குருட்டுத்தன்மை அடையும் பேரபாயமும் உண்டு.

இதனை நாம் மட்டும் சொல்லவில்லை; வைத்திய வட்டாரங்களும் உறுதி செய்கின்றன.

உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வுப் பிரகாரம் -

கண்பார்வை இழப்புக்கு காரணமாக இவ்விரு விடயங்களுமே முன்னிலையில் உள்ளன என்பதும் மறந்துவிடக்கூடிய ஒன்றல்ல.

முன்னர் குறிப்பிட்ட இரண்டு இயந்திரங்களும் இல்லாமல், முன் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த நோயாளருக்கு சிகிச்சை அளிக்க முடியாத துரதிர்ஷ்ட நிலை யாழ். போதனா வைத்தியசாலையில் இப்போது உருவெடுத்துள்ளதாகச் சம்பந்தப்பட்ட நோயாளர்களின் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

குடாநாட்டில் கண்நோயால் பாதிக்கப்படுபவர்கள் கொழும்பு சென்று சிகிச்சை பெறவேண்டுமாயின், பெரும் பணச் செலவு உண்டாகும்; பாதுகாப்பு அனுமதி பெறவேண்டிய தேவைகளால் தாமதங்களையும் சந்திக்க நேரிடும்.

திருத்தப்பட்ட பின்னரும் கொழும்பில் தவம் கிடக்கும் இந்த இயந்திரங்கள் இரண்டையும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், பெரும்பான்மையினர் கண்பார்வையை இழந்து அந்தகர்களாக மாறும் ஆபத்து உண்டென்றும் விடயமறிந்த வட்டாரங்கள் எச்சரிக்கின்றன.

கண்பரிசோதனைக்கு வருபவர்களுக்குப் பயன்படுத்தப்படும் மருந்து திகதி காலாவதியானது என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

இந்தக் கண் மருந்து நாட்டில் உள்ள சகல வைத்தியசாலைகளுக்கும் கண்டிவைத்தியசாலைஊடாகவே வழங்கப்படுகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கான மருந்தும் கண்டி வைத்தியசாலை ஊடாகவே கிடைக்கின்றது.

- கொண்டோடி -

யாழ்.ஆஸ்பத்திரியில் கையிருப்பில் உள்ள மருந்து முடிவடைவதற்கு சில மாதங்களுக்கு முன்பே அந்த மருந்தை எடுத்துவர கொழும்புக்கு அறிவிப்பு விடுக்கப்பட்டது.

எனினும், அசமந்தப் போக்குக் காரணமாக அந்த மருந்து இன்னமும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படாததால், ஏற்கனவே எடுத்து வரப்பட்டு, திகதி காலாவதியான போதும் அந்த மருந்தையே பாவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. ✱

மக்கள் பிரச்சினையில் உதயன்

காந்திக்காக ஏங்கும் உலகு



மகாத்மாகாந்தி என்றும் 'தேசபிதா' என்றும் இன்றளவும் மக்களால் அன்போடு அழைக்கப்படுபவர் அண்ணல் காந்தியடிகள்.

ஆனால் அவரோ தான் அவ்வாறு அழைக்கப்படுவதை தன் வாழ்நாள் முழுவதும் தவிர்க்கவே விரும்பினார். சென்ற இடமெல்லாம் இடைவிடாத மக்களின் ஏகோபித்த இக்கோஷங்களிடையே அவர் நினைத்தது நடைபெறாமல் போனது. வாரணாசியில் காசி விஸ்வநாதர் தரிசனத்துக்குச் சென்ற காந்தி, மக்கள் கூட்டம் 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று கோஷமிட்டபோதும் மிகவும் எரிச்சலடைந்தார்.

கோயிலுக்குள் மகாத்மாவை (விஸ்வநாதர்) தரிசனம் செய்ய இங்கு வந்தால் இங்குள்ள மகாத்மாக்களின் (தன்னை மகாத்மா என்று கோஷமிடும் மக்கள்) தொல்லை தாங்க முடியவில்லையே. நீங்கள் மகாத்மா என்று கோஷமிடுவதை முதலில் நிறுத்துங்கள். கோயிலை இவ்வளவு அசுத்தமாக வைத்திருக்கிறீர்களே. வெளிநாட்டினர் இக் கோயிலைப் பார்த்தால் எவ்வளவு கேவலமாக நம்மை நினைப்பார்கள்'' - என்று கோபமாகப் பேசினார் காந்தி.

அண்ணல் காந்தியடிகளை மகாத்மாகாந்தி என்று அழைக்கும்போது அவரது சிறந்த அரசியல் மேதமை, மனித நேயப் பண்புகள் சார்ந்த ஆளுமை குறைத்து மதிப்பிடப் படுவதாகவே யோகேஷ் சதா போன்ற வரலாற்று அறிஞர்கள் உணர்கிறார்கள். ஏனெனில், ஆத்மா, பரமாத்மா, ஜீவாத்மா என்ற பதங்களுக்கு விளக்கவுரை ஆற்றிய ஆன்மீக வாதியல்ல காந்தி. மிகச் சாதாரண மனிதராகத் தன்னை ஏற்றுக்கொள்ளும் சுபாவமே காந்தியிடம் கடைசி வரையிலும் இருந்தது.

இன்னும் சொல்லப்போனால் தன்னை ஓர் அற்ப ஆத்மா என்று சொல்லிக் கொள்ளும் அளவிற்கு மிகச் சாதாரண மனிதராகவே நினைத்து வந்தார்.

1929 டிசம்பரில் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு ஜவஹர்லால் நேரு தலைமை வகித்தார். உடனடியாக சுதந்திரப் பிரகடனத்தை அறிவியுங்கள் என்று எங்கும் குரல் ஒலித்தபோது என்ன செய்வதென்று தெரியவில்லை. முழுச் சுதந்திரம் எனும் அர்த்தம் பொதிந்த சுயராஜ் தீர்மானத்தை மிக அவசரமாகக் காந்தி கொண்டுவந்தார்.

சபர்மதி ஆச்சிரமத்தில் காந்தியைச் சந்தித்தார் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர். சுயராஜ் பற்றி விளக்கம் கேட்டபோது தாகூரிடம் - ''என்னைச் சுற்றி இருட்டு பரவியுள்ளது. ஏதேனும் ஒரு ஒளி கூட எனக்குத் தோன்றவில்லை. என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை'' - என்று ஒரு சாதாரண மனிதரைப் போல் தனது இயலாமையை வெளிப்படுத்துகிறார் காந்தி. ஒரு தீர்க்கதரிசியைப் போன்றோ எல்லாம் முற்றுணர்ந்த மகாத்மா போன்றோ அவர் என்றும் தன்னைக் காண்பித்துக் கொள்ளவில்லை.

காந்தியடிகளை தேசபிதா என்று அழைக்கும்போதும் மறுபடியும் இதுபோன்ற கேள்விகள் மேலோங்கி வருகின்றன. ஆங்கில ஆதிக்கத்தில் இருந்து இந்தியா விடுதலை பெறுவதற்கு காந்தி ஒரு மிகப் பெரிய காரணராக இருந்தபோதிலும் தென்னாபிரிக்காவிலிருந்து அவர் இந்தியாவிற்கு வருவதற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பே இந்திய வரலாற்று அரசியல் தீவிரத் தன்மையோடு நடைபெறத்தான் செய்தது. இருப்பினும் தலைவர்கள் மத்தியில் மட்டுமே பேசப்பட்ட இந்திய விடுதலை உணர்வை மக்களுக்கு எடுத்துச் சென்ற மாமனிதராக காந்தி ஒருவரே இருந்தார். காந்தியை தேசபிதா என்று அழைக்கும்போதும் இந்தியா என்ற குறுகிய சிமிழுக்குள் காந்தியை அடைக்கும் முயற்சியாகவே பொருத்தமற்ற ஒன்றாக இருக்கிறது என்று இன்றைய வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் சிறந்த அரசியல்வாதியும், தலைசிறந்த மனிதப் பண்பும், உலக அநீதியை எதிர்க்கும் [illegible] காந்தியின் ஆளுமை இவ்விதமான அடைமொழி வார்த்தைகளால் நிரப்பப் பேசினும், சில நேரங்களில் அர்த்தமற்றதாகவும் தோன்றுகிறது. இந்தியாவிற்கு மட்டுமல்லாமல் இன்றைய வன்முறை சார்ந்த உலக அரசியல் சூழலில், நீதி சார்ந்த ஒரு தலைவனுக்காக ஏங்கும் உலக மக்களுக்கான ஒரு குறியீடாகத் திகழ்கிறார் காந்தி.

அன்றைய தேசியத் தலைவர்களையும், மக்களையும் ஒரு சேர நேசித்து, அவர்களுடன் பழகியது தமக்கு எதிரான கருத்துகளுடைய அவர்களது கருத்துகளுக்கும் மதிப்பளித்தமை போன்ற சமூக நட்புறவுப் பண்புகள் காந்தி ஒருவரிடமே குவிந்திருந்தன. ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், முகம்மது அலி ஜின்னா, அம்பேத்கர், மவுன்ட்பேட்டன் பிரபு, இர்வின் போன்ற மற்றும் வைஸ்ராய்கள் போன்ற பல எதிரெதிரான கொள்கைகள் உடைய தலைவர்களிடம் நல்லுறவு வைத்துக்கொள்ளும் சமூகப் பண்பு காந்தி ஒருவரிடமே இருந்தது.

பால்ய காலத்திலும் தென்னாபிரிக்காவில் வழக்கறிஞராகப் பணியாற்றிய போதும் மற்றவரோடு பழகுவதில் மிகக் கூச்ச சுபாவம் உடையவராகவே காந்தி திகழ்ந்தார். பிற்காலங்களில் தான் தனக்கு எதிரான கருத்து உடையவர்களோடும் ஏன் முப்பது கோடி மக்களால் கவரப்படக்கூடிய அளவிற்கு சமூக நட்புணர்வுப் பண்புகளைப் பெற்றிருந்தார் காந்தி. டேனியல் கோல்மேன் போன்ற நவீன நிர்வாகவியல் அறிஞர்கள் வலியுறுத்தி வரும் இந்த சமூக நட்புறவுப் பண்புகளைக் காந்தி அக்காலத்தே பெற்றிருந்தமை இன்றும் ஆச்சரியமாக இருக்கிறது.

இந்த எளிய மனிதரிடம் முப்பது கோடி மக்களைத் தன் பக்கம் இழுத்த அரிய சக்தி எப்படி வந்தது என்றெல்லாம் உலகம் வியக்கும் அளவிற்கு அதிசயமான மனிதராகவே இன்றும் தோன்றுகிறார் காந்தி. வாலிபத்தில் சிறைக்குச் சென்று வயோதிபராக வெளிவந்த, 'சிறையிலும் வாடாத கறுப்பு மலர்' என்று அழைக்கப்பட்ட நெல்சன் மண்டேலா சிறையிலிருந்தபோது தினம் தினம் அண்ணல் காந்தியையே நினைத்துக் கொண்டிருந்தேன் - என்றார்.

தென்னாபிரிக்காவில் மைக்கேல் கோட்ஸ் என்ற பாதிரியார், காந்தியை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்ற நினைத்தபோதும் அவர் கழுத்தில் அணிந்துள்ள துளசி மாலையை உடைக்க முயன்ற போதும் கோபம் கொள்ளவில்லை காந்தி. மாறாக எனது அன்னை அளித்த புனிதமான அன்பளிப்பு இது; கிறிஸ்தவத்தை எப்போதும்மதிக்கின்ற நான் ஓர் இந்துவாகவே இருக்க விரும்புகின்றேன் என்று அன்போடு மறுத்தார்.

சுதந்திரம் பெற்ற பிறகு, பாகிஸ்தான் பிரிந்த பிறகு, காந்தியைத் தீர்த்துக்கட்டும் அபாயம் இருப்பதால் காந்திக்கு உடனடியாகப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று வல்லபாய் பட்டேல், அவரிடம் வேண்டிக் கொண்ட போதும் காந்தி பிடிவாதமாக அதை மறுத்துவிட்டார். எனது பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வருபவரைச் சோதனை இடுவதைப் போன்ற அநாகரிகம் உலகில் வேறு ஒன்றும் இல்லை.

எனது உயிருக்கு அளிக்கும் பாதுகாப்பை, சாதாரண மனிதருக்கு உங்களால் அளிக்க முடியுமா? என் உயிரை உங்களால் பாதுகாக்க முடியாது. கடவுள் ஒருவர் மட்டும்தான் அதைப் பாதுகாக்க முடியும் என்று பட்டேலிடம் கோபமாகப் பேசினார் காந்தி.

தன் கடைசி நாளில் தன்னைப் பார்க்கவந்த வல்லபாய் பட்டேலிடம் லண்டனிலிருந்து வெளிவந்த 'டைம்ஸ்' இதழைக் காண்பித்து உங்களுக்கும் நேருவுக்கும் உள்ள கருத்து வேற்றுமை லண்டன் வரை சென்றுள்ளதைப் பாருங்கள். உங்கள் கருத்து வேற்றுமை, நாட்டின் அழிவிற்குத்தான் வழிவகுக்கும். இருவரில் ஒருவர் அமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டும். அதையார் என்று பிறகு சொல்கிறேன் என்றார் காந்தி.

மாலை 5 மணி. கூட்டுப் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு பத்து நிமிடங்கள் காலதாமதமாகவே சென்றார். பொதுமக்களைப் பார்த்து அவர்களைக் காக்க வைத்த குற்ற உணர்வோடு 'நமஸ்கார்' என்று இரு கரங்களாலும் மக்களை வணங்கினார் காந்தி.

சிறிது நேரத்தில் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. காக்கி உடை அணிந்த கோட்சே எனும் வாலிபன் ஒருவன் கூட்டத்தை விலக்கிவிட்டு வேகமாகக் காந்தி முன் வந்து நின்றான்.

அவரை இரு கரம் கூப்பி வணங்கினான்.

அடுத்த நொடியே, மூன்று முறை துப்பாக்கியால் சுட்டான். காந்தியின் கும்பிட்ட கரங்கள் தற்போது அவிழ்ந்து விழுந்தன. ஹே ராம் என்று காந்தியின் உதடுகள் முணு முணுத்தன.

ரோஜாப்பூ போன்ற மென்மையான காந்தியின் உடல் தரையில் விழுந்தது. இன்றும் காந்திக்காக ஏங்கி நிற்கிறது இந்த உலகு. ✱

(நன்றி - தினமணி)

தம்மை ஒரு சாதாரண மனிதராக ஏற்றுக்கொள்ளும் சுபாவம் கொண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டையல்ல; சந்தோஷம்

'பீச் வொலிபோல்' போட்டியில் பங்கேற்ற இந்த வீரங்கனைகள் இருவரும் போட்டிக்கு இடையே ஏற்பட்ட முறுகலால் ஆவேசமாக சண்டை பிடிக்கிறார்கள் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. தங்கப் பதக்கம் வென்ற மகிழ்ச்சியை இப்படிப் பகிர்ந்து கொள்கிறார்கள் ஆஸ்திரேலிய வீராங்கனைகள்.

குத்துச் சண்டை காலிறுதியில் அகில்குமார்!

உலக சம்பியனை வீழ்த்தி அசத்தினார்!

ஒலிம்பிக் குத்துச் சண்டையில் இந்தியாவின் கை ஓங்கியது. நேற்று முன்தினம் நடந்த காலிறுதிக்கு முன்னைய சுற்றில் இந்திய வீரர் அகில்குமார், உலக சாம்பியனான ரஷ்யாவின் செர்கி வோடோ பியானோவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

ஒலிம்பிக் போட்டிகள் பீஜிங்கில் நடக்கின்றன. நேற்று முன்தினம் நடந்த 54 கி.கி, குத்துச்சண்டைப் பிரிவில் இந்திய வீரர் அகில்குமார், 2007 ஆம் ஆண்டு உலக சாம்பியன் பட்டம் வென்ற ரஷ்யாவின் செர்கி வோடோ பியானாவுடன் மோதினார். இந்தியா சுதந்திரம் அடைந்த நன்னாளில் புதிய உத்வேகத்துடன் மோத உள்ளதாகத் தெரிவித்திருந்த அகில்குமார் வெற்றியை எதிர்நோக்கி களமிறங்கினார்.

இப்போட்டியின் முதல் சுற்றில், அகில் 1-2 எனப் பின் தங்கினார். அடுத்த இரண்டு சுற்றுகளிலும் (3-4, 7-8) ரஷ்யாவின் செர்கி வோடோ பியானோவா முன்னிலை வகித்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் இறுதிச் சுற்றில் இருவருக்கும் கடும் போட்டி நிலவியது. அதிரடியில் மிரட்டிய அகில் புதிய உற்

சாகத்துடன் விட்டுக் கொடுக்காமல் போராடினார். நான்கு சுற்றுகளில் முடிவில் இருவரும் 9 புள்ளிகள் பெற்றனர். இறுதியில் 5 நபர்களைக் கொண்ட நடுவர் குழு அகில்குமார் வெற்றி பெற்றதாக அறிவித்தது. முடிவைக் கேட்ட உலக சாம்பியன் செர்கி, அழுது புலம்பினார். இந்த வெற்றியை தொடர்ந்து அகில்குமார் பதக்கம் வெல்லும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. காலிறுதியில் வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றால் குறைந்தபட்சம் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றலாம்.

இது குறித்து அகில் கூறுகையில், உலகச் சாம்பியனை வீழ்த்துவது எளிதான காரியம் அல்ல என்று தெரியும்.

ஆனால் போட்டி சமநிலை எட்டிய போது, நான் தோல்வி அடைய மாட்டேன் என்ற நம்பிக்கை வந்தது. தங்கப்பதக்கத்துக்கு நான் தகுதியானவன் அல்ல என்று பலர் நினைக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். பீஜிங் ஒலிம்பிக்கில் நான் பங்கேற்றது தங்கம் வெல்லத்தான். தங்கம் கிடைப்பது தவறினாலும், வெண்கலப் பதக்கத்துடன் இந்தியா திரும்புவேன். ஆனால் தங்கப்பதக்கம் எனக்குத்தான் என்பதில் உறுதியாக இருக்கிறேன். என்றார். நாளை திங்கட்கிழமை நடக்கும் காலிறுதிப் போட்டியில் அகில் பங்கேற்க உள்ளார்.

அதிரத் தொடங்கியது தடகளம்

தட்டுண்டு வீழுவேனா...?

உலக விளையாட்டு ரசிகர்கள் எல்லோரும் மிகவும்ஆவலோடு எதிர்பார்த்திருந்த ஒலிம்பிக் தடகளப் போட்டிகள் நேற்று முன்தினம் தொடங்கின.

முதல் நிகழ்வுகளாக, உலகின் வேகமான மனிதர் யார் என்பதை தெரிவுசெய்யும் 100 மீற்றர் ஓட்டத்தின் தெரிவுப் போட்டிகளும், உயரம் பாய்தல் போட்டியும் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் இம்முறை மும்முனைப் போட்டி நிலவுகிறது. இருந்தாலும், சமீபத்தில் 9.72 வினாடிகளில் ஓடி உலக சாதனை படைத்த ஜமாக்கா வீரர் உசைன் போட் மீது தான் அனைவரது கவனமும் திரும்பியிருக்கின்றது. 200 மீற்றர் ஓட்டத்திலும் இவர் பங்கேற்கிறார். இவரது நாட்டு வீரர் அசாபா பாவெல் காயம் காரணமாக சிறிது ஓய்வெடுத்தார். இவர் தற்போது முழுமையாகக் குணமடைந்துவிட்டார் என்று தெரிகிறது. இவர்கள் இருவருக்கும் சவாலாக இருப்பவர் என்று கருதப்படுபவர் அமெரிக்கா வீரர் டைசன்கோ. அவரும் 100, 200 மீற்றர் போட்டிகளில் களமிறங்குகிறார்.

110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கிறார். சீனாவின் லியு ஜியாங்.

நீண்டதூரம் ஓட்டப் போட்டிகளில் வழக்கம்போல இம்முறையும்எதியோப்பியா மற்றும் கென்ய அணிகளுக்கிடையில் நீயா? நானா? போட்டி நிலவுகிறது.

வென்றே தீருவேன்...

இலங்கை தனக்கும் ஏதாவது ஒரு பதக்கமாவது கிடைத்துவிடாதா என்ற ஆதங்கத்தில் சுசந்திகா ஜெயசிங்கவை எதிர்பார்த்தக்கொண்டிருக்கிறது.

100, 200 மீற்றர் போட்டிகளில் பங்கேற்கும் நோக்கத்துடன் பீஜிங் சென்ற சுசந்திகா, திடீரென்று தனது முடிவை மாற்றிக் கொண்டு 100 மீற்றரில் இருந்து தாம் விலகப் போகிறார் என அறிவித்திருக்கிறார்.

பெடரருக்கு என்ன நடந்தது?

-மூன்றாவது முறையாக தகர்ந்தது 'ஒலிம்பிக் கனவு'

பீஜிங், ஓக. 17

'நம்பர் - 1' வீரர் ரோஜர் பெடரர் தொடர்ந்து தடுமாறி வருகிறார். வெள்ளிக்கிழமை நடந்த ஒலிம்பிக் ஆண்கள் காலிறுதியில், அமெரிக்காவின் ஜேம்ஸ் பிளேக்கிடம் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

சமீப காலமாக மோசமாக விளையாடி வரும் பெடரர், பிரெஞ்ச் மற்றும் விம்பிள்டனில் கோப்பை வெல்ல முடியாமல் தடுமாறினார். இதன் விளைவாக, அவரது 'நம்பர் - 1' அந்தஸ்து பறிபோக இருக்கிறது.

இந்நிலையில், ஒலும்பிக் போட்டியிலும் பெடரர் முழுத்திற மையை வெளிப்படுத்தத்தவறினார். இதனால் முதல் செட்டை 4 - 6 என இழந்தார். இரண்டாவது செட்டில் பிளேக்கிற்கு கடும் சவால் கொடுத்தார். என்றாலும் சூப்பர் ஆட்டத்தை வெளிப்படுத்திய பிளேக், அதை 7 - 6 என 'டை பிரேக் கரில்' வென்றார். இறுதியில் பிளேக் 6 -4, 7 - 6 என்ற செட்களில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். 12 கிராண்ட் ஸ்லாம் வென்ற பெடரரின் 'ஒலிம்பிக் பதக்கக் ச ...வு' தற்போது மூன்றாவது முறையாகவும் நிறை வேறாமல் போனது.

இனி நான் தான் அரசன்...!

பெடரரை வீழ்த்திய மகிழ்ச்சியில் குதூகலிக்கும் ஜேம்ஸ் பிளேக்

இன்னும் ஒன்றுதான்.....!

ஒலிம்பிக் நீச்சல் போட்டியில் மைக்கல் பெல்ப்ஸ் நேற்று 7 ஆவது தங்கத்தை வென்றார். அவரின் இலக்கு எட்டுத் தங்கங்கள். அதற்கு இன்னும் ஒன்றுதான் உள்ளது. அதனை அவர் இன்று வெல்வார் என எதிர்பார்க்கப் படுகின்றது. 8 தங்கங்களையும் வென்றால் அவரது கனவு நனவாகின்றது. ஒலிம்பிக் போட்டிகளில் அதிக தங்கங்களை வென்றார் என்ற அதி உயர் சாதனையையும் அவர் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வார்.

ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

(நேற்று மாலை வரையானது)

நிலை	நாடு	தங்.	வெள்.	வெண்.	மொ.
1	சீனா	27	11	6	44
2	அமெரிக்கா	16	15	19	50
3	ஜேர்மனி	8	3	5	16
4	வடகொரியா	6	9	4	19
5	ஆஸ்திரேலியா	6	7	10	23
6	இத்தாலி	6	5	4	15
6	ஜப்பான்	6	5	4	15
8	ரஷ்யா	4	8	8	20
9	பிரிட்டன்	4	2	3	9
10	உக்ரைன்	4	0	5	9
11	பிரான்ஸ்	3	9	9	21
12	சுலோவாக்கியா	3	1	0	4
13	செக்	2	3	0	5
14	ரூமேனியா	2	1	2	5
15	ஜோர்ஜியா	2	0	1	3
16	கியூபா	1	3	4	8
17	சிம்பாப்வே	1	3	0	4
18	நெதர்லாந்து	1	2	4	7
19	அஜர் பைஜன்	1	2	2	5
20	நோர்வே	1	2	1	4
21	தென்கொரியா	1	1	3	5
22	கனடா	1	1	0	2
22	மொங்கோலியா	1	1	0	2
22	போலந்து	1	1	0	2
25	பிரேசில்	1	0	4	5
26	சுவிற்சர்லாந்து	1	0	3	4
27	பல்கேரியா	1	0	1	2
27	ஸ்பெயின்	1	0	1	2
27	பின்லாந்து	1	0	1	2
30	எத்தியோப்பியா	1	0	0	1
30	இந்தியா	1	0	0	1
30	தாய்லாந்து	1	0	0	1

Beijing 2008

அதிக வேக மனிதன் யார்?

உலகில் அதிக வேக மனிதன் யார்? என்பதைத் தீர்மானிக்கும் 100 மீற்றர் ஓட்டப் போட்டியின் தெரிவுப் போட்டிகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. மிகவும் எதிர்பார்க்கப்படும் அமெரிக்காவின் டைசன்கே (வலது) உள்ளிட்ட வீரர்கள் தெரிவுப் போட்டியில் கலக்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன் சிமெந்து ஆலையை இந்தியாவிடம் தாரைவார்த்து வலிகாமம் வடக்கின் செழுமையழிக்க மன்னன் விற்பதா?



யாழ்ப்பாண மக்கள் குறிப்பாக வலி. வடக்கு மக்கள் சிந்திக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது. காங்கேசனிலுள்ள சிமெந்து ஆலைகளில் ஒன்றை மீளவும் இயக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. காங்கேசனிலுள்ள லங்கா சிமெந்து ஆலை ஏற்கனவே இந்தியாவின் முன்னணி நிறுவனங்களுள் ஒன்றான 'பிர்லா' நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுவிட்டது.

காங்கேசன் சிமெந்து ஆலையை இயக்குவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. 'பிர்லா' நிறுவன அதிகாரிகள் ஏற்கனவே லங்கா சிமெந்து ஆலைக்கு விஜயம் செய்து, ஆலையைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் அமைச்சரொருவர் யாழ்ப்பாணம் வந்து சிமெந்து ஆலை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்திவிட்டுச் சென்றுள்ளார்.

இந்தவேளையில்... சிமெந்து ஆலையை மீளவும் இயக்குவதற்குத் தடைவிதிக்கக் கோரி யாழ்ப்பாண மக்கள் போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

டி.எஸ்.சேனநாயக்காவின் பாசாங்கு

இலங்கை சுதந்திரமடைந்தபோதுதான் தமிழர்களையும் சிங்களவர்களுக்குச் சரி சமனாக நடத்துகிறேன் எனப்பாசாங்கு பண்ணி, பிரித்தானியரை ஏமாற்றுவதற்காக ஜி.ஜி. பொன்னம்பலம், சி.சுந்தரலிங்கம், சிற்றம்பலம் ஆகியோரைத் தனது அமைச்சரவையில் இணைத்துக்கொண்டார்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவால், ஜி.ஜிக்கு கைத் தொழில் மந்திரி பதவி வழங்கப்பட்டது. ஜி.ஜி. கைத்தொழிலமைச்சராக இருந்தபோது

ந.பரமேஸ்வரன்

உரு வாக்கப்பட்டவைதான் காங்கேசன் சிமெந்து ஆலை, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை காகித ஆலை என்பன. இதன்பின்னர் வடக்கு, கிழக்கில் எந்தவொரு தொழிற்சாலையையும் ஆரம்பிக்கவில்லை இலங்கை அரசு. தமிழ்ப் பிரதேசங்களில் மூன்று தொழிற்சாலைகள் உருவாகக் காரணமாயிருந்தவர் ஜி.ஜி. என்று அவரின் ஆதரவாளர்கள் பெருமையாகக் கூறுவர்.

சிமெந்துத் தொழிற்சாலை திறப்பு விழாவில் உரையாற்றிய ஜி.ஜி., ''இனிமேல் சிங்களவன் வீடு கட்டுவதாயிருந்தாலும் இங்கிருந்துதான் சிமெந்து போக வேண்டும்'' என தனது சிம்மக்குரலில் கர்ச்சித்தாராம். திறப்பு விழாவுக்கு வருகை தந்தவர்களும், ஜி.ஜி.யின் பேச்சை கைதட்டி ஆரவாரம் செய்து வரவேற்றனராம்.

உண்மைதான். தென்னிலங்கையில் கட்டடம் கட்டு வதற்கும் காங்கேசன் சிமெந்தே பயன்படுத்தப்பட்டது. யாரும் மறுக்கவில்லை. காங்கேசன் சிமெந்து எவ்வாறு தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டது என்றால் வலிகாமம் வடக்கின் செழுமைமிக்க மண் அகழ்ந்து எடுக்கப்பட்டு சிமெந்து ஆலையில் அரைக்கப்பட்டு [சிமெந்தாகமாற்றி] அனுப்பப்பட்டது.

உலகிலேயே இரண்டாவது பெரிய சிமெந்து ஆலை என வர்ணிக்கப்படும் காங்கேசன் சிமெந்து ஆலையை, டி.எஸ்.சேனநாயக்கா ஒன்றும் தமிழர்களில் இரக்கப்பட்டு காங்கேசந்துறையில் அமைக்கவில்லை.

சிமெந்து உற் பத்தி செய்வதற்கு உகந்த மண் [மூலப் பொருள்] யாழ்ப்பாணத்தில் இருந்தகாரணத்தினாலேயே காங்கேசன் துறையில் சிமெந்து ஆலை உருவாக்கப்பட்டது.

1921ஆம் ஆண்டு பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலேய அரசு யாழ்ப்பாண மண்ணின் மாதிரியை லண்டனுக்கு அனுப்பி வைத்தது. லண்டனில் யாழ்ப்பாண மண்ணைப் பரிசோதனை செய்த மண்ணியல் நிபுணர்கள் ''இந்த மண் சிமெந்து உற்பத்தி செய்வதற்கு அற்புத மான மண்'' என அபிப்பிராயம் தெரிவித்தனர். இதன் காரணமாகவே யாழ்ப்பாணத்தில் சிமெந்து ஆலை கட்டப்பட்டது. யாழ்ப்பாண மண் சிமெந்து உற்பத்தி செய்வதற்கு அற்புதமான மண் என லண்டனிலுள்ள மண்ணியல் நிபுணர்கள் தெரிவித்த செய்தி 1921ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளிவந்த 'உதய தாரகை' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது.

2,500 குடும்பங்களுக்கு வாழ்வளித்தது உண்மையே

காங்கேசன் சிமெந்து ஆலையும், லங்கா சிமெந்து லிமிட்டெட்டும் சுமார் இரண்டாயிரத்து ஐநூறு வரையான குடும்பங்களுக்கு வாழ் வளித்தன.

தற்போது யாழ்ப் பாணத்தில் ஒரு பைக்கற் சிமெந்து 3600 ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. காங்கேசன் சிமெந்து ஆலை மறுபடியும் இயங்கத் தொடங்கினால் யாழ்ப்பாணத்தில் காணப்படும் சிமெந்துத் தட்டுப்பாடு நீங்கிவிடும் என பலரும் கருதுகின்றனர்.

உண்மைதான். காங்கேசன் சிமெந்து ஆலை மறுபடியும் இயங்கத் தொடங்கினால் யாழ்ப்பாணத்தில் நிலவும் சிமெந்துத் தட்டுப்பாடு நீங்கிவிடும். ஆனால் சிமெந்து ஆலையை மறுபடியும் ஆரம்பிப்பதால் ஏற்படப்போகும் ஆபத்தைப் பற்றியும் சிறிது சிந்திக்கவேண்டும்.

காணிகள் சுவீகரிக்கப்பட்டு சுண்ணாம்புக்கல் அகழப்பட்டது

சிமெந்து ஆலை ஆரம்பிக்கப்பட்டபோது சிமெந்து தயாரிப்பதற்கான பிரதான மூலப் பொருளான சுண்ணாம்புக்கல் எடுப்பதற்காக சிமெந்து ஆலையின் மேற்குப் புறமாக இருந்த காணிகள் சிமெந்து கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்டன. இங்கு வாழ்ந்த மக்களுக்கு அயல் கிராமமான கீரிமலையில் காணிகள் வழங்கப்பட்டன.

சுவர் இருந்தால் மட்டுமே சித்திரம் தீட்டலாம்...

போயிட்டி என்ற கிராமம் சிமெந்துக் கூட்டுத்தாபனத்தால் முற்றாகச் சுவீகரிக்கப்பட்டது. காணிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பாதவர்கள் நட்ட ஈட்டைப் பெற்றுக்கொண்டனர்.

1990ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுமார் ஆறு சதுரகிலோ மீற்றர் பரப்பளவு நிலம் சிமெந்து ஆலையால் தோண்டியெடுக்கப்பட்டுவிட்டது. இப்பிரதேசம் கற்குழி [Quarry] என அழைக்கப்படுகிறது. போயிட்டிக்கிராமம் இருந்த இடமே தெரியாமல் மறைந்து விட்டது.

1990ஆம் ஆண்டு வரை கலட்டிக் கிராமத்தின் ஒரு பகுதியையும் சிமெந்து ஆலை விழுங்கி ஏப்பமிட்டுவிட்டது. நல்லவேளையாக வலிகாமம் வடக்கு இடம்பெயர்வுடன் சிமெந்து ஆலை மூடப்பட்டுவிட்டது.

இங்கே ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் உற்பத்தித்திறன் [அளவு] காங்கேசன் சிமெந்து ஆலை [illegible] இரு மடங்கு. லங்கா [illegible] பிக்கப்பட்டு சிறிது காலத்தில் சிமெந்து ஆலை மூடப்பட்டுவிட்டது.

காங்கேசன் சிமெந்து ஆலை தொடர்ந்து இயங்கியிருந்தால் கடந்த பதினெட்டு ஆண்டுகளில் பன்னாலை, அளவெட்டி போன்ற கிராமங்கள் வரையிலான பிரதேசம் நிச்சயமாகத் தோண்டப்பட்டிருக்கும். கலட்டி, [கலட்டியின் ஒரு பகுதி ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டுவிட்டது] கிளானை, கடைச்சப்பை, சீர்காவலை, தையிட்டிப்புலம், பொற்கலந்தம்பை, விழிசிட்டி, கொல்லங்கலட்டி, பன்னாலை, கருகம்பனை போன்ற பிரதேசங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டிருக்கும். சிமெந்து ஆலை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் [1952ஆம் ஆண்டு என ஞாபகம்] 1990ஆம் ஆண்டு வரை ஆறு சதுரகிலோமீற்றர் சுற்றளவு நாற்பது அடி ஆழத்திற்கு அகழ்ந்து எடுக்கப்பட்டுவிட்டது. ஒருடிப்பர் மண்ணை நிரப்பிக் கொண்டு செல்ல மற்றைய டிப் பர் மண் நிரப்புவதற்குச் சென்று கொண்டிருக்கும். கீரிமலைக்கு 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் சென்று வந்தவர்கள் அவதானித்திருப்பார்கள்.

வலிகாமம்

ஆலை தொடர்ந்து இயங்கியிருந்தால்..

சிமெந்து ஆலை தொடர்ந்து இயங்கியிருந்தால் கடந்த பதினெட்டு ஆண்டுகளில் சுமார் ஒன்பது சதுரகிலோமீற்றர் பரப்பளவு மேலும் தோண்டப்பட்டிருக்கும். சுமார் பதினைந்து கிலோமீற்றர் பரப்பளவு இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கும். கட்டடம் கட்டுவதற்கு கல் தேவை. தற்போது மண் கும்பானிலும் மணற்காட்டிலும் கடலன்னை மண்ணைத் தாராளமாக வழங்கியபோதும் மண்ணுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இனி கல்லுக்கும் தட்டுப்பாடு ஏற்படலாம். சிமெந்து ஆலை இயங்கத் தொடங்கினால் நிச்சயம் கல்லுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

கல், மண் இரண்டையும் விட குடியிருப்பதற்கு நிலம் தேவை. 'சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்' என்று தமிழில் ஒரு மரபுத்தொடர் உள்ளது. வலி.வடக்கு மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படுகிறார்களா இல்லையா என்பது வேறுவிடயம். வலி.வடக்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுகிறார்கள் [illegible] அவர்கள் தமது இடங்களுக்குச் சென்று ''குந்தியிருக்க ஓர் இடம்வேண்டும்''.

சம்பூரிலிருந்த தமிழர்கள் விரட்டியடிக்கப்பட்டுவிட்டனர். இனி சம்பூரில் அனல் மின் நிலையம் அமைப்பதில் அரசுக்கு எந்த விதமான தடையும் இருக்கமாட்டாது. இதேபோல் வலி.வடக்கு மக்களும் ஏற்கனவே விரட்டப்பட்டுவிட்டனர். சிமெந்து ஆலையை மறுபடியும் இயங்கச் செய்வதன் மூலம் யாழ்ப்பாணத் தமிழர்களையும் பிச்சைக்காரராக்கி விடுவதே மகிந்த சிந்தனையின் நோக்கம். கொழும்பு பெரியாஸ்பத்திரி வாசலிலும், கொழும்பில் தமிழர்கள் அதிகமாகப் பிரயாணம் செய்யும் பஸ்களிலும் திருகோணமலைத் தமிழர்கள் சிலர் பிச்சை யெடுத்து வருகின்றனர்.

2500 குடும்பங்களுக்கு வாழ்வளித்தது உண்மைதான்

எனவே சிமெந்து ஆலை எனும் ''பூதத்தை'' விரட்டுவதற்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். சார்க் மாநாட்டிற்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா காங்கேசன் சிமெந்து ஆலையில் கல் தோண்டக்கூடாது என கடிதம் ஒன்றைக் கையளித்ததாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது.

தமிழ் அரசியல்வாதிகள் ஒன்றுபடுவதென்பது மேற்கே சூரியன் உதித்தாலும் நடக்காத விடயம் என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். சிமெந்து ஆலை விடயத்தில் சகல தமிழ்தரப்புகளும் தனித்தனியாகவாவது தமது எதிர்ப்பைக் காட்டவேண்டும்.

பல கிராமங்கள் விழுங்கப்படும் அபாயம் குறித்துச் சிந்திக்கவேண்டிய வேளை இது...

காணிகள் சுவீகரிக்கப்பட்டு சுண்ணாம்புக்கல் அகழப்பட்டது

சிமெந்து ஆலை ஆரம்பிக்கப்பட்டபோது சிமெந்து தயாரிப்பதற்கான பிரதான மூலப் பொருளான சுண்ணாம்புக்கல் எடுப்பதற்காக சிமெந்து ஆலையின் மேற்குப் புறமாக இருந்த காணிகள் சிமெந்து கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்டன. இங்கு வாழ்ந்த மக்களுக்கு அயல் கிராமமான கீரிமலையில் காணிகள் வழங்கப்பட்டன.

சிமெந்து ஆலை என்ற போர்வையிலே...

யாழ்ப்பாணத்தை விழுங்குவதற்கு சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கும் தரப்புகளை தென்னிலங்கைக்கு விரட்ட யாழ்ப்பாண மக்கள் அனைவரும் முன்வந்து ஒன்றிணைய வேண்டும். பிர்லா நிறுவனத்தின் தோண்டும் வேகம், நிச்சயமாக காங்கேசன் சிமெந்து ஆலையின் தோண்டும் வேகத்தை விட அதிகமாகவே இருக்கும்.

குசேலனில் அரசியல் வசனங்கள் ரஜினியின் உத்தரவையடுத்து நீக்கம்

சென்னை, ஓக.17

குசேலன் படத்தில் ரஜினிகாந்தும், ஆர். சுந்தர்ராஜனும் 'அரசியல்' பற்றி பேசுவது போன்ற வசனக் காட்சி ரசிகர்கள் மனதைப் புண்படுத்தியதால், படத்தில் இருந்து அந்தக் காட்சியை நீக்கும்படி ரஜினிகாந்த் கேட்டுக்கொண்டார். அதன்படி, அந்த வசனக் காட்சி நீக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரஜினிகாந்த் நடித்து சமீபத்தில் திரைக்கு வந்த 'குசேலன்' படத்தில், ரஜினிகாந்தின் அரசியல் பிரவேசம் பற்றி ஆர்.சுந்தர்ராஜன் கேள்வி கேட்பது போலவும், அதற்கு ரஜினிகாந்த் பதிலளிப்பது போலவும் ஒரு காட்சி இடம்பெற்றிருந்தது.

''அரசியலுக்கு வருவீர்களா, மாட்டீர்களா என்று கேட்டால், எப்ப வருவேன் .... எப்படி வருவேன்னு தெரியாது'' என்று சொல்லி குழப்புறீங்க.

''அரசியலுக்கு வருவீர்களா, மாட்டீர்களா'' என்று ஆர்.சுந்தர்ராஜன் கேட்பார். அதற்கு ரஜினி, ''சினிமாவில் எழுதிக் கொடுத்த வசனத்தை பேசினேன். அதை நீங்க சீரியஸா எடுத்துக்கிட்டா நான் என்ன செய்வது'' என்று பதிலளிப்பார்.

இந்த வசனம் ரஜினியின் ரசிகர்கள் மனதைப் புண்படுத்தியதாக ரஜினிக்கும், ரசிகர் மன்ற தலைமைக்கும் ஏராளமான கடிதங்கள் [illegible] ரசிகர்களுக்குச் சொல்லும் [illegible] அமைந்திருப்பதாகக் கடிதங்களில் ஆதங்கப்பட்டிருந்தனர்.

அதைத் தொடர்ந்து, 'குசேலன்' படத்தில் இருந்து அந்த வசனக் காட்சியை நீக்கும்படி ரஜினிகாந்த், இயக்குநர் பி.வாசுவிடம் கேட்டுக்கொண்டார். அதன்படி, அந்த வசனக் காட்சி எல்லா தியேட்டர்களிலும் நீக்கப்பட்டது.

இதுபற்றி ரஜினிகாந்த் ரசிகர் மன்ற சென்னை மாவட்ட நிர்வாகிகள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

''சூப்பர் ஸ்டார் ரஜினி நடித்த குசேலன் திரைப்படத்தில் ஆர். சுந்தர்ராஜன் கேட்கும் அரசியல் சம்பந்தப்பட்ட கேள்விகளும், அதற்கு ரஜினி அளிக்கும் பதில்களும் ரசிகர்களின் மனதைப் புண்படுத்தின.

மற்றவர்களின் கேலிக்கு ரசிகர்கள் ஆளாகியதால் எங்களின் கருத்தை தலைமையிடம் தெரிவித்தோம். உடனே ரஜினி, இயக்குநர் பி.வாசுவிடம் தொடர்புகொண்டு ரசிகர்களின் மனதைப் புண்படுத்திய காட்சியையும், வசனத்தையும் நீக்கும்படி கேட்டுக்கொண்டார்.

ரஜினியின் ரசிகர்கள் படத்தைப் பார்க்கவில்லை என்று வதந்தி பரவியிருக்கிறது. அது உண்மையல்ல. நாங்கள், எங்கள் தலைவர் படத்தை எப்படி பார்க்காமல் இருப்போம்? - என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச பயங்கரவாதத்தால் ஜே.வி.பியை அடிபணிய வைக்க ஒருபோதும் முடியாது

பிரசாரச் செயலர் விஜித ஹேரத் உறுதி

"அரச பயங்கரவாதத்தால் ஜே.வி.பி.யினை அடிபணிய வைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. அரசு மறுபிறவி எடுத்தாலும் ஜே.வி. பியை அடிபணிய வைக்கமுடியாது. எத்தகைய அழுத்தங் களையும் முறிய டிக்கும் வல்லமை எமக்குள்ளது" - இவ்வாறு ஜே.வி.பி.யின் பிரசாரச் செய லாளரும் கம்பஹா மாவட்ட எம்.பியுமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்கு இன்னும் சில தினங்களே எஞ்சியிருக்கின்றன. இந்நிலையில் தேர்தல் நிலைவரங்கள் குறித்து அவரிடம் கேட்டபோதே விஜித்த ஹேரத் எம்.பி இதனைத் தெரிவித்தார் என இணையத்தளத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு: ஜே.விபியின் பிரசாரங்கள் அரசிற்கு நன்றாகவே வலிக்கின்றது. நாம் அரசை பெரும் தலையிடிக்குள்ளாக்கியுள்ளோம். இதனாலேயே எம்மீது தாக்குதல் நடத்தப்படுகின்றது. அந்தத் தலையிடி 24 ஆம் திகதி பேரிடியாக மாறும். ஜே.வி.பி. ஜனநாயகத்தை விரும்புகின்றது. அதற்கமைவாகவே நடந்தும் கொள்கின்றது. ஆனால், அரசின் ஊழல் மோசடிகள் தழைத்தோங்கியுள்ளன. பொதுமக்களிடமிருந்து பெறப்படுகின்ற வரிகள் வெளிநாட்டுக் கடன்கள் என அனைத்து நிதிகளும் மோசடிக்குள்ளாக்கப்படுகின்றன.

இதனை நாம் தடுத்து நிறுத்துவோம் - என்றார்.

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
கந்தவனம் தர்ஷிகா
(மானனி - கொக்குவில் இந்துக் கல்லூரி)

சிந்தாமணி விநாயகர் அருளியது 25.05.1990 — சிந்தாமணி விநாயகர் கழல்சேர்ந்தது 23.08.2002

திதி:17.08.2008

கந்தவனம் மனையில்
களித்தாறி மீண்டென்கால்
வந்திடுவாய் என்றேதான்
வரத்தந்தனுப்பினரோ?
சிந்தாமணி கஜனார்
செல்வி தர்ஷிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழி அம்மா!

அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

'கவி போட்டோ' நவாலி தெற்கு. (77192)

திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன் முறை யைத் தெரிந்திடத் திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த சுயதெரிவு முறை முன்னோடி தனிமனித நிறுவுநர் சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழுவேல் அமுதனுடன் தொடர்பு கொள்ளுக! தொலைபேசி: 2360488, 2360694, 4873929

மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (வயது 38), அரச நிர்வாகத்தில் உயர்பதவி வகிக்கும் பட்டதாரி நிர்வாகிக்கு (கி.பாவம் - 38, நட்சத்திரம் - மூலம், தனுராசி, செவ்வாய் அற்ற), அழகான அரச உத்தியோகம் பார்க்கும் (வங்கி, ஆசிரியர், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் மற்றும் அரச அலுவலர்கள்) 28-35 வயதுக்கும் இடைப்பட்ட மணமகள் தேவை. ஜாதகம், படம், விவரம், TP அனைத்து விவரங்களுடன் உடன் தொடர்புகொள்ளவும்

விளம்பர இல: 3127, மே/பா உதயன்.

ஆலய பராமரிப்பாளர் தேவை

சாவகச்சேரி, வாரிவளவு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தைச் சுத்திகரித்து பராமரிப்பதற்கு இந்து சமயத்தைச் சேர்ந்தவர் உடன் தேவை. தென்மராட்சியை வசிப்பிடமாகக் கொண்டவர் விரும்பத்தக்கது. விரும்புவர்கள் இன்று (17.08.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் வாரிவளவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய காரியாலயத்திற்கு நேரில் வரவும்.

ஆலயத் திருப்பணியாளர்
(V.சிவராசா).
T.P.0777768835
(77239)

கோழிக்குஞ்சு விநியோகம்

Prima சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 18.08.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
- மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
- P.ரவி - சாவகச்சேரி.
- சிற்றிபாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு.

(77209)

கூத்துமாலை ஓடை ஸ்ரீ பால விநாயகர் தேவஸ்தானம்

புனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்சகுண்ட பக்ஷ பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேகம்

ஆவணி மாதம் 02 ஆம் நாள் (18.08.2008) திங்கட்கிழமை அதிகாலை கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பம்.

ஆவணி மாதம் 04 ஆம் நாள் (20.08.2008) புதன்கிழமை மாலை 2.30 மணிக்கு மகாயாகாரம்பம்.

ஆவணி மாதம் 05 ஆம் நாள் (21.08.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் பி.ப. 3 மணிவரை பக்தர்கள் "எண்ணெய்க்காப்பு சாத்துதல்"

ஆவணி மாதம் 06 ஆம் நாள் (22.08.2008) வெள்ளிக்கிழமை காலை 6.05 மணிமுதல் 7.45 மணிவரை "மகா கும்பாபிஷேகம்"

அதனைத் தொடர்ந்து 10 நாள்கள் அலங்கார உற்சவம் இடம்பெறும்.

ஆலய பிரதம குரு: பிரம்மஸ்ரீ பி.முத்துக்குமாரசர்மா இளவாலை.

கும்பாபிஷேக பிரதமகுரு: இராம.பாலச்சந்திரக் குருக்கள் (ஆனை விழுந்தான் பிள்ளையார் ஆலய ஆதீன குரு)

(77236) ஆலய பரிபாலன சபையினர்.

மரண அறிவித்தல்

மகாலிங்கம் மகாராஜா (அப்பன்)

[பழைய மாணவன், கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்]

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் வத்தளை, மாபொலவை வதிவிடமாகவும் கொண்ட மகாலிங்கம் மகாராஜா (12.08.2008) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் மகாலிங்கம்- தருமபூபதி தம்பதியினரின் அன்பு மகனும் சிவஞானசுந்தரம் (அப்புலிங்கம்- உரிமையாளர், பட்டப்பிளை மெற்றல் அலுமினியம் இன்டஸ்ரீட், மாபொல, அக்ஷரா றேடிங் சென்ரர், கொழும்பு, கிரித்திகா என்டப்பிறைஸ், யாழ்ப்பாணம்), விஜயகுமார் (சுவிஸ்) விஜயலட்சுமி(ஜேர்மனி), பிரபாகரன் (லண்டன்), ஜெகதீஸ்வரி, சந்திரகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சங்கீதா(சுவிஸ்), குணபாலசிங்கம்(ஜேர்மனி), தேவிகா, முருகையா, தவபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுவிற்ஸர்லாந்தைச் சேர்ந்த பிரவீனா, பிரசன்னா, பிருந்தா, பிரியன், மற்றும் தஷாங்கன், கிருத்திகா ஆகியோரின் சிறிய தகப்பனும், ஜேர் மனியைச் சேர்ந்த பிரவீன், பிரதீபன், ஜீவதன் மற்றும் லோகனா, சர்மிலா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2008) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நாககொட, கந்தானையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு.ஜெகதீஸ்வரி(சகோதரி),
இலங்கை வங்கி வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

தகவல்:
அப்புலிங்கம்(சகோதரன்),
52/3, ஆனியகந்த வீதி,
நாகொடை, கந்தானை.
T.P: 077 4542223
T.P: 0112230940

(77258)

A LIFE - TIME CHANCE

STUDY MEDICINE IN EASTERN EUROPE (BELARUS)

பெலாரசுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ள 06 ஆவது மாணவர் அணி

அல்பீரட் காயத்திரி - வவுனியா.	அப்துல்காதர் முஸ்ஹத் அமீன் வேந்தபுலம்- வவுனியா.	சுபாஸ்கர் ஜெயநாதன் - தெல்லிவளை.	யோகேந்திரா அரிஜனன்- வெள்ளவத்தை.	அலோஷியஸ் சரிதாகலா ரூபாவி கொழும்பு.
செகராசசிங்கம் காவுன் - கொட்டாஞ்சேனை.	ஈஸ்வரநாதன் முகுந்தன் - மட்டக்களப்பு.	சிவலிங்கம் நிதர்சன் - வவுனியா.	கிருஷ்ணபிள்ளை சந்துரு - மட்டக்களப்பு.	சண்முகநாதன் சதானந்த் - யாழ்ப்பாணம்.

பொறியியல் (IT) ஏனைய கற்கைகளும் உண்டு எந்தவொரு கற்கை நெறிக்கும் குறைந்தமட்ட தேவை ஜி.சி.ஈ. (சா/த) ஆகும்.

இன்றே விண்ணப்பித்து 20 நாள்களில் விமானத்தில் புறப்படுங்கள்

வங்கி அறிக்கைகள், விசா நேர்காணல், அனுசரணையாளர்கள் - தேவையில்லை. விசா 100% உத்தரவாதம்

2008 அனுமதிக்கான இறுதிநாள் - ஒகஸ்ட் 25 ஆம் திகதி, உ/த மாணவர்கள் அதிபரின் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்.

கடந்த 2 ஆண்டுகளில் சென்றுள்ள 200 மாணவர்களின் விவரப் பட்டியல் எமது அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

சிறிலங்கா மருத்துவ சபையினாலும் உலகில் வேறு 70 இற்கு மேற்பட்ட நாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்டது.

மருத்துவ கலாநிதி - MD (ஆங்கில மூலம் 6 வருடம்)

அனுமதிபெற தொடர்புகளுக்கு: 0773017883 (ஆங்கிலம் & தமிழ்)

Colombo Ads: 077 244 24 25 - Uldam

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

Head Office
37, School Lane, Colombo - 03.
Tel : 2502012

Overseas Student Placement Department
111- 1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06.
Tel : 2586418

IELTS/TOEFL Guaranteed Marks @ PATHE

www.patheacademy.org

பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே! G.S.லிங்கநாதன் அன்கோஸ்தாபனம்



நேரடியாகத் தருவிக்கப்பட்ட புத்தம் புதிய சாரிவகைகள், திருமணப் பட்டுப் புடைவைகள் (வித்தியாசமான தெரிவுகள்) விற்பனைக்கு வந்துள்ளன என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்குப் பெரு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

தெரிவுக்கு முந்துங்கள்

★ நவீனரக புதிய புடைவைத் தெரிவுகள்,
★ றெடிமேட் ஆடைவகைகள்,

உங்கள் மகிழ்ச்சியே எங்கள் திருப்தி

பான்சி ரகங்கள், பெடிங் கிவிற்ஸ், சூட்கேஸ் வகைகள், பேபி நீட்ஸ், ரெனிபோம் எழுத்துக்களும், வாழ்த்துகளும், பூ மாலைகள் அனைத்துப் பான்சி ரகங்களும் பெற்றுக்கொள்ள G.S.லிங்கநாதனின் 3 ஆம் மாடி

சிறுவர் முதல் பெரியோர் வரை அனைத்தையும் ஒரே இடத்தில் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

★ சிறுவர் சிறுமிகளுக்கு அன்பளிப்புப் பொருள்கள் இனாமாக வழங்கப்படுகிறது.

புதிய சாரிகள்

1.Aswini	அஸ்வினி	19.Nepaly Silk	நேபாளி சில்க்
2.Silver Touch	சில்வர் ரச்	20.Jamasim	யனசின்
3.Muniaandy	முனியாண்டி	21.Villu Saree	வில்லு சாறி
4.Anna-Tangi	அண்ணா தங்கை	22.Mecna Silk	மேக்னா சில்க்
5.Vinay Silk	சில்க் வினே	23.Sofia Saree	சேபியா சாறி
6.Piriyanka-Saree	பிரியங்கா சாறி	24.Tulsi Silk	துல்சி சில்க்
7.Kirazy Silk	கிரேசி சில்க்	25.Varsaw Silk	வர்சோ சில்க்
8.Kofi Saree	கோபி சாறி	26.Nelco Saree	நெல்கோ சாறி
9.Raj-Guru	ராஜ் குரு	27.Gawdwal Saree	கோட் வால் சாறி
10.Kuruvvi	குருவி	28.Robo Silk	ரோபோ சில்க்
11.Kuselan	குசேலன்	29.Marma Yogi	மர்ம யோகி
12.Kalpana	கல்பனா சாறி	30.Yarady Nee Mohini	யாரடி நீ மோகினி
13.Luxary silk	லக்ஸ்சரி சில்க்	31.Susmita	சுஸ்மிற்றா
14.Pandy Saree	பாண்டி சாறி	32.Just Marriage	யஸ்ற் மறீச்
15.Henstar Saree	கென்ஸ்ரார் சாறி	33.Sindoor	சிந்தூர்
16.Kalyani Cotton	கல்யாணி கொட்டன்	34.Gold Glass	கோல்ட் கிலாஸ்
17.Thasavatharam	தசாவதாரம்	35.Kolkatta	கொல்கத்தா
18.Namitha Silk	நமிதா சில்க்		

அரவிந் மில் - மணிஸ்ஸா ரெறின் 1 மீற்றர் - 225/=
அரவிந் மில் - சகோறி ரெறின் 1 மீற்றர் -275/=
புத்தம்புதிய சுரிதார் தெரிவுகளை திருப்தியாகப் பார்த்து எடுத்துக்கொள்ள ....

G.S.லிங்கநாதன் அன்கோ

சாறித் தெரிவுகளுக்கு:- இல.13,14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

ஏனைய தெரிவுகளுக்கு:- இல.47, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(வி/553995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நாகரிகம் ஓர் இக்கட்டான நெருக்கடியைக் கடந்து போய்க்கொண்டிருக்கிறது

மனித நாகரிகம் எதை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதைப் பற்றி 20 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் தத்துவ மேதை அமரர் எஸ்.ராதா கிருஷ்ணன் எழுதிய கட்டுரையிலிருந்து ஒருபகுதி இங்கு தரப்படுகிறது. 1929 ஆம் ஆண்டு வெளியான "கல்கி அல்லது நாகரிகத்தின் எதிர்காலம்" என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்ட இக் கட்டுரையின் கருத்துக்கள் இன்றைய நிலைமைக்கும் பொருத்தமாக இருப்பதைக் காணலாம்.

மனித நாகரிகம் காலத்துக்குக் காலம் எதிர்நோக்கும் அதன் நெருக்கடிகளை இன்று கடந்து போய்க் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. உலகம் தனது பழைய மேலாடைகளைக் களைந்துகொண்டிருக்கின்றது.

தரங்கள், நோக்கங்கள், நிறுவனங்கள் ஒரு தலைமுறைக்கு முந்தினவையாக இருந்த போதிலும் சவால்களை எதிர் நோக்கி நிற்கின்றன-மாற்றமுறுகின்றன. பழைய உந்து சக்திகள் பலவீனமுற்று புதிய சக்திகள் முளைவிடுகின்றன.

இந்த சகாப்தத்தின் போக்குக் குறித்த உள்ளார்ந்தம் தெரிந்த எவரும் அதன் அமைதியின்மை, உறுதியின்மை பற்றியும் இன்றைய பொருளாதார சமுதாய நிலைமைகளில் ஏற்பட்டுள்ள திருப்தியின்மை மற்றும் இன்னமும் அடையப்படாமலிருக்கும் புதிய ஒழுங்கமைப்புக்கான ஏக்கங்கள் பற்றியும் விரிவாகவே அறிந்து வைத்திருக்கிறார்கள். இந்த எல்லா வித அறிவுக் குழப்பங்களும் எதனைக் காட்டி நிற்கின்றனவென்றால், மனிதஇனமானது தனது முன்நோக்கிய நகர்வில் புதிய அடியொன்றை எடுத்துவைக்கத் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதையே.

விஞ்ஞான வேகத்திற்கு மனிதன்ஈடுகொடுக்க முடியாமலிருக்கிறான்

இந்த இயல்பின்மைக்கான முக்கிய காரணியாக அமைவது நவீன விஞ்ஞானமே. எமது நாகரிகத்துக்கு விஞ்ஞானம் விசித்திரமானவொன்றல்ல என்றாலும் அதன் வளர்ச்சிவேகம் பிற்காலத்தில் அதிகரித்துவிட்டது. அதன் எல்லை மிக விசாலமானதாகவும் ஆழமானதாகவும் இருப்பதால் விரைவாக நம்மை அதற்கேற்ப ஈடுபடுத்திக் கொள்ள முடியாமலிருக்கிறது.

ஒருமிருகத்தை அதன் வழமையான சூழலில் இருந்து அப்புறப்படுத்தி வேறொரு சூழலுக்குள் விடுவோமானால் அது அமைதியை இழந்துவிடும்; புதிய சூழலுக்கேற்ப தன்னை அது சுதாகரித்துக் கொள்ளும் வரை இந்த நிலை நீடிக்கும்.

பேராயர் 'றிப்பொன்' குறுகிய கால விஞ்ஞான விடுமுறையொன்று வழங்கப்பட வேண்டும் என்று கூறியதன் கருத்து என்னவென்றால், விஞ்ஞானமானது புதிய கண்டுபிடிப்புக்களை வேகமாக வழங்கிக்கொண்டு முன்னேறிக் கொண்டிருக்கும் அதேவேளை அதனைப் பயன்படுதுகின்ற மனிதனோவெனில் அதே வேகத்தில் தன்னை புதுப்பித்துக் கொள்கிறானில்லையென்பதே.

உலகமானது புறநிலையில் ஒருமைப்பாடடைந்து வருகின்றது. ஐரோப்பாவும் அமெரிக்காவும் மற்றும் ஆசிய ஆபிரிக்காவும் கூட அதே திசையில் நகர்ந்து கொண்டிருக்கின்றன. முந்தியவை பிந்தியவையைவிட மிக வேகமாக.

மோட்டார்கார்கள், ஆகாய விமானங்கள் மற்றும் படங்கள்- நவீனத் போன்று கிழக்கும் மேற்கும் அவ்வளவு கூர்மையாகப் பிளவுபட்டிருப்பதாகக் கொள்ள முடியாது.

உலகின் புறநிலை ஒருமைப்பாடு

ஆன்மீக மற்றும் அறிவுசார் உற்பத்திகளை பயனுள்ள விஞ்ஞானங்கள், பொறியியல் நுட்பங்கள், அரசியல் அமைப்புக்கள், சட்டவிதிமுறைகள், நிர்வாக ஏற்பாடுகள் மற்றும் பொருளாதார அமைப்புகள் யாவும்பல்வேறுபண்பாடுகளையும் ஒன்றிணைத்து ஒன்றோடொன்று இணையச் செய்கின்றன. உலகமானது ஒரே நிறுவனம் போன்று செயற்படுவதற்கு முனைந்து வருகின்றது.

எதுவானாலும் இந்த புறநிலை ஒருமைப்பாடானது உள்ளார்ந்த மன மற்றும் ஆன்மீக ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தவில்லை. இப்போது அடைந்துள்ள புதிய நெருக்கமானது, மகிழ்ச்சியை அதிகரிக்கவோ, பிளவுகளை குறைக்கவோ இல்லை. ஏனென்றால் மனதளவிலோ ஆன்மீக அளவிலோ நாம் அந்த சந்திப்புக்கு ஆயத்தமாய் இல்லை.

புறநிலையில் தெரியும் ஒற்றுமை ஆன்மீக நிலையில் தென்படவில்லை

சிந்தனைகள், நம்பிக்கைகள் மற்றும் செயற்பாடுகளில் ஆன்மீக ஒருமைப்பாட்டுக்கான ஆயத்தம் தென்படவில்லை.

சிந்தனையின், நம்பிக்கையின் மற்றும் செயற்பாடுகளின் பாரம்பரிய முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்வது ஆத்மீக ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான அவசிய ஆயத்த நிலையாகும்.

எந்தவித விவாதத்துக்கும் ஒத்துதுவத்தின் முக்கிய மாதிரிகளான இவைகள் மிகப் பின் தங்கிய நாடுகளிலும் காணப்படுகின்றன. சீனாவிலிருந்து மெக்ஸிக்கோ வரையில் முன்னேற்றத்தில் நம்பிக்கை அதிகரித்தே வருகின்றது. இயற்கைச் சக்திகளைக் கட்டுப்படுத்துவது மற்றும் கிடைக்கும் வளங்களின் மீது மனிதன் செலுத்தும் ஆதிக்கம் தொடர்ச்சியாக விரிவடைவதைப் பொறுத்து இந்த முன்னேற்றத்தில் நம்பிக்கை அதிகரிக்கின்றது.

இந்தியாவும் சீனாவும் இந்த சுழற்சிக்குள் ஈர்க்கப்பட்டுவிட்டன. கிழக்கில் தோன்றியுள்ள இந்த அமைதியின்மையானது புதிய உணர்வலையைக் கொண்டுள்ளது. அதாவது; கீழ்த்திசை நாடுகள் அழிந்து ஒழிந்து போகாமலிருக்க வேண்டுமானால் ஏனைய நாடுகளுடன் இணையாக சமாந்தரமாக நிற்பதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதாம். அந்த நாடுகளின் நிறுவனமய உணர்வுகளும் நிறுவனத்துவ சக்திகளும் உலகின் மிகத்தொலைவிலான பகுதிகளிலும் பரவி வியாபித்துள்ளன. அபாய அறிவிப்பாளர்கள் நம்மை அச்சுறுத்துவது

விவசாயிகள் கூட்டமொன்றில் தாம் உரை நிகழ்த்தியதன் பின்னர் விவசாயி ஒருவர் பின்வருமாறு கேள்வி எழுப்பியது பற்றி மாகஸிம் கோர்க்கி விளக்குகிறார்.

"ஆம், பறவைகளைப் போல வானில் பறக்கக் கற்பிக்கப்பட்டுள்ளோம். மீன்களைப் போல நீரில் நீந்தவும் பயிற்றப்பட்டுள்ளோம். ஆனால் பூமியில் எவ்வாறு வாழ்வது என்பது எமக்குத் தெரியவில்லை.

இந்த சிறிய பூமியில் அருகருகே வாழுகின்ற இனங்களுக்கிடையில் மதங்கள், தேசியங்களுக்கிடையில் நல்வாழ்வுக்குத் தேவையான தோழமை உணர்வு காணப்படவில்லை. அவர்கள் ஒருவருக்கொருவர் பகைமைத் தரப்பினராகக் கருதிக் கொள்கிறார்கள். மனித இனம் வெளிப்பார்வைக்கு ஒருமைத்தன்மையைக் காட்டிக் கொண்டாலும் ஒரே உயிரோட்டமான உணர்வினைப் பெற்றிருக்கவில்லை. உலகம் ஒருமனத்துடன் காணப்படவில்லை.

யந்திரசாதன வெற்றிகள் எதிர்கால நாகரிகத்திற்கு பொதுவானதொரு அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ள அதேநேரம் வராதவர்களை விடாகண்டர்களை ஒதுக்கிவிட்டு பார்ப்போமானால் ஒவ்வொரு சரித்திர பூர்வ நாகரிகத்துக்குமுரிய தலைவர்களும், மனித இனமானது அதன் முழுவிரிவாக்கத்திலும் சரித்திர பூர்வமாகவும்ஒருதனித்துவ அமைப்பாகவே உள்ளது என் பதில் ஒருமித்த கருத்தை உடையவர்களாகவே உள்ளனர். மனித இனத்தின் மேன்மையான வளர்ச்சியும் எவராலும் தடுக்க முடியாத வகையில் வளர்ச்சி காணும் போக்கும் பூஜிக்கத் தக்கவையாகவுள்ளன என 'தான்தே' கூறுவார்:

தமிழில்: சீபெரு

இந்த நாகரிகத்துக்கு ஒரு குறிக்கோள் மட்டும் இல்லை. ஆனால் முழு மனித இனத்திற்கும் ஒரு தனிக் குறிக்கோள் இருக்கின்றது என்று.

எல்லா நாகரிகத்துக்கும் ஒரு குறிக்கோள்தான் என்றால், எல்லாரும் ஒரு பொதுமொழியைப் பேசுவார்கள், ஒரே அரசாங்கத்தின் கீழ் வாழ்வார்கள், அல்லது கலாசாரம் பழக்க வழக்கங்களில் மாற்ற முறாத ஒரே முறையைக் கைக் கொள்வார்கள் என்பது அர்த்தமாகாது. நாகரிகத்தின் ஒற்றுமையானது ஒருமைப்பாட்டில் அல்ல இணக்கப்பாட்டில் ஏற்படுவதாகும்.

ஒவ்வொரு மகத்தான கலாசாரமும், பல்வேறு சிந்தனைகள் உணர்வுகளைக் கொண்ட மக்களின் கலப்பு நிலையாகும். இந்த உண்மையை எகிப்தும் பாபிலோனும், இந்தியாவும், சீனாவும், கிரேக்கமும், உரோமானியமும் எடுத்துக்காட்டுவனவாய் உள்ளன. இன்று கலாசார ஒன்று சேர்க்கையில் ஈடுபடுபவர்களின் வட்டமானது அகன்று செல்கின்றது- அனேகமாக முழு உலகையும் உள்ளடக்குவதாகவும் உள்ளது.

எதிர்காலத்திற்கான நம்பிக்கையானது ஒத்துழைப்பில்தான் உள்ளது. இனங்காணுவதிலல்ல. சக மனிதனுக்கும் இடங்கொடுப்பதில் உள்ளது. அவர்களை போலியாகப் பிரதிபண்ணுவதில் அல்ல; சகிப்புத் தன்மையில் உள்ளது. யதேச்சதிகாரத்தில் அல்ல. ★★★★★

நல்லூர்ப் பெருந்திருவிழா பக்திப்பாக்கள்

(ஞாயிற்றுக்கிழமை)

சிறப்புக் குறைவிடமே தேவர் பெரும்!
மறக் குறத்தி வள்ளி மணாள! - நிறக்கொடிகள்
ஆடும் அழகுடைய நல்லூர் வாழ் ஆண்டவனே
நீடும் அருள் தருவாய் நீ.

- யோகர் சுவாமிகள்.

சமாதானத்தை தந்துவிடும் அலங்காரக் கந்தா

ஆறுபடை வீடு கொண்ட அலங்காரக் கந்தா
ஆறுதலைத் தாருமையா அலங்காரக் கந்தா
விறுநடை போடுகின்ற அலங்காரக் கந்தா
வண்ண மயில் மீது ஏறி வரும் அலங்காரக் கந்தா
நல்லையம் பதியில் உறைந்த அலங்காரக் கந்தா
உமை நம்பியோரைக் கைவிடாதீர் அலங்காரக் கந்தா
நாட்டில் யுத்தங்களை அகற்றி விட்டு அலங்காரக் கந்தா
நல்ல சமாதானத்தை தந்து விடும் அலங்காரக் கந்தா

த.சசிகாந்,
(கோக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்)

ஆறுதலைத் தந்திடுவாய்.....

நல்லூரின் நாயகா - வேலவா
வேதனைகள் நீக்கிடுவாய்
சந்நிதியின் சான்றோனே - சண்முகா
சமாதானம் தந்திடுவாய்
தீயினில் தோன்றிய - திருமுருகா
தீமைகள் நீக்கிடுவாய்
சரவணப்பொய்கையில் உதித்தவா - சரவணா
சாந்தியைத் தந்திடுவாய்
ஆறுதலை கொண்டவா - ஆறுமுகா
ஆறுதலைத் தந்திடுவாய்!

அரியாலையூர்
M.S. சூரி

அற்புத வேலவனே.....!

வண்ணமயில் வீற்றிருந்து வரமளிக்கும் வேலவனே
அனைவரையும் அன்புகாட்டி ஆதரிக்கும் வேலவனே
உண்மைதனை அற்புதமாய் உணர்த்துகின்ற வேலவனே
அடியவர் தம் குறைதீர அருள்புரிவாய் வேலவனே

உவகையோடு வரமளிப்பாய் வேலவனே
உன்னதப் பரம்பொருளே கருணை வேலவனே
நல்லூர் நற்பதியிலிருந்து நலம் தரும் வேலவனே
உன்கருணை திண்ணமென உணர்த்திடுவர் வேலவனே

இ.[illegible]
நயினை - 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் இலக்கியங்கள் அவர்களது விருப்பங்களை சார்ந்து நின்று மகிழ்ச்சிப்படுத்த வேண்டும்

அந்தத்துறையில் முத்திரை பதித்த எழுத்தாளர் மயிலங்கூடலூர் நடராசன் சொல்கிறார்

நேர்காணல்: இயல்வாணன்

வலிகாமம் வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் 'அமுங்கிவிட்ட' மயிலங்கூடல் என்ற ஊரில் 14.10.1939 இல் பிறந்த பி.நடராசன் ஆசிரியப் பணியில் ஈடுபட்டு ஓய்வு பெற்றவர். ஈழத்தின் பதிப்பு மற்றும் தொகுப்பு முயற்சிகளில் முக்கியமான பங்களிப்பை வழங்கிய இவர், பல படைப்பாளிகளதும் அறிஞர்களதும் நூல்களை வெளியிடுவதில் தன்னலமற்ற பங்காற்றியவர்.

சிறுவர் இலக்கியத்தில் பெரிதும் ஈடுபாடு காட்டிய இவர் சிறுவர் பாடல்களை ஆக்கியும் மொழியாக்கம் செய்தும் உள்ளார். அத்துடன் இறந்தோர் நினைவாக வெளியிடப்படும் கல்வெட்டுக்களில் சிறுவர் இலக்கியத்தை மலரச் செய்யும் பணியிலும் ஈடுபட்டவர்.

கேள்வி: ஒவ்வொருவரதும் ஆளுமை விருத்தியில் சிறுபராயம் முக்கியமானது. குடும்பத்தினதும், பாடசாலையினதும், சக பாடிகளினதும் செல்வாக்கு சிறுப ராயத்தில் அதிகமுள்ளது. அவ்வகையில் உங் களது சிறு பராய வாழ்க்கை பற்றிக் கூறுங்கள்.

பதில்: நான் யாழ்ப்பாணத்தின் வடக்குப் புறமாகவுள்ள மயிலங்கூடல் என்ற ஊரில் பிறந்தேன். தந்தையார் கொழும்பில் கடை வைத்திருந்தார். ஐந்து பெண்களும் மூன்று ஆண்களுமாக எட்டுப் பிள்ளைகள் கொண்ட குடும்பத்தை அம்மாவே வழிநடத்தினார். நான் சிறுவனாக இருக்கும்போதே தந்தை யார் இறந்து விட்டார். எல்லாச் சுமையை யும் அம்மாவே தாங்க வேண்டியதாயிற்று. பின் னர் பெரியண்ணா குடும்பத்தை வழிநடத் தினார்.

எனக்கு வீட்டில் அம்மாவே கற்பிப்பார். ரியூ சன் என்பது அப்போது இல்லை. எனது ஆரம்

பக் கல்வியை இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், பன்னாலை சேர் கனக சபை வித்தியாசாலை, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி ஆகியவற்றில் பெற் றேன். ஐந்தாம் வகுப்பில் எனக்கு இரட்டை வகுப்பேற்றம் (Double promotion) கிடைத் தது. இடை நிலைக்கல்வியை தெல்லிப் பழை மகாஜனக்கல்லூரியில் பெற்றேன்.

ஹென்றியரசர் கல்லூரியில் படிக்கும் போது எனது சகபாடியாக இருந்தவரது வீட் டில் நிறையப் புத்தகங்கள் இருந்தன. விடு முறை நாள்களில் அங்கு சென்று அவற்றை எடுத்து வாசிப்பேன். எனது வாசிப்பு ஆர்வத் துக்கு முதற்களமாக அமைந்தது நண்பனு டைய வீடுதான்.

கே: பதிப்பு மற்றும் தொகுப்பு முயற்சி களில் ஈடுபட்டுள்ளீர்கள். இதழாசிரியராக, சிறுவர் இலக்கியம் படைப்பவராக பன்முகப் பணியாற்றியுள்ளீர்கள். உங்களது உருவாக்கத் துக்கு உந்து சக்தியாக இருந்தவையென எவற்றைக் கருதுகிறீர்கள்?

ப: குடும்பம், பாடசாலை ஆகிய இரண் டும் எனது உருவாக்கத்துக்கு மூலகாரண மாக இருந்துள்ளன. எனக்குக் கற்பித்த ஆசி ரியர்களை முக்கியமாக குறிப்பிட வேண் டும். நான் மகாஜனக்கல்லூரியில் அறிவி யல் துறையில் ஆங்கில மொழிமூல மாண வனாகப் பயின்றேன். அவ்வேளை தமிழும் சமயமும் தமிழ்மொழியில் கற்பிக்கப்பட்டன. அவற்றைக் கற்பித்த ஆசிரியர்கள் மூலம் எனக்குத் தமிழ்ப் பற்று ஏற்பட்டது. எனது ஆசிரியர் பண்டிதர் செ.கதிரேசர்பிள்ளை அவர் கள் பலவகையிலும் எனக்கு வழிகாட்டியாக இருந்தார். பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி களில் என்னைப் பங்குபற்ற வைத்து அவர் ஊக்கமளித்தார். அதேபோல எனது அயல வரான பண்டிதர் சி.அப்புத்துரை அவர்களும் எனக்குப் பல வழிகளிலும் உதவினார். எனது இளமைக் காலத்தில் நல்ல தமிழ் நூல் களைத் தேர்ந்து படிப்பதற்கு அவர் வழி காட் டினார்.

உயர்தரக் கல்வியை இடையில் நிறுத்த வேண்டியேற்பட்டது. அதன் பின் தமிழ் மீதிருந்த ஆர்வம் காரணமாகப் பண்டிதர் செ.கதி ரேசர் பிள்ளை அவர்களிடமும் விழிசிட்டி யில் பண்டிதர் வே.சங்கரப்பிள்ளை அவர் களிடமும் பயின்றேன்.

அவர்கள் மல்லாகத்தில் நடைபெற்ற பண்டித வகுப்பில் என்னைச் சேர்த்து விட் டனர். அங்கே அமரர் தங்கம்மா அப்பாக் குட்டி, அமரர் பண்டிதர் பொன்னுத்துரை, பண்டிதர் நாகலிங்கம் முதலிய பலரும் எனக் குக் கற்பித்தனர். அங்கே படித்து பாலபண்டித பரீட்சையில் சித்தியடைந்தேன். பண்டித பரீட்சைக்குப் படித்துக் கொண்டிருந்த வேளை வவுனியாவில் ஒரு பாடசாலையை ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனால் பண்டித படிப்பு இடையில் நின்று போனது.

கே: பாடசாலையை எவ்வாறு ஆரம் பித்தீர்கள்?

ப: எனது அக்கா திருமணம் முடித்து வவுனியா இராசேந்திர குளத்தில் வசித்து வந்தார். அக்காவின் கணவரிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. அங்கே ஒரு பாடசா லையை ஆரம்பிக்க முடியுமென்று அவர் தெரி வித்தார். அப்போது பொருத்தமான இடங் களில் பாடசாலைகளை ஆரம்பித்தால் கல் வித் திணைக்களம் அவற்றைப் பொறுப் பேற்கும். நான் வவுனியா சென்று வண் ணான் சின்னக்குளம் என்ற இடத்தில் பாட சாலையை ஆரம்பித்து ஆசிரியராகப் பணி புரிந் தேன். காலப்போக்கில் இரு பெண் ஆசிரி யைகளும் என்னுடன் இணைந்து பணியாற் றினர். இப்பாடசாலை அரசால் பொறுப்பேற் கப்பட்டு வண்ணான் சின்னக்குளம் அரசி னர் தமிழ்க்கலவன் பாடசாலையாக இயங் கியது. அங்கு கற்பிக்கும் போது சிறுவர் பாடல் கள் சிலவற்றை எழுதி மாணவர்களைப் பாட வைத்தேன்.

ஆசிரிய பயிற்சியின் பொருட்டு யாழ்ப் பாணம் வந்து பின்னர் இங்கேயே கற்பித் தேன்.

கே: சிறுவர் கவிதைகள் பலவற்றை எழு தியுள்ளீர்கள். நூல்களையும் வெளியிட்டுள் ளீர்கள். அவற்றை எழுதுவதற்கு உங்களைத் தூண்டியவர்கள் யார்?

ப: உயர்தரப் படிப்பை இடையில் நிறுத் திய பின்னர் சில கவிதைகளை எழுதினேன். அவற்றை எனது குருநாதர் பண்டிதர் செ.கதி ரேசர் பிள்ளையிடம் காண்பித்தேன். அவர் எனக்கு யாப்பிலக்கணம் கற்பித்து வழிகாட் டினார். அதன்பின் நான் கவிதைகளும் சிறு வர் பாடல்களும் எழுதினேன். புகழ்பெற்ற ஆங் கில சிறுவர் பாடல்களையும் மொழியாக்கம் செய்தேன். ஆசிரியராகப் பணியாற்றும்போது சிறுவர் பாடல்களை எழுதவும் அவற்றை மாணவர்களைக் கொண்டு பாடவிக்கவும் சந் தர்ப்பம் கிடைத்தது. ஆடலிறை மழலைப் பாடல்கள், ஆடலிறை சிறுவர் பாடல்கள் என இரு தொகுதிகளை வெளியிட்டுள்ளேன்.

கே: சிறுவர் இலக்கியத்தை நினைவஞ் சலி மலர்களில் இடம்பெறச் செய்யும் பணி யையும் ஆற்றியுள்ளீர்கள். அதற்குத் தூண் டுகோலாக அமைந்தவர்கள் யாவர்?

ப: எனது ஆசிரியர் பண்டிதர் செ.கதி ரேசர்பிள்ளை மகாஜனக் கல்லூரியில் கற் பித்த ஆசிரியர் ஒருவர் இறந்த போது அவரது நினைவாக மகாஜன மைந்தர்களின் குழந் தைப் பாடல்களை வெளியிட்டார். பண்டிதர் சி.அப்புத்துரை தனது சகோதரி இறந்தபோது அவரது நினைவாக 'மழலைச்செல்வம்' என்ற பெயரில் குழந்தைப் பாடல்களைத் தொகுத்து வெளியிட்டார். அவர்களைப் பின்பற்றி நானும் குழந்தைப் பாடல்களைக் நினை வஞ்சலி மலர்களில் வெளியிட்டேன். நினைவு மலர்களில் எழுதித் தருமாறு கேட் பவர்களிடம் குழந்தைப் பாடல்களை வெளி யிடுமாறு சிபாரசு செய்வேன். குழந்தைப் பாடல்கள் சிறுவர்களால் மட்டுமல்ல, பெரியவர்களாலும் ரசித்துப் படிக்கக் கூடியதா கும். ஈழத்துக் குழந்தைக் கவிதைகளை எல்லோருக்கும் அறியச் செய்வதற்கும், அவற்றைப் பயில்வதற்குமான எளிமையான வழியாகக் நினைவுமலர்களைப் பயன்படுத் திக் கொண்டேன். தில்லைச் சிவன், கல்வ யல் வே.குமாரசாமி, மு.பொன்னம்பலம், சபா.ஜெயராசா, குறமகள், புத்தொளி, பா.சத் தியசீலன் எனப்பலரும் இத்தகைய முயற்சி களில் ஈடுபட்டுள்ளனர்.

கே: சிறுவர் இலக்கியம் உளவியல் சார்ந்து அமைய வேண்டுமெனக் கூறப்படுகிறது. அது பற்றிய உங்களது கருத்தென்ன?

ப: ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வாக்குண்டாம், நல் வழி, வெற்றிவேற்கை முத லிய நூல்கள் சிறுவர் இலக்கிய மென்றே கூறப்படுகிறன. எனி னும் இவை சிறுவர் அறிந்த கருத்துக்களை அவர்களது நோக்கில் நின்று கூறவில்லை. எளிமையான சொற்களும் இவற்றில் இல்லை.

சிறுவர் இலக்கியங்கள் சிறுவர் நிலை நின்று அவர்களது தேவைகள், விருப்பங்கள் சார்ந்து அமைய வேண்டும். அவர்களை மகிழ்ச் சிப்படுத்த வேண்டும்.

இன்று அவ்வாறான பாடல்களும், கதை களும், நாடகங்களும் வெளிவந்துள்ளன. ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு நாடாக்கள், இறு வெட்டுக்களிலும் சிறுவர் இலக்கியங்கள் பல வெளிவந்துள்ளன.

1985 இல் நான் ஆசிரியவள நிலையப் பொறுப்பாளராக இருந்த போது யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் சிறுவர் இலக்கியக் கருத் தரங்கொன்றையும் கண்காட்சியையும் ஏற் பாடு செய்தேன். க.பொ.த உயர்தர மாணவிக ளுக்குக் குழந்தைக் கவிதைகள் எழுதும் பயிற் சியும் வழங்கப்பட்டது. இதில் மாணவிகளால் எழுதப்பட்ட குழந்தைக் கவிதைகள் 'பாலர் பா அமுதம்' என்ற பெயரில் வெளியிடப் பட்டது. இன்றைய நிலையில் சிறுவர் இலக் கியம் வளர்ச்சி பெற்றுள்ளது எனலாம். பல ரும் பல சிறுவர் இலக்கிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளனர். (வளரும்)

மண் வாசனையும் மனவேதனையும்

திருகோணமலை மாவட்ட சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையில் மட்டக்களப்பிலுள்ள பல்வேறு நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வரு கின்றனர்.

மட்டக்களப்பு மஞ்சந் தொடுவாய் அகதிமுகாமில் வசிக்கும் இராசையா பத் மநாதன் தனது சொந்த ஊரான சம்பூர் குறித்தும் தற்போதைய அகதி முகாம் வாழ்க்கை குறித்தும் எம்மோடு பகிர்ந்து கொண்ட கருத்துக்களின் தொகுப்பு.

சம்பூர் பெயர்வுக் காரணம்

சகலதும் நிறைந்தது என்பதால் இந்த ஊரை சம்பூர் என்று அனைவரும் அழைக் கின்றனர். இந்தியாவில் இருந்து அங்கு சென்ற புலவர் ஒருவரால் இந்த பெயர் சூட் டப்பட்டதாகவும் சிலர் கூறுகின்றனர். சம் பூரில் பிறக்கின்ற குழந்தைகள் எந்தவித மான குறைபாடுகளுடனும் பிறப்பதில்லை என்றும் அனைவரும் எல்லாம் நிறைந்த வாழ்வை வாழ்ந்து வந்ததாகவும் கூறுப்படு கின்றது.

இன்றைய நிலை

எல்லாம் நிறைந்த ஊரைவிட்டு ஒன் றும் இல்லாதவர்களாய் மக்கள் இன்று அகதி முகாம்களில் வாழ்கின்றனர். வேரோடி விழுதெறிந்து வாழ்ந்த ஊரை இழந்த சோகம் இன்னும் காயாமல் இருக்கின்றது அவர்கள் மனங்களில். தற்போது முகாம் வாழ்க்கையே கசி என்றாகிப் போன நிலை யில் எதிர்காலம் குறித்த ஏக்கங்கள் அவர் கள் மனங்களில் பரவிக்கிடக்கின்றன.

அண்மையில் 25,000 ரூபா நிதி உதவி யுடன் இந்த மக்களை வேறு இடங்களில் குடியேற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது நிறைவேறவில்லை. தாங் கள் ஒரு இலட்சம் தருவதாகவும் தம்மை தமது சொந்த மண்ணில் குடியேற்ற முடி யுமா என்று தாங்கள் அதிகாரிகளை வின வியதாகவும் பத்மநாதன் எம்மிடம் கூறி னார். இது தமது சொந்த மண் மீதான அவர் களின் ஏக்கத்தைப் புரியவைத்தது.

பத்மநாதன் சம்பூரில் வாழ்ந்த போது அவருக்குச் சொந்தமாக 20 ஏக்கர் வயல் நிலமும் நான்கரை ஏக்கர் தென்னந்தோப் புகளும் இருந்துள்ளன. இதனைவிட 180 கால்நடைகளையும் அவர் சொந்தமாகக் கொண் டிருந்ததாகக் குறிப்பிட்டார். இப்போது இவை எவையும் இன்றி அடுத்த வேளை உணவிற்காக மற்றவர்களை எதிர்பார்க் கும் அகதி வாழ்வே தமக்கு வாய்த்திருப் பதாக அவர் கூறும்போது வேதனைப்படத் தான் முடிந்தது எங்களால்.

அகதிமுகாம் வாழ்க்கை

எல்லோருக்கும் எல்லாம் கொடுத்த மண்ணை விட்டு வந்த மக்கள் இன்று அள வுச் சாப்பாட்டிற்கே கையேந்தி நிற்கின்ற அவலம் தொடர்கின்றது. அரிசியும் கோதுமை மாவும் இவர்களுக்கு நிவாரணமாக கிடைக்க சோறும் பிட்டும் மட்டுமே இவர்களின் நிரந்தர உணவுப் பழக்கமாகி விட்டுள்ளது. உணவோடு சேர்த்துண்ண பக்க கறிகள் எவையும் இல்லாமை உணவு மீதான வெறுப்பையும் சலிப்பையும் ஏற்படுத்தி வருவதாக அவர் கூறினார். தினமும் கூலி வேலைக்குச் [illegible] மானத்தைத் தேடு[illegible] ரம் இவர்களை விட்டகலாமல் துரத்துகின் றது. 600 ரூபாவிற்கு ஏனையவர்களுக்குகிடைக் கும் ஒரு நாள் கூலி இவர்கள் அகதிகள் என் பதால் 300 ரூபாவாக குறைக்கப்படுவதா கவும் அதனை இழக்க முடியாதென்பதால் அந்த குறைவான கூலியினையே தாங்கள் பெற்றுவருவதாகவும் பத்மநாதன் தெரிவித்தார்.

குழந்தைகளின் எதிர்காலம்

சிறிய ஊராக இருந்த போதிலும் மருத்து வர்கள், பொறியியலாளர்கள் என கல்வி யில் சிகரம் தொட்ட மனி[illegible]களை கொண்ட ஊராக சம்பூர் திகழ்ந்திருக்கின்றது. ஆனால் இன்று ஊரிழந்து வாழும் தமது குழந்தை களுக்கு உரிய கல்வி வசதிகள் இல்லா திருப்பதாகவும் அவர்களின் எதிர்காலம் குறித்த அச்சம் தமது மக்கள் மத்தியில் பர விக்கிடப்பதாகவும் கூறினார். மற்றையவர் களால் வழங்கப்படும் பாவித்த துணிமணி கள்தான் தற்போது இவர்களுக்கு மானம் காக்கக் கிடைக்கின்றன.

எல்லாம் இழந்த பின்னும் எஞ்சியிருக் கும் நம்பிக்கையோடு நகர்கின்றது இவர் களின் வாழ்க்கைப்படகு, காலம் கரைசேர்க் கும் என்ற கனவோடு.

நன்றி: மீண்டும் வாழ்வோம் (INTER NEWS)

வாழ்வின் வர்ணங்கள்

இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்பவர்கள் அவர்களது ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்வதற்குப் பல்வேறு தொழில்களைச் செய்கின்றனர். சொந்த இடங்களில் மீன்பிடி, விவசாயம் என்பவற்றையே தொழிலாகச் செய்து கொண்டிருந்த போதிலும் கூட தற்போது கூலித் தொழில் களைச் செய்து அவர்களது காலத்தைக் கொண்டு செல் கின்றனர். மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலயத்தில் தற்போது வசித்துவரும் அண்டனி லெனாட் மின்சாரப் பொருள்களைப் பழுதுபார்த்து வருமானத்தை ஈட்டி அவரதும் குடும்பத்தினரதும் தேவைகளைப் பூர்த்தி செய்துவருகிறார். சிப்பிகளைக் கொண்டு பல உருவங் களைச் செய்வதிலும் திறமை கொண்ட இவர் எவ்வாறு அதனைச் செய்யலாம் என்பதை விளக்கிக் கூறினார்.

கொக்கு உருவம் செய்வதென்றால் - நத்தையோடு ஒன்றை எடுத் துப் பின்புறம் இரண்டு ஓட்டைகள் போட்டுக் கால் அமைக்க வேண்டும். அதேபோல் கழுத்தில் ஓட்டை போட்டுக் கழுத் துப் பகுதியைக் கம்பியின் உதவியுடன் செய்யவேண்டும். அதன் பின்னர் [illegible] முழுவதுமாக ஒட்டிப் பலப்படுத்த வேண்டும் என்றார். தலைக்குரிய [illegible] தெரிவுசெய்து அதில் பொருத்தி உருவத்தைத் தயாரிக்க வேண்டும். சொண்டு செய்வதற்கு ஊரி மற்றும் நண்டினுடைய கால்களைப் பயன்படுத்தலாம் - என்றார். ✱

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மான் பாய்ந்த வெளி

(சிறுகதை)

தான் அரைத்த அழகு மஞ்சளை கைகளில் நிறைய அள்ளி அதை இயற்கையன்னையின் உடல் முழுவதிலும் அழகுறப் பூசி மெழுகி அழகிற்கு அழகுசெய்து கொண்டிருந்தான் மாலைக்கதிரவன். வழியை விடுங்கள்.... வழியை விடுங்கள் என்று கெஞ்சிக்கேட்கும் பாவனையில் வெண்டயங்களின் தாளலயத்தோடு பெரிய தம்பியின் இரட்டை மாட்டுவண்டி பருத்தித்துறை வீதியில் ஓடிக் கொண்டிருந்தது. தேசம் பூமி தெரியாத் தண்ணிவெறியோடு நாணயக் கயிற்றைப் பிடித்தபடி வண்டியின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த பெரியதம்பி மாடுகளை உரப்பி அடித்துக் கலைத்துக் கொண்டிருந்தார். இனிமையான மாலைநேரக் காட்சிகளும், மாட்டு வண்டிப் பிரயாணமும், தண்ணிவெறியின் கரை கடந்த உற்சாகமும் பெரியதம்பியை எங்கோ ஒரு உல்லாசபுரிக்கு இழுத்துச் சென்று ஊஞ்சலாட்டுகின்றன. பால்குடித்த பசுக்கன்றுக்குட்டி மாதிரி பெரிய தம்பியின் மனமும் வண்டிக்கு முன்னால் துள்ளித் துள்ளி ஓடிக் கொண்டிருந்தது. பலாலிச் சந்தி கழிகின்றது.

நாளென்ற மரத்தில் பூத்துமலர்ந்த "மாலை" என்ற மலர் கருகி விழுகின்றது. இயற்கை அன்னையின் பரந்த உடலை இருள் மங்கை கறுப்புப் போர்வையினால் நன்றாக மூடுகிறாள்.

"பெரியாம்பியண்ணை..... கொஞ்சம் மாடுகளை தவத்து...." இப்படி வண்டிக்குள்ளிருந்த இராசையா சொன்னதும் "உம்..." என்றபடி பெரியதம்பி நாணயக் கயிற்றை கெட்டியாக இழுத்து தெருவோரமாக வண்டியை நிறுத்துகின்றார். இராசையா வண்டியின் பின்பக்கத்தால் குதித்து வெற்றிலைச் சரை வைத்திருந்த பெரியமடிக்குள் கையை விட்டு நெருப்புப் பெட்டியை எடுத்து ஒரு குச்சியைத் தட்டி வண்டியின் நடுத்துலாவில் ஒரு முடிச்சுக் கயிற்றில் தூங்கிக் கொண்டிருக்கும் லாந்தர் விளக்கை கொளுத்தி விட்டு பின்பக்கத்தால் தாவி வண்டிக்குள் ஏறிக்கொண்டார். பெரியதம்பி நாணயக் கயிற்றை இளக்கிக் கள்ளக்கறுவலையும் கழுகனையும் உரப்பி விட்டார். தனது செந்நிற நாக்கினால் தனது சிறு ஆட்சிக்குட்பட்ட இருளை நக்கி நக்கி எடுத்து அந்த லாந்தர் விளக்கு வண்டியின் வேகமான முன்னேற்றத்திற்கு பேருதவி செய்து கொண்டிருந்தது.

ஒளி மண்டிய முகத்துடன் வண்டிக்குள்ளிருந்து ஆடறுத்தகள்ளன் மாதிரி தறதறவென்று முழித்துக் கொண்டிருந்த இராசையா வண்டியின் பயங்கரச் சூழலோடு ஓடிவரும் இருளையும் இருளில் கலந்துவிட்ட வெளிப்புறக் காட்சிகளையும் திகிலுடன் நினைத்துப் பார்க்கின்றார். வரப்போகும் "மான் பாய்ந்த வெளி" அவர் ஞாபகத்தில் பயங்கரமாக மின்னி அந்த இடத்தில் அடிக்கடி நடைபெறும் வழிப்பறிகளையும், கொள்ளைகளையும், கொலைகளையும் இடிமுழக்கமாக ஆர்ப்பரித்து அவரது இதயத்தையே சுக்கல் சுக்கலாக நொறுக்குவதுபோல் முழங்கியது. மான் பாய்ந்த வெளியில் நடந்து முடிந்த பயங்கரச் சம்பவங்களெல்லாம் இராசையாவிற்கு ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்கு வரத்தொடங்கின. அந்தப் பயங்கரச் சம்பவங்களைப் பற்றி தனக்கு முன்னால் யாரோ இருந்து கதைகதையாய்ச் சொல்லிக்கொண்டிருப்பதுபோன்ற பயங்கரப் பிரமை இராசையாவிற்கு உண்டாகிவிட்டது.

"பெரியாம்பியண்ணோய்....." இராசையாவின் குரல் பயத்தால் கரகரத்தது.

"என்னோய்....!"

"உங்கால பக்கம் இப்பபோறது வரயிலை எனக்கு கொஞ்சம் யோசினையாயிருக்குது".

"நீ யோசிக்காமே முகத்தாம்பறிய வண்டிலுக்கை படுத்துக்கிட நான்மாடுகளைத்தட்டிவிடுறன்..." பெரியதம்பியின் பேச்சில் துணிவும் கிண்டலும் கலந்திருந்தன.

"பெரியாம்பியண்ணை, நீவெறியிலை ஒண்டும் தெரியாமைக் கிடக்கிறாய். மான் பாஞ்சவெளியும் வரப்போகுது. மாடுகளை உதிலை தவத்து. வளலாயில் ஆறுமுகம் வீட்டிலே தங்கிவிட்டு விடிய கண்ணுக்கிருட்டோடே வண்டிலைப் பூட்டுவம்" இராசையா பெரிய தம்பியிடம் உயிர்ப்பிச்சை கேட்பதுபோல் கேட்டார். பெரியதம்பிக்கு இராசையாவின் பேச்சு வேடிக்கையாயிருந்தது. இராசையா சொல்லுகிறபடி தான் கேட்கக்கூடாதென்ற ஒருவித பிடிவாதக் குணம் பெரியதம்பியின் நெஞ்சிற்குள் விசுவரூபமெடுத்து..... தலைமறைவாய் நின்றது.

"நான் ஆக இரண்டு போத்தல்தான் போட்டனான்....." இப்படிச் சொல்லியபடி வெறி உற்சாகத்தில் பெரியதம்பி மாடுகளை வேகமாக உரப்பிவிட்டார். இராசையா ஏதோ சத்தம்போட்டு சொன்னார். வண்டியின் வேகத்திலிருந்து எழுந்து கொண்டிருந்த "கடபுடா" சத்தத்தில் அவை ஒன்றும் பெரிய தம்பியின் செவிகளில் விழவில்லை. வழிப்பறிக் கூட்டமொன்று வண்டிலுக்குள் பாய்கின்றது..... கூரிய கத்தி இராசையாவின் நெஞ்சில் ஆழப் பாய்கின்றது..... இரத்தம் குபுகுபு என்று சீறிப்பாய இராசையா தார்ரோட்டில் பிணமாக உருண்டு விழுகின்றார்..... பொல்லாத மனப்பயத்தில் உண்மையில் இப்படியெல்லாம் தமக்கு நடந்துவிட்டதாக இராசையா பயங்கரமாக மனக்கற்பனை செய்து பார்க்கின்றார். வீட்டிலிருந்து வெளிக்கிட்ட போது இளையமகள் "ஐயா எங்கை போறியள்" என்று பின்னால் கூப்பிட்டதையும் பிரயாணத்தைப் பற்றி மனைவியோடு கதைத்தபோது பல்லியொன்று அடித்து வைத்துச் சொல்லியதற்குப் பலன் "பயம்" என்று இருந்ததையும் இராசையா மனதில் ஏதேதோ நினைத்தபடி ஞாபகப்படுத்திப் பார்க்கின்றார். அதற்குப் பலன் அப்படியே நடந்துவிட்டதாக நினைப்பு. மான்பாய்ந்த வெளியில் வைத்து தன்னை வழிப்பறித் திருடர்கள் கொலைசெய்வதாகவும், தனது பிரேதத்தைப் பார்த்து மனைவி, மக்கள், சகோதரர்கள் எல்லோரும் கதறி அழுவது போலவும், கோடி உடுத்து, பூனூல் போட்டு தனது நான்கு ஆண்பிள்ளைகளும் கண்ணீரோடு தனக்கு கடைசிக் கடமை செய்வது போலவும், தன் பிரேதம் பறைமேளங்களின் முழக்கத்தோடு பாடையிற் சுடுகாட்டை நோக்கி இறுதியாத்திரை போவது போலவும் மூத்த மகன் கொள்ளிக்குடத்தோடு முன்று முறை சிதையை வலம் வந்து தனக்கு கொள்ளி வைப்பது போலவும்..... இராசையாவின் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பயங்கர மனப்பிரமைகள் சவர்க்காரக் குமிழிகளாக எழுந்து உடைகின்றன.

"பெரியாம்பியண்ணோய்..... நாங்கள் வெறும் ஆள்களாய் போகேலை..... மடியிலே காசு களஞ்சோடை இராவழி போறம்....." இராசையாவின் இந்த எச்சரிக்கை வார்த்தைகளைக் கேட்டதும் பெரியதம்பியின் மன வண்டியின் வேகம் குறைந்தது.

"மடியிலே காசுகளஞ்சோடை இராவழிபோறம்...." இராசையா கூறிய இந்த, எச்சரிக்கையை பெரிய தம்பி தனது மூளைக்குள் போட்டு அலசி அலசி மனத்தின் பல கோணங்களிலும், போட்டு ஆழ நீள யோசித்துப் பார்த்தார். "மான் பாய்ந்தவெளி" அவர் நினைவில் பயங்கரமாக விசுவரூபமெடுத்து நின்று எக்காளம் போட்டு பேய்ச்சிரிப்புச் சிரித்தபடியே பயங்கரக் கதைகள் சொல்லி அவர் நினைவிலிருந்து மாயமாய் மறைகின்றது. பெரியதம்பியின் வெறி முறிவது போன்ற திடீர் மன அமுக்கம். மாட்டு வண்டியின் வேகமும் நல்லாகக் குறைந்து விடுகின்றது.

"நீ சொல்லுறது ஞாயந்தான் இராசையா...."

"நல்லது பெரியாம்பியண்ணை....."

"நாங்கள் உதிலை கிழக்கூருக்குத்தான் போகிறோம்." இப்படி தமது சிநேகிதர் ஆறுமுகத்துக்குப் பதில் சொல்லியபடி பெரியதம்பி வைக்கோல் வாங்குவதற்காகக் கொண்டு வந்த பணத்தை தமது வெற்றிலைக் கடுதாசியின் ஒரு மடிப்புக்குள்ளிருந்து எடுத்து கைவிளக்கு வெளிச்சத்தில் பிடித்துக் "கொண்டு வந்த காசு சரியோ" என்ற மன ஐயிச்சத்தில் இன்னொருமுறை எண்ணிப் பார்க்கின்றார். அவர் காசெண்ணுவதை ஆறுமுகம் வைத்தகண் வாங்காமல் கவனமாகப் பார்த்துக்கொண்டேயிருந்தார்.

"அறுநூறு ரூபாவும் சரி"..... எண்ணி முடிவில் பெரியதம்பி இப்படிச் சொல்லிவிட்டு அந்தக் காசை வெற்றிலைக் கடுதாசிக்குள் பக்குவமாக வைத்துக் கொள்கின்றார்.

"ஆ.... கடவுளே..... அறுநூறு ரூபாய்.... இந்தக் காசோடை தான துணிஞ்சு இராவழிக்கு வந்திருக்கிறியள் பெரியாம்பியண்ணை..... கடைசியிலை காசுமில்லாமல் ஆளுமில்லாமல் போறதுக்குத்தான் உந்த வழி" ஆறுமுகத்தின் இந்த வார்த்தைகள் இராசையாவின் நெஞ்சில் பாரமான பெரிய இரும்புக் கேடரைத் தூக்கிப் போடுவது போன்றிருந்தது.

"நீங்கள் உதைச் சொல்றியள் ஆறுமுகண்ணை.... ஆள் மான்பாஞ்ச வெளியையும் இப்ப கடக்கிற னெண்டு தான் ஒரே முட்டுப்பிடியாய் நிண்டார்..... நான்தான் எவ்வளவோ வில்லங்கப்பட்டு....." இராசையா பெரியதம்பி நடந்து கொண்ட விதத்தை ஆறுமுகத்திடம் உடைத்துக் காட்டி ஆறுமுகத்தின் திகைப்பை இன்னும் இரண்டு மூன்று படிகள் ஏற்றி வைக்கின்றார்.

"மனிசன் ஒரு நாளைக்குத் தானே சாகிறது. காசு போனா மயிராச்சு..... உதுக்கெல்லாம் பயந்து சீவனை விட்டா இந்த உலகத்திலயிருந்து எப்படிக் காலந் தள்ளுறது....." பெரியதம்பி ஆறுமுகம் வீட்டில் நின்று கொடுக்கை இழுத்துக் கட்டினார். ஆறுமுகமும் இராசையாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"பெரியாம்பியண்ணை துணிஞ்ச கட்டைதான்..."

"ஆரதை இப்ப இல்லையெண்டது...." இராசையாவின் கிண்டலான பேச்சை கிண்டலாக ஆமோதித்துக்கொண்டே ஆறுமுகம் தொடர்ந்தார்.

"பெரியாம்பியண்ணை.....! போனகிழமை மான் பாஞ்ச வெளியிலே ஒரு..... பெரிய சங்கதி நடந்திருக்குது.... உங்களுக்கும் அது தெரியவேணும்."

இடையில் குறுக்கிட்ட பெரியதம்பியும் இராசையாவும் அதிர்ச்சியோடு "என்ன....! என்ன....! என்று கேட்டார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க.....)

ஈழத்துச் சிறுகதை இலக்கியத்துக்குப் பங்களித்து வரும் மூத்த எழுத்தாளர்களில் தையிட்டி அ.இராசதுரையும் ஒருவர். இவரது முதலாவது சிறுகதையான "முப்பருவமுட்டாள்" 1960 ஆம் ஆண்டில் "தமிழன்" பத்திரிகையில் வெளியானது.

வீரகேசரி, தமிழன், சுதந்திரன், ஈழநாடு,ஈழமுரசு, சஞ்சீவி, முரசொலி உட்பட பல முன்னணிப் பத்திரிகைகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்துள்ளார். நாவல்கள் சிலவற்றையும் எழுதியுள்ளார்.

1990 ஆம் ஆண்டில் அவரது சொந்த ஊரான தையிட்டியும் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் "அடங்கியதில்" இருந்து அவரது எழுத்தும் ஓரளவு குறைந்திருந்தது. ஆனால் அவர் தனது சொந்த மண்ணை - கிராமத்தை - விட்டு விலகாது அங்கேயே தொடர்ந்தும் வாழ்ந்து வருகிறார். விவசாயியான அவர் தமது எழுபதாவது வயதிலும் இப்போதும் எழுதி வருகிறார்.

சுதந்திரன் மற்றும் ஈழநாடு பத்திரிகைகளும் தமது எழுத்துப் பணிக்கு தரங்கண்டு ஆதரவு தந்து பெரும் ஊக்கமளித்தன என்று தெரிவிக்கிறார் அவர். "ஈழநாடு" வாரமலரில் அவர் எழுதிய "கழிவிரக்கம்" "கண்ணூறு" ஆகிய சிறுகதைகள் வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றன. 1987 ஆம் ஆண்டில் அவர் உதயனின் வார இதழ் சஞ்சீவியில் எழுதிய "அகதி அரிசி" அவரது சிறந்த சிறுகதைகளில் ஒன்று.

தையிட்டி. அ.இராசதுரையின் 21 சிறுகதைகள் கொண்ட தொகுப்பை யாழ். இலக்கிய வட்டம் "அகதி அரிசி" என்ற தலைப்புடன் 2005 ஆம் ஆண்டில் வெளியிட்டது. இங்கு பிரசுரமாகும் "மான் பாய்ந்த வெளி" - சிறுகதை 1964 ஆம் ஆண்டில் ஈழநாடு வார இதழில் வெளியாகியதாகும்.

எமது முந்தையரின் சம்பிரதாயங்கள் பலவும் மற்றவர்களை உள்ளன்புக்கு ஆளாக்குபவையே

எனது அன்னை, என் பாட்டன், என் பாட்டி என்று நம்முன் எம்கண்முன் வாழ்ந்த பாட்டன் பாட்டி ஆகியோரின் தியாக உணர்வை மீட்போம். எந்த நேரத்திலும் ஏதோ செய்து கொண்டே இருந்தார்கள். ஒரு மரத்தை நட்டாலும் அதில் சுய நலமிருக்காது. என்பேரன், பூட்டன் இதனை- இதன் கனியை உண்பான் என்று மானசீகமாக இன்பங்காண்பர் எம்முன்னோர். இந்நிலை இன்றில்லை. தான் வாழுங்காலத்தில் பயன்தரும் குறுகிய நோக்கில்- விஞ்ஞான முறையில், பெருவிருட்சங்களைக் கூட சாடியில் வளர்க்கக் கண்டு

அடுத்த சந்ததியின் பெருநலன் நாடி வீட்டுக்கு வீடு மரம் நடும்பணி இன்றில்லை

பிடித்து விட்டார்கள். விரைந்து பலன்தரா வேம்பு முதலானவை நமக்கா பயன்தரப் போகின்றன என்று வீட்டுக்கு வீடு மரம் நடும் பணியை நிறுத்தி விடுகிறார்கள். இதனால் சூழலும் பேணப்படுவதில்லை; எதிர்காலச் சந்ததிக்காக என்ற உணர்வும் போய்விடுகின்றது.

தியாக உணர்வால் எந்த வேளையிலும்- முழுநேரமுமே உறவுக்காக ஊருக்காக என்று - எமது முந்தையரிடம் சிந்தையும் செயலும் இருந்தது. அவர் கரங்கள் சூழலை அநுசரித்தும் தேவை

கார்மியதாசன்

களை நிறைவு செய்தன. உணவுப் பண்டங்களையுந் தேடின.

இன்று நாம் எல்லாப் பொருள்களுக்குமே கடைகளை - வியாபார நிலையங்களை - நாடுகின்றோம். வேம்பு, இலுப்பை முதலாம் பூக்களைத் தேடி பக்குவம் செய்து வடகஞ் செய்தல், பனம்பழமெடுத்துப் பணியாரஞ் செய்தல், கிழங்கு போடுதல், ஒடியல்செய்தல் என்றெல்லாம் எத்தனையோ கடமைகளை எம் முன்னோர்கள் வீட்டிலிருந்து கொண்டே செய்தனர். காலந்தந்த பருவ உணவுகளை உண்டு சூழலோடு தம் உடல்களை இசைவாக்கஞ் செய்தனர். அதிலே ஒரு திருப்தி. அல்லாமலும் பகிர்ந் துண்ணலிலே ஓர் ஆனந்தம் கண்டனர். மிக மிக மகிழ்ச்சியாக ஒருவருக் கொருவர் உதவியாக இருந்து ஊருடன் கூடி வாழ்ந்தனர். உறவுக்கு, வீட்டுக்கு

ஏதேனும் இடையூறு நேர்ந்தால், நோய் கண்டால் துடித்துப் போவார்கள். நோய் நொடி வரக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருப்பார்கள்.

கடைச்சாப்பாடு உனக்கு வேண்டாம் எனக் கைப்படச் செய்து தருவார்கள். சம்பிரதாயத்துக்காக ஒன்றைச் செய்யாமல், உள்ளங்கலந்த உணர்வுகள் அவர்களின் செயல்களில் இருக்கும்.

இன்றோ, வீட்டுக்கு உத்தியோக மருமகள் வருகிறாள். அவள் தூரநோக்குள்ள முன்னோர் வழியுந் தெரியாதவளாயின் தன்னைச் சார்ந்தவர்களையோ சூழலையோ அயலவர்களையோ எண்ணிப் பார்ப்பாளா? அவர்கள் எக்கேடு கெட்டாலென்ன? எப்பாடு பட்டாலென்ன? என்ற ஏனோ தானோ எனப் பற்றில்லாப் போக்கே இருக்குமல்லவா?

தொழில், தொழில் என்றலையும் நிலை கூடியிருந்து அக்கறையோடு நலம் விசாரித்துச் சேர்ந்து மகிழமுடியாதவாறு, பிள்ளைகளையும் வேலையாள் கையிற் கொடுத்துவிட்டு இல்லத்துக்கு இசைந்தொழுகாத வாழ்வாகிப் போதலைக் காணலாம்.

"கல்லாத மாந்தர்க்குக் கற்றறிந்தார் சொற் கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அரங்கூற்றம் -மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லிற் இசைந்தொழுகாப் பெண்" (மூதுரை)

இல்லிற்கு இசையாத பெண் சூழலறிவுமற்று, சம்பிரதாயங்களும் தெரியாதவளாகி விடுகின்றாள். சம்பிரதாயங்கள் உள்ளன்பை உணர்த்தாதவை என்று மேலோட்டமாகக் கருதப் பட்டாலும் கூட, சம்பிரதாயங்கள் நாளாக நாளாக உள்ளன்புக்கு உட்படுத்தியே தீரும். எனவே அவையும் வாழ்வுக்கு வழி தருவதால் அந்தச் சம்பிரதாயங்களும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும்.

பகட்டாக வாழ நினைக்கும் மனிதர்கள் யாவரும் ஒளியிழந்து பலமிழந்து ஒளிந்து கொள்ளும் பரிதாபம்!

மனிதன் செத்துவிட்டான். மனிதமும் செத்து வருகிறது.

மற்றவர் குற்றங்களை நிந்திப்பதே முறையான வாழ்வு.

உதவி செய்வது, ஆலோசனை வழங்குவது பேயன், பித்தன் செய்யும் காரியங்களாம்.

படித்துப் பட்டம், பதவி பெற்றுவிட்டால் சிரிப்பின் அளவைக் குறைக்க வேண்டுமாம். அல்லது சிரிப்பையே மறந்துவிட வேண்டுமாம்.

கள் கூட்டத்தில் ஐக்கியமாகாமல் மனைவியின் நிழலில் இளைப்பாறும், முந்தானை முடிச்சுக் கணவர்மார் தான் இன்று அதிகம்.

தன் மனைவி, பிள்ளைகள் குதூகலமாக இருக்க வேண்டும் என்பதற்காக, அளவுக்கு அதிகமாக செலவு செய்வார்.

கணவன் தன் எட்டு விரல்களிலும் பத்து மோதிரங்கள். மட்டத் தேள் அளவில் கைச் சங்கிலி. கழுத்தோடு ஒட்டி நிற்கும் சங்கிலி ஒன்றும் அழத தொடங்கிவிடும்.

நிலவு என்பதும்போலிதான். அதனால்தான் அது தேய்கிறது.

சூரியன் தான் நிஜம்.

சூரியனின் ஒளியினைக் கடனாக வாங்கி சிறுகச் சிறுகப் பிரகாசமாகி, அது முழுத் தோற்றம் பெற்றதும் பார்ப்பவர் கண்களுக்குப் பெரியதொரு மகிழ்ச்சியை உண்டு பண்ணிவிடுகின்றது.

சந்திரன் - நிலவு.

நிலவைப் பார்த்து நாய் குரைப்பது உண்மை தெரிந்துதான் போலும்!

வரவு எட்டாக இருக்கையில் செலவு பதினெட்டாக்குவது சமூக அந்தஸ்தாம்.

நல்ல வசதி உள்ளவர்கள் அளவோடும், அழகாகவும் வாழ்கின்றனர். ஓரளவுவசதி படைத்தவர்களே ஆடம்பரத்தில் மூழ்கி உழல்கின்றனர்.

அம்மாவை "மம்மி" என்றும், அப்பாவை "டாட்" என்றும், சின்னம்மாவை 'சின்னன்ரா' என்றும், பெரியம்மாவை 'பெரியன்ரா' என்றும் அழைத்தால் அதுதான் நல்ல நாகரிகமாம். அந்தக் குடும்பமே நாகரிகமும், நாலும் தெரிந்த குடும்பமாம்.

கணவன் மீது மனைவியும், மனைவி மீது கணவனும் ரொம்பவும் காதல் கொண்டவர்கள் போல் மேடைநடிப்பைக் [illegible] காட்டுகின்றனர்.

திருமண விழாக்களில் [illegible] மற்றும் வேறு விஷேடங்களுக்குப் போனாலும், ஆண் இருக்க, மற்றொரு சங்கிலி அடி வயிற்றைத் தொட்டு நிற்கும்.

மனைவியின் அலங்காரமோ.....! அம்மன் கோயில் திருவிழாக் காலங்களில் உலா வரும் அம்மன் விக்கிரகத்தை அலங்கரித்து காட்சி தரும்.

எதிர்கால வாழ்க்கை பற்றிக் கவலைப்படாத மனிதன், வீம்புக்குச் செலவு செய்துவிட்டு கடன்காரர்களைக் கண்டு ஓடி ஒழிக்கத் தொடங்குவான்.

எங்களையெல்லாம் எப்படி எப்படியோ, சந்தோஷமாக வாழ வைத்தவர் என்று துள்ளிக்குதித்த மனைவியும் அவர் பிள்ளைகளும் நாளாக நாளாக, இந்தக் கடன்காரப் பாவியைக் கட்டி நான் படும்பாடு என்று மனைவியும், இந்தக் கடன்கார [illegible] பிள்ளைகளாகப் பிறந்து விட்டோமே என்று பிள்ளைகளும் புலம்ப, குடும்பமே புலம்பிப் புலம்பி அழுது தீர்க்கும்.

அது ஒரு பொய்த் தோற்றம் என்று தெரிந்துதான் நாயும் குரைக்கின்றது போலும், உள் விவகாரம் - உண்மை தெரிந்துதான் போலும்;

உச்சக் கடனின் வலியினாற்றான் சந்திரன் மீண்டும் தேய்ந்து, தேய்ந்து சென்று யார் கண்ணிலும் படாமல் ஒளிந்து கொள்கிறது.

இது போன்றுதான் பகட்டாக வாழ நினைக்கும் எந்தவொரு மனிதனும், ஒளியிழந்து, பலமிழந்து ஒளிந்து கொள்கின்றான்.

"சமரபாகு"
சீனா - உதயகுமார்,
வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரியாருடன் யாழ்ப்பாணம் வந்த முதலாவது பிரிட்டிஷ் ஆளுநர் பிளேக்

1905 ஒகஸ்ட் 19

இலங்கை ஆளுநர் ஹென்றி பிளேக் யாழ்ப்பாணம் வந்தார்.

இலங்கை ஐரோப்பியரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது இலங்கையை நிர்வகிக்கும் பொறுப்பு அந்த நாட்டைச் சேர்ந்த ஆளுநர் ஒருவரிடம் (Governor) ஒப்படைக்கப் பட்டிருந்தது.

1905 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 19 ஆம் திகதி அப்போது ஆளுநராகப் பதவி வகித்த சேர் ஹென்றி பிளேக் தனது பாரியார் சகிதம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார். மனைவியுடன் யாழ்ப் பாணத்திற்கு விஜயம்செய்த முதலாவது பிரிட்டிஷ் ஆளுநர் இவரே. அதுவரை ஆளுநராகப் பதவி வகித்தவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்த போதும் தமது மனைவி மாரை அழைத்து வரவில்லை.

ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர்களும் அவருடன் யாழ்.வந்தனர்

விசேட புகைவண்டி மூலம் அநுராதபுரத்திலிருந்து வந்த பிளேக் தம்பதியினருக்கு யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. புகை வண்டி மூலம் யாழ்ப்பாணம் வந்த முதலாவது ஆளுநரும் இவரே. மார்ட்டின் வீதியூடாக ஊர்வலமாக பிளேக் தம் பதியினர் அழைத்துச் செல்லப்பட்டனர்.

பிரதான வீதியில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் வைத்து வரவேற்புபசாரக் கூட்டம் நடைபெற்றது. சட்டத்தரணி கனகசபை வரவேற்புரை நிகழ்த்தினார்.

இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!

ஆளுநருடன் கொழும்பிலிருந்து வெளிவந்த ஆங்கிலப் பத்திரிகைகளின் ஆசிரியர் களும் வந்தனர். அப்போது பத்திரிகை நடத்தியவர்களும் ஆங்கிலேயர்களே. Ceylon Independent ஆசிரியர் Coats, Observer பத்திரிகைஆசிரியர் Fenguson, Times of Ceylon ஆசிரியர் Jones, Ceylon Standard பத்திரிகை உரிமையாளர் மொன்டிஸ் ஆகியோரே யாழ்ப்பாணம் வந்த பத்திரிகையாளர்கள் ஆவர்.

- தாண்டவன் -

உன் விசுவாசம் பெரிது

(மத்தேயு 15:21-28)

"பேரும் புகழும் பொன்னும், பொருளும், மண்ணும், மணியும் பெரிதல்ல. எனக்கு ஆண்டவரே முக்கியம்" என்று சொல்லி அவரை விட்டு விலகாது வாழ விரும்புவதற்குப் பெயர் தான் விசுவாசம். இத்தகைய விருப்பத்தை மத்தேயு 15:21-28 இல் வந்த கனானியப் பெண் கொண்டிருந்ததனால் தான் அவளுடைய விருப்பத்தை இறைமகன் யேசு நிறைவேற்றினார். கிறிஸ்தவ நெறி யூதர்களுக்கு மட்டும் உரியதா. அல்லது எல்லா இனத்தார்க்கும் உரியதா என்ற சிக்கலை அளிக்கிற ஒரு சில நிகழ்ச்சிகள் இப்பகுதியில் காணக் கிடக்கின்றன. அவற்றில் ஒன்று கனானியப் பெண்ணின் மகளுக்கு நம் பெருமான் செய்த நன்மை.

பழைய ஏற்பாட்டில் கனனேயர் என்றாலே கொடுமைக்கும் பாவத்துக்கும் உரிய இனம் எனலாம். கடவுளுக்கு எதிரானதும் தீமை நிறைந்ததுமான இந்த இனம் முற்றிலும் அழித்து ஒழிக்கப்பட வேண்டியது என்று எண்ணப் பட்டது. அத்தகைய இனத்தைச் சேர்ந்தவள், அதிலும் ஒருபெண், அதிலும் பேய்பிடித்த மகளின் தாய், நம் பெருமான் இயேசுவின் துணை நாடி வருகிறாள். இஸ்ராயோ குலத்தில் சிதறுண்ட ஆடுகளின் மேய்ப்பனாக வந்தவர் நம் பெருமான் இயேசு, புற இனத்துப் பெண்ணுக்கு நன்மை செய்வது ஏது? "பிள்ளைகளின் உணவை எடுத்து நாய்கட்குப் போட இயலாது" என்று கூறி யும் நன்மை பெறுகிறாள். "உன் விருப்பம்" என்று அவரது வேண்டுகோளுக்கு இசைகின்றார் இயேசு.

தன்மீது விசுவாசம் வைத்தவரைக் கடவுள் ஒருபோதும் காப்பாற்றத் தவறுவதில்லை. இதனால் தான் 9 ஆவது திருப்பாடலில் "உமது பெயரை அறிந்தோர் உம்மில் விசுவாசம் கொள்வர்; ஆண்டவரே உம்மை நாடி வருவோரை நீர் கைவிடுவதில்லை" என்று திருப்பாடல் ஆசிரியர் கூறுகிறார். மீட்பின் வரலாற்றில் தன்னை நம்பி தன்மீது முழுவிசுவாசத்தையும் வைத்த யாரையும் இறைவன் கைவிட்டதில்லை.

"என் மீது விசுவாசம் வைப்பவன் இறந்தாலும் வாழ்வான்" என்று யேசு பெருமான் கூறியுள்ளார். இதை மனதில் கொண்டு இயேசுவை நாடிச் செல்லும் பொழுது நமது சாதி, மதம், குலம் போன்றவற்றிற்கு முதலிடம் கொடுக்காது விசுவாசத்துக்கு முதலிடம் கொடுத்து அவரின் அருளும் ஆசீரும் பெறக் கூடிய மக்களாக வாழ முயற்சிப்போம்.

- நசரேன்.

மான் பாய்ந்த வெளி.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

"ஆரோ உங்களைப் போலைத்தான் இரண்டு பேர் வண்டில் கட்டி இராவழி போறபோது மான் பாஞ்ச வெளியடியிலை வைச்சு அந்த இரண்டு பேரையும் சரிக்கட்டிப்போட்டு அவர்கள் வைக்கலுக்கெண்டு கொண்டு போன பெருவாரியான காசையும் அடித்துக் கொண்டு போய்விட்டாங்கள்"..... ஆறுமுகம் மனதிற்குள் சிரித்தபடி அந்தக் கதையை வெற்றிகரமாகச் சொல்லி முடிக்கின்றார். சொல்ல முடியாத பயத்தில் பெரிய தம்பிக்கும் இராசையாவிற்கும் "இரண்டும்" உடுத்திருந்த வேட்டியோடு போய்விடுவது போன்றிருந்தது. அந்தக் கதை உண்மையில் தங்களுக்கே நடந்து விட்டது போன்ற உணர்வு இருவரிடத்திலும் ஏற்படுகின்றது. வைக்கோலுக்குப் போகாமல் விடிந்ததும் அப்படியே வண்டிலைப் பூட்டிக் கொண்டு ஊருக்குப் போய்விடுவது தான் நல்லது போல் இராசையாவின் மூளையில் பட்டது. இரண்டு பேருக்கும் உடம்பில் பிடித்த நடுக்கம் மாறவே ஒரு முழுநாள் ஆகும் போலிருந்தது. இராசையாவும் பெரியதம்பியும் ஒருவரை ஒருவர் கேள்விக் குறியோடு பார்த்துக் கொள்கிறார்கள். ஆறுமுகம் அந்த இருவரையும் மாறி மாறிப் பார்த்து மனதிற்குள் நல்லாகச் சிரித்துக் கொள்கிறார்.

"விடிய நாலுமணியோடை எழும்பி வண்டிலைப் பூட்டினால் வெயிலுக்கு முன்னமாய் போய் சேர்ந்து விடலாம். சரியாய் நாலுமணிக்கு நானும் ஓரிடத்துக்கு அவசரமாய் போகவேணும். அந்த நேரம் வெளி கிட்டுப் போறதுக்கு கொஞ்சமும் யோசிக்கத் தேவையில்லை பெரியாம்பியண்ணை"... ஆறுமுகத்தின் கூற்றை பெரிய தம்பியும் இராசையாவும் ஆமோதித்துக் கொண்டவர்களாய் "கள்ளக் கறுவலையும்" "கழுகளையும்" போல தலை யாட்டிக் கொண்டார்கள்.

வைகறையின் அமைதியான தூக்கத்தைக் குழப்பியடித்துக் கொண்டே பெரியதம்பியின் மாட்டுவண்டி ஓடிக் கொண்டிருந்தது. அந்த அமைதியான வைகறை நேரத்தில் மாட்டு வண்டிப் பிரயாணம் செய்வது பெரியதம்பிக்கும் இராசையாவிற்கும் எவ்வளவோ மன உற்சாகமாயிருந்தது. வைக்கோல் கத்தைகளை எண்ணி எண்ணி வண்டியில் ஏற்றுவது போலவும் வைக்கோல் சுமையோடு மாட்டுவண்டி வீடு நோக்கி வந்துகொண்டிருப்பது போலவும் வைக்கோல் கற்றைகளைப் பட்டையில் அடுக்குவது போலவும் மனக் கற்பனை செய்து பார்த்தபடி பெரியதம்பி மாடுகளை வேகமாகத் தட்டி விடுகின்றார். வானச் சோலையின் கிழக்குப் புறத்தில் பூத்திருந்த விடிவெள்ளியை அடிக்கடி பார்த்தபடி வண்டிக்குள் உட்கார்ந்திருந்த இராசையாவிற்கு மான் பாய்ந்த வெளி கிட்டியதும் திகில் பிடிக்கிறது. பெரியதம்பிக்கும் ஆறுமுகம் சொன்ன கதை ஞாபகம் வருகின்றது. வைக்கோல் பாரத்தோடு வண்டி குடக்கடிப்பது போலவும் வைக்கோல் பட்டடை நெருப்புப் பற்றி எரிவது போலவும் பயங்கரப்பிரமைகள் அவரைத் தொடருகின்றன. வண்டிக்கு முன்னால் தெருவில் பனங்குத்தி போட்டு வண்டிலை மூன்று நான்கு பேர் மறிக்கின்றார்கள். இராசையா பயத்தோடு முன்னால் பார்த்தார். மனப்பிரமை. வண்டிக்குப் பின்னால் தெருவில் யாரோ வண்டியைத் துரத்திக்கொண்டு ஓடிவருகின்றார்கள்..... பெரியதம்பி பயத்தோடு மாடுகளை அடித்து உரப்பியபடி திரும்பிப் பார்க்கின்றார்..... மனப்பிரமை.

"பெரியாம்பியண்ணோய்.... ஏதோ நடக்கிறமாதிரிக் கிடக்குது...."

"பேசாமைக்கிட வாறசமத்துப் பாப்பம் கையிலை கொடுவாக்கத்தி தான் கிடக்குது....." இப்படி பெரியதம்பி வாய்வெருட்டிற்காகச் சொல்லி வாய் மூடுவதற்குள் ஒரு கரிய உருவமொன்று ஓடும் வண்டிக்குள்ளே மின்வேகத்தில் தாவி ஏறிவிடுகின்றது. அடுத்த கணம் இராசையா வண்டியிலிருந்து குதித்து விழுந்து ஓடிச்சென்று ஒரு ஈச்சம்பற்றையோடு பதுங்கிக் கொண்டார். பெரியதம்பியும் குதிக்க முயன்றார். அதற்குள் அந்த உருவம் பெரியதம்பியைப் பலமாகப் பிடித்தபடி வெற்றிலைக் கடுதாசியோட பணத்தை எடுத்துக் கொண்டு பெரிய தம்பியையும் கழுத்துப் பிடியாய் பிடித்தபடி ஓடிக்கொண்டிருந்த வண்டியிலிருந்து வெளியில் பாய்கின்றது. அதைத் தொடர்ந்து "ஐயோ... தொலைந்தேன் ஐயோ....." என்ற பலமான மரணக்குரல்.

"கடவுளும் இல்லையெண்டோ பெரியாம்பியண்ணை சொல்லுறது. அந்த அந்தரவழியிலை எங்களுக்கு அந்தவேலை செய்தவன் அடிக்குள்ளாக கழுத்திலை வண்டில் சில்லு நெரித்துத் தானே செத்தான்....."

"இப்படியெல்லாம் எங்களுக்கு ஆறுமுகம் அவதந்திரம் செய்வானெண்டு நான் கனவிலும் நினைச்சிருக்கேலை....." பெரியதம்பி இப்படிச் சொல்லியபடி இராசையா எடுத்து எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்த வைக்கோல் கற்றைகளை வாங்கி பட்டடையில் அடுக்கிக் கொண்டிருந்தார்.

(நன்றி: 'அகதி அரிசி' - சிறுகதைத் தொகுதி)

சொற்சிலம்பம் - போட்டி இல: 23



அனுப்புபவர் பெயர்:.....

விலாசம்:.....

.....

கையொப்பம்:.....

மேலிருந்து கீழ்

1. திருமணம்.
2. கேள்/வாங்கு.
3. காதில் அணிவது.
4. ஆணுமல்ல; பெண்ணுமல்ல.
5. ஒரு தேசிய விளையாட்டு.
6. சாப்பிடு.
8. கணக்கிலும் ஒரு பாடம்; சங்கீதத்திலும் ஒரு பாடம்.
10. இந்து தெய்வம்.
12. அழுது பிதற்றுதல்.
13. பொக்கிளிப்பான்.
14. வற்றுதல்.
17. அயர்ச்சி.
18. பிரணவச்சொல்.
20. கல்வியையும் குறிக்கும்: கால அளவையும் குறிக்கும்.
22. ஒவ்வொன்றுக்கும் என்பதைக் குறிக்கும் சொல்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 21 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்

(1) பிரமாதம். (4) பாகு. (6) சம. (7) குண்டு. (8) சமத்துவம். (12) சமிபாடு. (14) வாதம். (16) நன்று. (17) கல்வி. (19) ஆண். (20) தண்டு (21) விடுதலை. (22) குருதி.

மேலிருந்து கீழ்

(1) பிரசவம். (2) மாசத்துவன் . (3) தமது. (4) பாண். (5) குடுகுடு. (7) கும்மி. (9) மறி. (10) வசம். (13) பாடல். (15) தறுதலை. (16) நண்டு. (17) கடுகு. (18) விடுதி. (19) ஆவி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 21 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

1 ஆம் பரிசு — செ.சந்தனராசா, பாடசாலை வீதி, எழுதுமட்டுவாழ் தெற்கு.

2 ஆம் பரிசு — தா.அனஸ்ரன், இல: 01, புதுவீதி, பாஷையூர் யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு — இ.பத்மலிங்கம், ஏழாலை கிழக்கு, ஏழாலை.

பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

சொற்சிலம்பம் போட்டி இல. 23

நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (27.08.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.23 இல் வெற்றிபெற்றோர் விவரம் 31.08.2008 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

இடமிருந்து வலம்

1. மதியூகம்.
4. ஏதிலி.
7. வீட்டில் குழப்படி செய்யும் பையனை இப்படி அழைப்பர்.
8. இளைஞன்.
9. பழைய காலத்தில் பேதிக்குப் பயன்படுத்தப்பட்டது.
11. மகிழ்வு.
14. மென்போக்குக்கு மாறான போக்கு.
15. ஆண்குழந்தை
17. பன்னிரண்டு அங்குலம்.
18. நதி.....
19. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்.
21. சொல்.
23. சிதம்பரம்.
24. படிப்பறிவின்மை.

பாராட்டுப் பெறுவோர்

(1) க.இரகுலேசன், இல 18 ஏ/1 சிவகுருநாதன் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(2) சயாரத்தினம் பாரதி, மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி, கரவெட்டி.

(3) ச.வரதலிங்கம், சந்தையடி வீதி, கோப்பாய்குடியிருப்பு, சாவகச்சேரி.

(4) செ.பத்மநாதன், கலைமகள் வீதி, கட்டைப்பிராய், யாழ்ப்பாணம்.

(5) மு.வித்தியாதரன், மடத்தடி, பலாலி வீதி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் கதிர்

அன்னை

பத்துமாதம் சுமந்து எம்மை- அன்னையவள்
பாடுபட்டு வளர்த்திடுவாள்
பாசம் காட்டி எமக்கு - அன்னை
பாலூட்டி உயிர்தருவாள்.

பார்ப்பவர்கள் போற்றிடவே - எம்மை
பாரினிலே உயர வைப்பாள்
பட்டினியாய் கிடந்தாலும் எமக்கு - அவள்
பக்குவமாய் உணவை ஊட்டிடுவாள்

கஸ்ரத்தின் மத்தியிலே - எம்மை
கைவிடாமல் காத்திருப்பாள்
காலங்கள் பல சென்றாலும் - அன்னை
காசினியில் எம்மை உயர்த்தி நிற்பாள்.

த. சாந்துஷா,
யா/நயினாதீவு மகா வித்தியாலயம்.

குயில்

கூடு கட்டத் தெரியாத குயிலே
குரலில் இனிமை கொண்ட குயிலே
நாடெங்கும் சென்று வரும் குயிலே
நானிலத்தில் மென்மை பெற்ற குயிலே

கரு வண்ணம் காட்டுகின்ற குயிலே
கருத்தை எல்லாம் கவர்கின்ற குயிலே
உலகினில் இசை பாட உனக்கு
கற்றுத் தந்தவர் யார் குயிலே?

ச.அனோஜா,
தரம் - 07, யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

பூக்கள்

சின்னச் சின்னப் பூக்கள்
சிரிக்கும் அழகுப் பூக்கள்
வண்ண வண்ணப் பூக்கள்
வாசம் மிக்க பூக்கள்

வண்டு மொய்க்கும் பூக்கள்
வகை வகையாய் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
கவிதை பாடும் பூக்கள்

மென்மை மிகு பூக்கள்
மிக்க அழகுப் பூக்கள்
பெண்கள் விரும்பும் பூக்கள்
பெருமை தரும் பூக்கள்

சு.சுவஸ்திகா
யா/வேலணை மத்திய கல்லூரி.

மாணவர் தூரிகை

சி.பிரதாயன் தரம்-7E,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

மு.அபிஷனா தரம்-6A,
யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்.

நன்றி மறந்த நரி

ஒரு காட்டில் நரி ஒன்று முயலைப் பிடித்து ஆவலுடனும் வேகமாகத் தின்றது. அப்போது அதன் தொண்டையில் ஒரு எலும்பு சிக்கிக் கொண்டது. வலி பொறுக்க முடியாமல் ஊளையிட்டுக் கொண்டு அங்கும் இங்கும் ஓடியது நரி.

அப்போது ஒரு கொக்கு எதிரே வந்தது. அதனிடம் சென்ற நரி தனது தொண்டையில் மாட்டிக் கொண்ட எலும்பை எடுத்தால் தன்னிடம் உள்ள ஏராளமான சொத்துக்களை எல்லாம் தருவதாகக் கூறியது.

நரியின் வார்த்தையை நம்பிய கொக்கு உதவி செய்ய முன்வந்தது. தனது நீண்ட அலகை நரியின் வாய்க்குள் விட்டு எலும்பை எடுத்தது. சொன்னபடி சொத்துக்களைத் தரும்படி கொக்கு நரியிடம் வேண்டியது.

''சொத்தா? உனக்கா!'' எனக் கூறி கொக்கைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தது நரி.

''உன் அலகை எனது வாயினுள் விடும்போது உன் கழுத்தைக் கடித்துக் கொல்லாமல் உயிருடன் விட்டேனே அதுவே உனக்குக் கொடுத்த மிகப் பெரிய சொத்து'' எனக் கூறிய நரி, அந்த இடத்தை விட்டு ஓடும்படி விரட்டியது. ''நன்றி கெட்ட நரிக்கு உதவியது பெரும்பாவம்'' எனக் கூறிக் கொண்டு கொக்கு அவ்விடத்தை விட்டுப் பறந்து சென்றது.

அ.சிவகஜனிசரிமா தரம் - 01 புங்குடுதீவு/சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்.

3 மூன்றின் சிறப்புகள் சில...

01. உலகம் மூன்று -
பூதலம், மீதலம், பாதாளம்
02. குணங்கள் மூன்று -
சத்துவம், ராஜசம், தாமதம்
03. ஆசைகள் மூன்று -
மண், பொன், பெண்
04. கனிகள் மூன்று -
மா, பலா, வாழை
05. சுடர்கள் மூன்று -
சூரியன், சந்திரன், அக்கினி
06. குற்றங்கள் மூன்று -
காமம், வெகுளி, மயக்கம்
07. மலங்கள் மூன்று -
ஆணவம், கன்மம், மாயை
08. நாடிகள் மூன்று -
வாதம், பித்தம், சிலோத்துமம்
09. மனிதர்களில் மூன்று -
உத்தமர், மத்திமர், அதமர்.
10. இதிகாசங்கள் மூன்று
- இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம்.

சி.சாம்பவி, தரம் - 9 E.
யா/வேம்படி மகளிர் கல்லூரி.

வண்ணத்துப் பூச்சி

வண்ணத்துப் பூச்சிகளில் 20 ஆயிரம் வகைகள் உள்ளன. எல்லா வண்ணங்களிலும் இப் பூச்சிகள் உள்ளன. அவைகளின் உடல் அமைப்பு, தலை, தொண்டை, வயிறு என மூன்று பகுதிகளைக் கொண்டது. தலையில் இரண்டு கண்களும், இரண்டு உணர்கொம்புகளும் இருக்கும் மணத்தை நுகரவும், ஒலியைக் கேட்கவும் இந்த உணர்கொம்புகள் பயன்படுகின்றன. வண்ணத்துப் பூச்சிகள் சுவையைக் கால்களால் அறிகின்றன. பெண் வண்ணத்துப் பூச்சிகள் ஆயிரம் முட்டைகளுக்கு மேல் இடும். முட்டையிடுவதற்குச் சரியான இடத்தைப் பெண் வண்ணத்துப் பூச்சியே தெரிவு செய்யும்.

வண்ணத்துப் பூச்சிகளில் மிகப்பெரியது ''மானார்க் பட்டபிளை'' [Manark Butterfly] என்பதாகும். இது அமெரிக்கா நாட்டில் அதிகம் காணப்படும்.

செ.நிருஜன், நீர்வேலி.

நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-.....
தரம் :-.....
பாடசாலை :-.....

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

....
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

பழமொழிகளிற் பிராணிகள்

★எலிவளையானாலும் தனி வளை வேண்டும்
★சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது
★இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
★காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு
★பசுந்தோல் போர்த்திய புலி
★குரங்கின் கைப் பூமாலை
★ஆனைக்கும் அடி சறுக்கும்
★தான்பிடித்த முயலுக்கு மூன்று கால்
★இளங்கன்று பயமறியாது
★புலி பசித்தாலும் புல் தின்னாது.

மகேந்திரன் சிவகௌரி, யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

கல்வியின் சிறப்பு

''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பது ஆன்றோர் வாக்கு. நாம் சிறுவயதில் இருந்தே கல்வியைக் கற்க ஆரம்பிக்கின்றோம். நாம் சிறுவயதில் கற்கும் கல்வி பசுமரத்தாணி போல் பதிந்திருக்கும். செல்வங்களுக்கெல்லாம் செல்வம் கல்விச் செல்வம்.

கல்வியின் சிறப்பு என்ற வகையில் நோக்கினால் - கல்வியையும் கல்விகற்ற வரையும் பிரிக்க முடியாது, கள்வர்களால் கொள்ளையிட முடியாது, கொடுக்கக் கொடுக்கக் கூடுமேதவிர குறையாது, நெருப்பினால் வேகாது என்னும் சிறப்பம்சங்களைத் தன்னகத்தே கொண்டது. இன்றைய காலகட்டத்தில் எந்தவொரு வேலைக்கும் கல்வி அவசியமாகின்றதைக் காண முடிகின்றது. ஒருவர் தான் கற்ற கல்வியை விலை கொடுத்து வாங்க முடியாது.

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னனுக்குத்
தன் தேச மல்லாமற் சிறப்பில்லை
கற்றோனுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு

மேற்குறிப்பிட்ட பாடலூடாக கல்வியின் சிறப்புத் தெளிவாக எடுத்தியம்பப்படுகிறது. மன்னனையும், கற்றவனையும் எடுத்து நோக்கினால் மன்னனிலும் பார்க்க கற்றவன் சிறப்புடையவன். மன்னனுக்கு தனது தேசத்தில் அல்லாமல் சிறப்பில்லை. கற்றவனுக்கு எங்கு சென்றாலும் சிறப்பு உண்டு. கல்வி என்ற ஞானத்தை கற்காதவர்கள் ''முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளி போலும்'', ''பாசி மூடிய பவளத்தின் நிறம் போலவும்'', ''கூடை கவிழ்த்த விளக்கின் ஒளி போலவும்'' போன்ற உவமைகளால் வர்ணிக்கப்படுகிறார்கள்.

நாம் இப்பிறவியில் கற்கும் கல்வியானது எமது ஏழு பிறப்புக்கும் கைகூடும். இவ்வளவு பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட கல்வியை சிறுவயது தொடக்கம் சிறந்த முறையில் கற்று [illegible] வளர்ந்து எம்மாலியன்ற உதவிகளைச் சமூகத்துக்குச் செய்ய வேண்டும். ******

ச. தனுஜன், யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

விடுகதை சொல்லப்போறேனாம்...

1. காற்று நுழைந்தவுடன் கானம் பாடுவான். அவன் யார்?
- மூங்கில்
2. வீட்டிற்கு வந்த விருந்தினரை வரவேற்க ஆளில்லை. அவன் யார்?
- செருப்பு
3. தேடி வந்தவன், ஓடிப் போகிறான். அவன் யார்?
- கடல் அலை
4. வண்ணத்தில் வருவான், எண்ணத்தில் நிறைந்தவன். அவன் யார்?
- வானவில்
5. தட்டினாலும் ராகம். தடவினாலும் ராகம். அவன் யார்?
- ஆர்மோனியம்
6. மக்கள் இல்லாதநாடு. அலையில்லாத கடல். அது என்ன?
- வரையாடம்
7. சிறகில்லாப் பறவை, தேசமெல்லாம் திரியும். அது என்ன?
- கடிதம்.
8. வீட்டுக்குள் வீட்டைக் கட்டி, வீட்டையே கொள்ளையடிப்பான். அவன் யார்?
- எலி
9. அக்காள் விதைத்த முத்து, அள்ள முடியாத முத்து. அது என்ன?
- கோலம்.
10. வலை விரித்திடுவான், வேடன் அல்ல. உயிர் குடித்திடுவான், எமனுமல்ல. அவன் யார்?
- சிலந்தி

கூ.விஜிதா - தரம் 8 A,
யா/மகாஜனக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பிறந்தநாள் நல் வாழ்த்து

16.08.2008

பிரான்சில் வசிக்கும் திரு.திருமதி அன்ரனி யோகராஜா (இல.195 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்) லுயின்மேரி (திறஞ்சனி) (தோலகட்டி வயாவிளான்) தம்பதியரின் அருமைப் புதல்வி ஸ்ரீபனி தனது முதலாவது பிறந்தநாளை பிரான்சிலுள்ள Dar Restaurand 128 Rue Operkampf 75011 Paris, Franceஇல் 17.08.2008 ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அருமைச் செல்வத்தை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், அன்ராமார், மச்சான்மார், மச்சான்மார், அண்ணாமார், அக்கா மார், தம்பிமார், தங்கைமார் மற்றும் அனைவரும் லூட்ஸ் அன்னையின் ஆசி யுடன் சிறப்பாக பல்லாண்டு காலம் வாழ்ந்து அவரின் புகழ் சிறப்பாக ஓங்கிச் செழித்து நலமாக வாழ பலகோடி வாழ்த்துக்களை மனதார வாழ்த்துகின்றோம்.

ஜோன் ஸ்ருடியோ & சஜீவன் ஸ்ருடியோ,அச்சுவேலி. ஜோன் - ஆன்குலாஸ் (மாமா).

சிமெந் கொங்கிறீட் வீதிகள் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக 17

சாவகச்சேரி நகர சபையினால் அமைக்கப்பட்ட சிமெந்து கொங்கிறீட் வீதிகள் பொது மக்கள் பாவனைக்குத் திறந்த விடப்பட்டுள்ளன.

இராமலிங்கம் வீதி, ஹென்ஸ்மன் வீதி, ஆகியவை சிமெந்து கொங்கிறீட் வீதிகளாக மாற்றப்பட்டதால் இவ் வீதிகள் வாகனங்களின் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தன.

வீதி வேலைகள் பூர்த்தியடைந்த தையடுத்து பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(203-207)

கண்ணாடி விற்பனையாளர் கவனத்திற்கு

முகம் பார்க்கும் கண்ணாடி கொழும்பிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். உங்களுக்குத் தேவையான சைஸ்களில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மொத்தமாக கொள்முதல் செய்வோருக்கு விஷேட கழிவு கொடுக்கப்படும்.

நீங்கள் நாடவேண்டிய முகவரி:

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 2222567

மரண அறிவித்தல்கள்

செல்வநாயகம் சந்திரமோகன்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடா, மொன்றியலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் சந்திரமோகன் (13.08.2008) புதன் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் றஞ்சினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வநாயம்-சோதிமணி தம்பதியரின் மூத்த மகனும் சந்திரமோகினி, சந்திரவதனி (சுகந்தி), சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகலிங்கம், ஜீவம், சிவானுஜா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற துரைராசா, இரத்தினசிங்கம், பஞ்சாட்சரம், இராசலிங்கம், அன்னலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் சுபத்திரை, காலஞ்சென்ற இராசேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் ஜெனனி, அர்ச்சனா, மயூரிகா, ஆரூரன் ஆகியோரின் மாமனும் சனார்த்தனியின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21ஆம் திகதி வியாழக் கிழமை மொன்றியலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தாய், சகோதரி,
அன்னலிங்கம் மாமா.

பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு. (77286)

கலைமதி விளையாட்டுக் கழகம்

நடத்தும்
உதைபந்தாட்ட இறுதிப் போட்டியும்
பரிசளிப்பு விழாவும்- 2008

இடம்: கலைமதி விளையாட்டுக் கழகம்
காலம்: இன்று (17.08.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணி

புத்தூர்ப் பிரதேசத்திற்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி
செந்தா விளையாட்டுக் கழகம், புன்னாலைக்கட்டுவன்
எதிர்
கலையரசி விளையாட்டுக் கழகம், ஈவினை

பெண்களுக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி
பிரதேச செயலக அணி, கரவெட்டி
எதிர்
கலைஒளி, ஆனைக்கோட்டை

யாழ்.மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி
ஞானமுருகன்'ஏ' விளையாட்டுக் கழகம் ,மயிலங்காடு
எதிர்
றோயல் விளையாட்டுக் கழகம், ஊரெழு. (77267)

உலக உணவுத்திட்டத்தின்கீழ் ஜூலை மாத நிவாரணம்

யாழ்ப்பாணம், ஓக 17

தென்மராட்சி பிரதேசத்தில் உலக உணவுத் திட்டத்தின்கீழ் ஜூலை மாதத்திற்கான நலிவுற்றோர் நிவாரணத்திற்குரிய உலர் உணவுப் பொருள்கள் அந்தந்த ப.நோ. கூ.சங்கங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பொருள்களை நாளை திங்கட்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (203-207)

விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஓக. 17

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் பிரதேச செயலகத்தில் வழங்கப்பட்டன.

பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் க.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேசத்தில் உள்ள முப்பது விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் வழங்கினார்.

மாகாண விளையாட்டு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நிதியில் உதைபந்து, கரப்பந்து, கிரிக்கட் ஆகியவற்றுக்குரிய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(203-207)

நாகலிங்கம் பொன்னுத்துரை

(ஓய்வுபெற்ற கணக்காளர்)

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் 480/165, றுக்சி கார்டின், காலி வீதி, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் தற்போது சிட்னி, ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் பொன்னுத்துரை 15.08.2008 வெள்ளிக்கிழமை சிட்னியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பவளத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தையல் முத்து, வேலுப்பிள்ளை (மலேசியா), கனகரத்தினம் (கனகர்) மற்றும் நீலாட்சிப்பிள்ளை, காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தாமோதரம்பிள்ளை
நீலாட்சிப்பிள்ளை
(சகோதரி).

த.மு.:
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (77274)

V.P.S. SEEVAM
Guest House

தலைநகரில் கடந்த 16 வருடங்களாக
மிகவும் சிறந்த சேவைசெய்யும்
ஒரே ஸ்தாபனம்

V.P.S. SEEVAM
Guest House

1. தனி அறை (Single Room)
2. இருவர் அறை (Double Room)
3. கொமட் வசதியுள்ள டிலசல கூடங்கள்
4. குளிரூட்டப்பட்ட அறை (Air Condition Room)

மிகவும் சகாயமான கட்டணத்தில்
வாடகைக்குக் கிடைக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்.

V.P.S. SEEVAM
Guest House, 93, Vivekananda Hill,
Colombo.13
Tel: 326522
(77265)

காணி விற்பனைக்கு

வத்தளை-காந்தி மாவத்தையில் (ஹுனுப்பிட்டி-புகையிரத வீதிக்கு அண்மையில், வத்தளை நீர்கொழும்பு வீதி சந்தியில் இருந்து 750 M தூரத்தில்) 7.2 பேர்ச்சஸ் காணி மின்சார வசதிகளுடன் விற்பனைக்குண்டு (ஒரு பேர்ச்சஸ் ரூபா மூன்றரை லட்சம்).

தொடர்பு:- 071-5158063

இணையவழி இலவசத் திருமணசேவை

www.palnilavu.com [பால் நிலவு.கோம்]
உங்கள் துணையைத் தெரிவுசெய்ய இன்றே பதிவு செய்யுங்கள்.
மேலதிக தொடர்புகளுக்கு: ++94779235758.

வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு :
43, கலாசாலை வீதி, திருநெல்வேலி. (77263)

விற்பனைக்கு

ஆறாயிரம் சீரிஸ் தொலைபேசி (S.L.T.) ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டியது:
எஸ்.ஸ்ரீரங்கநாதன்,
கொனிக்கா லாப், 14, ஸ்ரீ வேங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.
(77281)

விற்பனைக்கு

1 ½ மாத பொமரேனியன் நாய்க்குட்டிகள், 4 மாத அல்சேஷன் ஆண் நாய்க்குட்டி, நல்லின புறாக்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 93, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(கைலாசபிள்ளையார் கோயில் அருகில்).
(77264) தொ.பே.:222 6265.

தவறிவிட்டது

14/A, அன்னசத்திர லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய வீரகத்தி சிவப்பிரகாசம் என்பவரது தேசிய அடையாள அட்டை (541361634V) 15.08.2008 அன்று நல்லூருக்கும், ஆனைப்பந்திக்குமிடையில் தவறி [illegible] கேட்டுக் கொள்கின்றேன். (77268)

E.S.P. நிறுவன ஆதரவில்
யாழ்.பாலர் கல்விக் கழகம் நடத்தும்
14 ஞானக்குழந்தை இல்லங்களின்
42ஆவது விளையாட்டு விழா

இடம்: யாழ்.இந்துக் கல்லூரி மைதானம்
நாள்: இன்று (17.08.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி
தலைவர்: சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்
(பாலர் கல்விக் கழகம்)
பிரதம விருந்தினர்: Ms Maki Noda
(*Child Protection Specialist,* UNICEF)
சிறப்பு விருந்தினர்: திரு. E.S.P. நாகரத்தினம்
(உரிமையாளர், E.S.P.நிறுவனம்)
திருமதி சந்திராதேவி சுபாஸ்சந்திரன்
(சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பி.உ.தி.,யாழ்.)
கௌரவ விருந்தினர்: திரு.மு.இராசநாயகம்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், முன்பள்ளி, யாழ்.கல்வி வலயம்)
லயன் ஐ.கோ.சந்திரசேகரம் J.P.
(ZONE Chairperson- ZONE 17,
Deputy Chief Marshal, University of Jaffna)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
49/5, யாழ்.வீதி, யாழ்ப்பாணம். பாலர் கல்விக் கழகத்தினர்
(77265)

மரண அறிவித்தல்

சங்கரப்பிள்ளை விஜயரத்தினம்

யாழ்ப்பாணம், சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும் தலவாக்கலை "நீயூ சீப் சைட்" உரிமையாளரும் தற்போது கொட்டகலை ரொசிட்டா வீடமைப்பு திட்டத்தில் வசிப்பவருமான சங்கரப்பிள்ளை விஜயரத்தினம் அவர்கள் (15.08.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை- நாகுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா- ஜெயலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் தவமலரின் அன்புக் கணவரும் ஞானரத்தினம், அன்னரத்தினம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகதாசனின் (சங்கானை) அன்பு மைத்துனரும் ரஞ்சனி (ஆஸ்திரேலியா), ரஞ்சன் (சாஜா), சுகுமார் (ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்), சுரேஸ்குமார் (நியூ சீப் சயிட், தலவாக்கலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராஜ்குமார் (சாஜா), சுமதி (சாஜா), பத்மாவதி (நகரசபை தலவாக்கலை), சகிலா (தலவாக்கலை) ஆகியோரின் அன்பு மாமனும் ரதீபன், ரூபினி (ஆஸ்திரேலியா), ஸ்ரீநிகேதன் (சாஜா), கஜானன், விஹாஷினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2008) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு 17, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலையில் நடைபெற்று, கொமர்ஷல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

தொடர்பு:
கொட்டகலை.
060 2513040. (ஒ/554174)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சுடர்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர) முன்னோடிப் பரீட்சை 2008 ஓகஸ்ட்

General Certificate of Education (A/L) Pilot Examination August 2008

இரசாயனவியல் II-A

A.LOGANATHAN B.Sc. P.G.D.E யாழ்.மத்திய கல்லூரி.

அமைப்புக் கட்டுரை நேரம்: 1மணி

இப்பகுதியின் 4 வினாக்களிற்கும் அவற்றில் விடுபட்ட வெற்றிடங்களின் விடை எழுதுக.

1) a) உரு- I



1.மேற்படி உருவிற்குப் பொருத்தமான ஒரு மூலக்கூற்று சூத்திரத்தையும், அதன் வடிவத்தையும் எழுதுக.

சூத்திரம் ....., வடிவம் .....

2. மேற்படி உரு I ல் பின்வரும் சந்தர்ப்பங்களில் பெறப்படும் மூலக்கூற்று வடிவத்தையும், பொருத்தமான ஒரு உதாரணமும் தருக.

	சந்தர்ப்பம்	மூலக்கூற்று வடிவம்	உதாரணம்
i)	பிணைப்பு *a* நீக்கப்படல்		
ii)	பிணைப்புக்கள் b, c நீக்கப்படல்		
iii)	பிணைப்புக்கள் *a*, b, c நீக்கப்படல்		

b) மூன்றாம் ஆவர்த்தனத்தில் +7 ஒட்சியேற்ற எண்ணைத் தோற்று விக்கக்கூடிய மூலகமானது இதே ஆவர்த்தினுள்ள A என்ற மூல கத்துடன் முக்கோண கூம்பக வடிவ மூலக்கூறை உருவாக்குகின்றது.

i) இம்மூலக்கூறின் உண்மைக் குறியீட்டை எழுதுக.

.....

ii) மேற்படி பதார்த்தம் i) நீர்ப்பகுப்படைதலுடன் தொடர்புடைய சமப்படுத்திய சமன்பாட்டை எழுதுக. .....

c) ஆவர்த்தன அட்டவணையில் மூன்றாம் ஆவர்த்தனத்தில் அடுத்துள்ள மூன்று மூலகங்கள் X, Y, Z ன் மூன்றாம் அயனாக்கள் சக்திப் பெறுமானங்கள் முறையே $KJmol^{-1}$ ல் 2920, 3390, 3850 ஆகும். எனின் X, Y, Z ன் உண்மைக் குறியீடுகளை எழுதுக.

X ..... Y ..... Z .....

d) 1. அணு எண் 24 உள்ள மூலகம் +3 கற்றயனைத் தோற்றுவிக்கும் போது அதன் e^n நிலையமைப்பை $1S^2, 2S^2$ இல் எழுதுக .....

2. மேற்படி கற்றயன் நீர்க்கரைசலிற்குள் சிறிதளவு $HCl_{(aq)}$ சேர்க்கும் போது பின்வருவனவற்றை எழுதுக.

i) நீர்க்கரைசலின் ஆரம்ப நிறம் .....

ii) $HCl_{(aq)}$ சேர்த்த பின்பு நிறம் .....

iii) தோன்றும் சிக்கல் அயனின் சூத்திரம் .....

2) a) 0.203g நீரேற்றிய $MgCl_m . nH_2O$ ஆனது நீரில் நன்கு கரைத்து $0.1moldm^{-3}$ $AgNO_3$ கரைசலுடன் நியமித்த போது $20cm^3$ தேவைப்பட்டது. நீரேற்றப்பட்ட இக்குளோரைட்டு வெப்பமேற்றப்பட்ட போது 53.2% திணிவு இழப்பு ஏற்பட்டது. [H = 1, Mg = 24, C–! = 35.5, Ag = ſ08, O = 16] திருத்தமான கணித்தல்கள் மூலம் m, n ன் பெறுமானங்களைக் கணித்துப் பெறுக.

b) இப்பதார்த்தம் நீரில் கரைத்து கரைசலின் கனவளவு $250\ cm^3$ ஆக்கப்பட்டால் கரைசலில் Cl^-ன் செறிவை ppm ல் கணிக்குக.

c)



X_2 வெப்ப நிலையை விட கூடிய வெப்பநிலை X_1ல் வாயு மூலக்கூறுகளிற்குரிய போற்மன் சக்தி பரம்பல் வளையி தரப்பட்டுள்ளது.

i) A, B, P ல் வரவேண்டிய சொற்களை வரையில் எழுதுக.

ii) தரவுகளில் இருந்து Q, R பெட்டிகளில் பொருத்தமான குறியீடுகளை குறிக்குக.

d)



உரு II இல் அமில, கார நியமிப்பில் P^H மாற்றம் தொடர்பானது.

i) x அச்சில் உள்ள BOX இல் வரவேண்டிய பொருத்தமான பதம் என்ன?

.....

ii) வரைபின் தரவுகளின்படி இது எவ்வகையான அமில – கார நியமிப்பிற்கு உரியது?

.....

iii) பொருத்தமான உதாரணம் ஒன்று எழுதுக?

.....

iv) இந்த நியமிப்பிற்கு மெதைல் செம்மஞ்சல் (Mo) பினோத்தலின் (Pn) காட்டிகள் தனித்தனியாக பயன்படுத்தும் போது ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஆரம்ப, இறுதி நிறங்களை எழுதுக.

i. Mo இற்கு.....

ii. P_n இற்கு.....

v) $0.01\ moldm^{-3}\ 25cm^3\ NaOH_{(aq)}$ $0.01\ mol\ dm^{-3}$ செறிவுடைய $CH_3COOH_{(aq)}$ இற்கும் உரிய நியமிப்பில் பெறப்படும் P^H மாற்ற வளையி எவ்வாறு அமையும் என்பதை உரு II **பருமட்டாக** வரைந்து காட்டுக.

e) NH_4NO_3 ன் வெப்பப் பிரிகையில

i) ஒட்சியேற்றல் அரைஅயன் சமன்பாட்டை எழுதுக.

.....

ii) தாழ்த்தல் அரைஅயன் சமன்பாட்டை எழுதுக.

.....

3) a)A, B, C என்பன $C_4H_xN_y$ என்பதை மூலக்கூற்றுச் சூத்திரமாக உடைய மூன்று முதல் அமீன்களாகும் இவை தனித்தனியே $Na\ NO_2$ / dil HCl குளிர்நிலை பிரயோகித்த போது முறையே K, L, M என்ற சேர்வைகள் பெறப்பட்டன. இவற்றுள் Kயும், Lயும் லூக்காஸ் சோதனைப் பொருளிற்கு விடை தரவில்லை, எனினும் m இப்பரிசோதனையில் சிறிது நேரத்தில் கலங்களில் தன்மைகளைக் கொடுத்தது. K, L, M ஐ தனித்தனியாக Cu உடன் வெப்பப்படுத்திய போது முறையே P, Q, R ஐ தோற்றுவித்தன. இங்கு A நேர்ச் சங்கிலி அமைப்பு மட்டும் கொண்டுள்ளது.

1) x, y இன் பெறுமானங்கள் என்ன

X _____ y_____

2) பின்வரும் பெட்டிகளில் B, m, P என்பவற்றின் கடடமைப்புக்களை எழுதுக.

B	M	P

3) Q, R ஐ நேரடியாக வேறுபடுத்தக் கூடிய சோதனைப் பொருள ஒன்று தருக.

.....

4) 3ல் குறிப்பிட்ட சோதனைப் பொருளைப் பாவித்து எவ்வாறு P, Q ஐ வேறுபடுத்தலாம்

.....

.....

5) P ஆனது ஐ NaOH உடன் தாக்கமடைந்து பெறப்படும் விளைவின் IUPAC பெயரை எழுதுக.

.....

.....

b) x=e^n நாட்ட பிரதியீட்டுத் தாக்கம்

y=e^n நாட்ட கூட்டல் தாக்கம்

z= கருநாட்ட கூட்டல் தாக்கம்

1) மேற்படி x, y, z இற்கு பொருத்தமான நீங்கள் கற்ற ஒவ்வொரு தாக்க சமன்பாடுகளை நிபந்தனைகள் யாவும் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதுக.

X

y

z

2) y, z இல் முறையே e^n நாடி, கருநாடி என்பவற்றை எழுதுக.

	E^n நாடி	கருநாடி
Y இல்		×
Z இல	×	

3) b, 1 இல் x, y, z இன் ஏதாவது ஒன்றின் தாக்கப் பொறிமுறையை தெளிவாக எழுதுக.

(14 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழ் பாரம்பரியத்தில் மூழ்கி முத்தெடுத்து பன்முகப் பணிகள் மூலம் அருந்தொண்டாற்றியவர்

பண்டிதர்
க.மயில்வாகனனார்

யாழ்ப்பாணம் பழந்தமிழ்ப் பாரம்பரியத்தில் விளைந்து பழுதறத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்தவர். பன்னூறு நன்மாணாக்கர்களை உருவாக்கியவர். தமிழ்ச் சங்கம் நிறுவித் தமிழ் வளர்த்தவர். செழுமை குன்றாப் பனுவல்களை யாத்தவர். இவ்வாறு தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் அருந்தொண்டாற்றி 89 ஆண்டுகள் இம்மண்ணில் அறிவுசால் பழவிருட்சமாய் மிளிர்ந்த பண்டிதர் க.மயில்வாகனன்ாரின் இயக்கம் ஓய்ந்துவிட்டது.

வட்டுக்கோட்டையில் 1919ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி கதிரேசர் - வள்ளியம்மையார் தம்பதியரின் மகனாகப் பிறந்த மயில்வாகனன் அவர்கள் வட்டுக்கோட்டை பிளவத்தை அமெரிக்க மிஷன் பாடசாலை, வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மூளாய் சைவப்பிரகாச வித்தியசாலை ஆகியவற்றில் ஆரம்ப, இடைநிலைக் கல்வியைப் பெற்றார்.

திருநெல்வேலி பரமேஸ்வரா ஆசிரிய கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற்று ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தால் நடத்தப்பட்ட பண்டித பரீட்சையில் சித்தியடைந்து பண்டிதர் பட்டம் பெற்றார்.

இவரது தமிழ்ப் புலமையின் செழிப்புக்குக் காரணமாக இவருக்குக் கற்பித்த அறிஞர் வரிசையுள்ளது. பண்டிதர் க.பொ. இரத்தினம், நவாலியூர் க.சோமசுந்தரப் புலவர், புலவர்மணி சோ.இளமுருகனார், வித்துவான் ந.சுபபையாபிள்ளை, கலாநிதி கு.சிவப் பிரகாசம், பண்டிதமணி சு.நவநீத கிருஸ்ண பாரதியார், கரணவாய் வித்துவான் க.கார்த்திகேயனார், அளவெட்டி ச.சிதம்பரப்பிள்ளை ஆகியோரிடம் இலக்கண, இலக்கியங்களையும், சைவசமய தத்துவத்தையும் ஐயந்திரிபறக் கற்று, அதன் வழியாகத் புலமை சான்றவராகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டார்.

பண்டிதர் மயில்வாகனனாரின் பன்முகப் பணிகளில் அவர் ஆசிரியராகப் பணியாற்றியமை முதன்மையானது. மலையகம், கொழும்பு, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம் எனப் பல இடங்களிலும் ஆசிரியராகவும் அதிபராகவும் அவர் பணியாற்றியுள்ளார். மலையகத்திலும், நீர்கொழும்பிலும் கற்பித்த காலத்தில் ஏழ்மை நிலையிலிருந்த பல இந்திய வம்சாவளி மற்றும் முஸ்லிம் பிள்ளைகளுக்குத் தமிழ்க் கல்வியளித்து அவர்களை அவயத்து முந்தியிருக்கச் செய்த பெரும் பணி இவருடையது.

தாம் 'தினபதி' பத்திரிகையில் செய்தி ஆசிரியராக இருந்தவேளை நீர்கொழும்பு இளைஞரொருவர் பத்திரிகை நிருபராகப் புதிதாகச் சேர்ந்தபோது, ஏனையவர்களைப் போலல்லாது சரளமான தமிழ் நடையில் இலக்கண வழுவற்று எழுதியதை அவதானித்து விசாரித்தபோது அவர், பண்டிதருடைய மாணவன் எனத் தெரிய வந்ததாக உதயன் பிரதம ஆசிரியர் ஒருதடவை நினைவு கூர்ந்தார்.

பதவியைத் துறந்து தமிழ் வளர்த்தவர்

நீர்கொழும்பில் தமிழ்ப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்த மாநகர சபைத் தலைவர் ச.க.விஜயரத்தினம் முயன்றபோது அங்கு கற்பிக்க ஆசிரியரெவரும் முன்வரவில்லை. அப்போது கொழும்பில் கற்பித்துக்கொண்டிருந்த பண்டிதரை, விஜயரத்தினம் அவர்கள் அணுகி நிலைமையை எடுத்துக்கூறினார். பண்டிதர் தமது பதவியை இராஜினாமா செய்துவிட்டு நீர்கொழும்பில் விவேகானந்தா வித்தியாலயத்தை ஆரம்பிக்க வழி செய்ததோடு அதன் தலைமை ஆசிரியராகவும் பொறுப்பேற்றார். 1954இல் 32 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அப்பாடசாலை இன்று 1,600இற்கும் அதிக மாணவர்கள் கற்கும் விஜயரத்தினம் மத்திய கல்லூரியாக உயர்ந்து நிற்கிறது. 1962இல் குன்றக்குடி அடிகளாரை நீர்கொழும்புக்கு அழைத்து சமயப் பேருரைகளை ஆற்றுவதற்கு வழி கோலியுமுள்ளார்.

'பண்டிதரின் வழிகாட்டலே தன்னை ஒரு பண்டிதையாக்கியது' என்று நினைவு கூர்ந்துள்ள அமரர் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார், 'செந்தமிழில் பேசிப் பேசி இன்பங் காண்பது இவரது இயல்பு' என்றும் புகழ்ந்துரைத்துள்ளார்.

'பாலர் முதல் விருத்தர்வரை யாவரும் பயன்பெறக்கூடிய அரும்பெருந் தமிழ் நூல்களை இயற்றியதோடல்லாமல் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தின் செயலர், தலைவராகப் பணியாற்றியதோடு பிரவேச, பால பண்டித, பண்டித வகுப்புகளையும் நடத்திப் பல அறிஞர்களை உருவாக்கியவர்' என சைவபரிபாலனசபையின் முன்னாள் தலைவர் சிவ.இராசேந்திரன் பண்டிதரின் பெருமையைக் கூறியுள்ளார்.

பண்டிதர் இலக்கண சுத்தமாக, ஆற்றொழுக்காகப் பேசுவதிலும் வல்லவர். இலங்கை முழுவதிலும் தமிழ் மக்கள் வாழுமிடங்கள் பலவற்றிலும் இவர் சமய, இலக்கியச் சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார். கருத்தரங்கு, பட்டிமன்றம், கவியரங்கு ஆகியவற்றில் பங்குபற்றியும் தலைமை யேற்றும் அணி செய்துள்ளார். வானொலிப் பேச்சுக்களையும் நிகழ்த்தியுள்ளார்.

எழுத்துப் பணி பன்முகமானது

பண்டிதருடைய எழுத்துப் பணியும் பன்முகப்பாங்கானது. பல நூல்களையும் அவர் ஆக்கியளித்துள்ளார். இலங்கை முழுவதிலும் உள்ள பல ஆலயங்களுக்கும் சிறுபிரபந்தங்களை அதிகளவில் இவர் யாத்துள்ளார். அவ்வகையில் பதிகம், பிள்ளைத்தமிழ், ஊஞ்சல், சதகம், இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, செஞ்சொல் மணிமாலை, அம்மானை, போற்றிப் பஃறொடை முதலான பிரபந்தங்கள் பல ஆலயங்கள் பேரிலும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. அம்மானை நாவலர் பேரில் பாடப்பட்டதாகும்.

அத்துடன் இரு தல புராணங்களையும் அவர் பாடியுள்ளார். வட்டுக்கோட்டை விசுவேசர் புராணம், வியாவில் ஐயனார் புராணம் ஆகியவையே அவையாகும்.

அவை மட்டுமன்றி திக்கைத் திரிபந்தாதி, தன்னையமக அந்தாதி ஆகிய நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார்.

ஒரு தமிழாசிரியராக அவர் விளங்கியமையால் மாணவர்கள் பயன்பெறும் வண்ணம் பல நூல்களை எழுதியுள்ளார். சிறுவர் இலக்கியம் என்ற வகையில் குழந்தைகளுக்கான இன்பத் தமிழ்ப் பாடல்கள் நூலை எழுதிய அவர் மாணவர் செந்தமிழ்க் கட்டுரைகள், குழந்தைகளுக்கான இன்பத்தமிழ்க் கட்டுரைகள், சங்கநூல்களில் வரும் செஞ்சொல் லோவியங்கள், தமிழமுதம் பகுதி I, காயத்திரி மந்திரம் முதலான கட்டுரை நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். பாடத்துணை நூல்கள், பயிற்சி நூல்கள் பலவற்றையும் இவர் எழுதி வெளியிட்டுள்ளார். தமிழ், சமயம் மட்டுமன்றி, சுற்றாடற்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம் முதலிய பாடத்துறை சார்ந்தும் இவர் நூல்களை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் ஸ்ரீகாந்தா புத்தகசாலை, கு.வி.அச்சகம் ஆகியவற்றின் வெளியீடுகள் பலவற்றுக்குக் காலாக இருந்து வெளியிட்ட பெருமை இவரைச் சாரும். இந்நிறுவனங்கள் மூலமாக வெளியிடப்பட்ட பாடநூல்கள் பலவற்றில் பண்டிதரின் பங்களிப்பு பிரதானமாய் அமைந்துள்ளது. இந்நிறுவனங்கள் மூலம் சிவராத்திரி புராணம், கந்தபுராணம் உற்பத்திக் காண்டம், பன்னிரு திருமுறை, விவேக சிந்தாமணி, வேதாகமம், திருவாசகம் முதலிய நூல்களைப் பதிப்பித்து உலவ விட்ட பணியையும் இவர் ஆற்றியுள்ளார்.

அவரது புலமையும் சேவையும் நினைவழியாதிருக்கும்

மயில்வாகனன் அயல் வாழ்ந்திடச்
செயல் வாகனச் சிரமேறினன்
புயல் மாரியிற் பொழி பாவினன்
இயல்பாகவே இனிதானவன்

என அமரர் பண்டிதர் க.சச்சிதானந்தனால் போற்றப்பட்ட மயில்வாகனனார் இன்றுவரை நின்று நிலைக்கும் பண்டித பாரம்பரியத் தொடர்ச்சிக்கு வழிகோலிய முக்கியமையமாக விளங்கியுள்ளார். அன்னாரின் இழப்பின் வெற்றிடம் பெரிது; நிரப்ப முடியாதது. எனினும் அவரால் செழுமை பெற்ற அவரது மாணாக்கர் அவரது பணிகளை முன்கொண்டு செல்வர்.

வானன்

கல்விச்சுடர்.....(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

c) SP கலப்பிற்குட்பட்ட C அணு ஒன்றுடன் தொடர்புடைய பின்வரும் சக்தி வரைபடங்களை பூர்த்தி செய்க.

(IS ஒழுக்கை கருத வேண்டாம்)



d) தரப்பட்ட ஐதரோகாபன் சேர்வை ஒன்றில் பின்வருமாறு 5C கள் உள்ளன.



1) இச் சேர்வையின் கட்டமைப்பை எழுதுக.

.....

.....

2) இது {கேத்திர கணித / ஒளியியல்} சமபகுதியத்தைக் காட்டாது. (பொருத்தமற்ற சொல்லை வெட்டுக.)

.....

4) a) $KoH_{(aq)}$, CH_3CH_2OH, CCl_4, Al_2O_3, NH_3, $Br_{2(-l)}$, உயர் வெப்பம் உலோகக் குழாய், CH_3Cl, ஈதர், "", Na என்பவற்றை மட்டும் தேவைக்கேற்ப பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதன் மூலம் பின்வரும் மாற்றீட்டை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதை காட்டுக.



b) CH_3Cl, H^+, H_2, Mno_4^-, Ni, "", Cu குழாய், குளிர், $AlCl_3$ என்பவற்றை மட்டும் பாவித்து பின்வரும் மாற்றீட்டை பூர்த்தி செய்க.△

1)



2) இப்பல் பகுதியத்தின் குறிப்பான பெயர் என்ன?

.....

c) C_6H_6, CH_3CH_2OH, $CH_2=CH_2$, குளிர், Al_2O_3, Mno_4^-, CH_3COOH, H+, PCl_5, $AlCl_3$, Zn, Br_2, Fe, Hg, ConHCl, diH_2So_4 மட்டும் பாவித்து



*(ஜி.சீ.ஏ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் சகல மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற **கல்விச்சுடர்** ஆசிரியர் குழாம் வாழ்த்தி நிற்கின்றது)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்: 222 9944

வரலாற்று ரீதியிலான உண்மைகளை மறுத்து தமிழ்த் தேசியத்தை புறக்கணிப்பது ஏன்?

இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழர் தரப்பின் நியாயபூர்வமான அபிலாஷைகளைப் புறந்தள்ளி, கொழும்பு அரசின் தீவிரப் போக்கு நிலையைத் தூக்கிப்பிடித்துத் தாங்கி நிற்கும் இந்தியாவும் ஏனைய முக்கிய சில மேற்கு நாடுகளும் அதை ஒட்டிக் கூறும் ஒரு விளக்கம் விநோதமானது.

இலங்கையின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டினையும் தாங்கள் பங்கம் பட்டுப் போக அனுமதிக்க முடியாது என்றும் -

அதன் காரணமாக ஐக்கிய இலங்கைக்குள் காணப்படக் கூடிய தீர்வு ஒன்றுக்கு மட்டுமே தாங்கள் ஒத்துழைக்க முடியும் என்றும் -

அந்த நாடுகள் தரப்பில் விளக்கம் - வியாக்கியானம் - கூறப்படுகின்றது. குறிப்பாக இந்தியா திரும்பத் திரும்ப இதனையே கூறி வருகின்றது.

ஆனால் இலங்கைத் தீவு என்பது தனித் தனி மொழி, பண்பாடு, வாழ்க்கை முறை, வாழிடத் தாயகம் ஆகியவற்றைக் காலம் காலமாக வெவ்வேறாகக் கொண்ட இரு தேசியங்களின் பூமி என்பதும் அந்தத் தீவில் தமிழரின் தேசியத்திற்கான இறைமையும் சிங்களவரின் தேசியத்திற்கான இறைமையும் தனித்தனியாக நிலைபெற்று வந்துள்ளன என்பதும், மேற்படி விளக்கத்தைக் கூறும் சர்வதேச சமூகத்திற்குத் தெரியாத - புரியாத - விடயங்கள் அல்ல.

எனினும் பின்னோக்கிப் பார்த்தால் சரித்திர காலம் வரை நீட்சி பெற்று தொடர்ந்து வேரோடிச் செல்லும் தமிழ்த் தேசியமும் அதன் இறைமையும் இத்தீவில் தனித்துவமாக நிலைபெற்று, நீடித்து, உறுதியாக விளங்கி வந்தமையை சர்வதேசம் இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இலங்கைத் தீவை ஆக்கிரமித்து தமிழர் -சிங்களவர் ஆகிய இருதரப்பினரதும் தேசியங்களையும் இறைமைகளையும் கபளீகரம் செய்து தன்னுடைய மேலாதிக்க ஆட்சியை நிலைநிறுத்திய ஆங்கில காலனித்துவம், தனது நிர்வாக வசதிக்காக அதுவரை தனித்தனியாக ஆளப்பட்டு வந்த இலங்கையின் தமிழர் தேசத்தையும் சிங்கள தேசத்தையும் 1833இல் ஒன்றாக்கி ஒற்றையாட்சி முறையைத் திணித்தது. அதன் தொடர் நிகழ்வாகவே இப்போதைய துன்பியல் கொடூரங்களை இலங்கைத் தீவு அனுபவித்து நிற்கின்றது.

ஆங்கில ஆக்கிரமிப்பாளர்களால் வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டு பின்னர் சிங்களத் தேசியத்திடம் அடிமைப்படுத்தப்பட்ட தமிழர்களின் இறைமையை மீட்டெடுப்பதற்காக தமிழர்கள் நடத்தும் போராட்டத்தை - அதன் பின்னணியில் புதைந்து கிடக்கும் சரித்திர நியாயங்களையும் நீதியையும் புறக்கணித்து - 'பிரிவினை வாதம்' என்று முலாம் பூசுகின்றது மேற்குலகம். சிங்கள தேசத்தின் இறைமையிடம் அடிமைப்படுத்தப்பட்டு தமிழ்த் தேசியம் சிறைவைக்கப்பட்டிருப்பதை மறந்து - மறுத்து - இலங்கையின் தேசியத்தையும் இறைமையையும் பாதுகாக்கும் கடமை குறித்து சர்வதேச சமூகம் பிதற்றுகின்றது.

சரி, இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டையும் இறைமையையும் பாதிக்க விட்டுவிடக் கூடாது என்று கூறி, அதற்காக இப்போது கொடூர யுத்தம் ஒன்றைத் தமிழர் தேசம் மீது ஏவி விட்டிருக்கும் சிங்களவர் தேசத்தின் செயற்பாடுகளுக்கும் யுத்த முனைப்புக்கும் முழு ஆதரவு காட்டும் இந்தியாவும் மேற்குலகும் இந்த இறைமை, ஆள்புல ஒருமைப்பாடு போன்ற விடயங்களில் எப்படி நடந்து கொள்கின்றன?

தமக்கு வாய்ப்பான-வசதியானவிதத்திலேயே,'இறைமை'க்கும் 'ஆள்புல ஒருமைப்பாட்டு'க்கும் அவை விளக்கம் கொடுக்கின்றன. அவற்றைப் பொறுத்தவரை பிறநாட்டின் அல்லது தேசியத்தின் 'இறைமை' என்பது தத்தமது நாட்டின் நலனின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாகவே உள்ளது.

மேற்குப் பாகிஸ்தானில் இருந்து கிழக்குப் பாகிஸ்தானை துண்டாடி பங்களாதேஷை உருவாக்குவதற்காகப் பாகிஸ்தான் மீது இந்தியா பெரும் போர் தொடுத்தபோது பாகிஸ்தானின் இறைமையும், ஆள்புல ஒருமைப்பாடும், ஐக்கியமும் புதுடில்லியின் கண்களுக்குப் படவே இல்லை.

சுமார் எட்டு, ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஸேர்பியாவின் இறைமை, ஆள்புல ஒருமைப்பாடு குறித்தெல்லாம் பேசிய அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்குலகு, சில மாதங்களுக்கு முன்னர்தான் அந்த இறைமையைத் துண்டாக்கி, ஸேர்பியாவின் ஆள்புல ஒருமைப்பாட்டைக் குலைத்து கொஸோவோ என்ற தேசத்தின் - தேசியத்தின் - இறைமையை அங்கீகரித்தது.

அப்போது அந்த உடைவுக்கு கால்கோள் இட்ட மேற்குலகு இப்போது ஜோர்ஜியாவின் ஆக்கிரமிப்புப் பிடிக்குள் ஒசப்டிய மற்றும் அப்காசிய மக்களின் இறைமை அடிமைப்படுவதற்கு உத்வேகமும் உதவியும் கொடுக்கிறது.

மறுபுறத்தில், கொஸோவோ தனித்தேசமாகி, அதன் தனித்துவ இறைமையை பிரகடனப்படுத்துவதை முற்றாக எதிர்த்து நின்ற - எதிர்த்து நிற்கின்ற - ரஷ்யாவோ, இப்போது ஒசப்டிய மற்றும் அப்காசியாவை மேற்குக்குச் சார்பாக நிற்கும் ஜோர்ஜியாவின் பிடியிலிருந்து விடுவிக்க ஒரே முனைப்பாக முயல்கிறது. ஒசப்டியாவின் தனி இறைமையை நிலைப்படுத்தி, உறுதிப்படுத்துவதற்காக ரஷ்யா தனது படைபல வலிமையையே நேரடியாகவே பிரயோகிக்கின்றது.

இவற்றில் இருந்து தெரிவது - புரிவது - என்ன?

சர்வதேச நாடுகளின் - குறிப்பாக வல்லாதிக்க சக்திகளின் - தேவைகள், விருப்பங்கள், நலன்கள் மற்றும் அவற்றுடனான அணி சேரல்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே பிற சிறிய தேசியங்களினதும், தேசங்களினதும் இறைமை, ஆள்புல ஒருமைப்பாடு ஆகியன தீர்மானிக்கப்படுகின்றன. நீதி, நியாயம், வரலாற்றுப் புறநிலைகளின் அடிப்படையிலான உண்மைகள் என்பவற்றின் அடிப்படையில் அல்ல என்பதே.

இலங்கை விவகாரத்திலும் ஈழத்தமிழர்களின் தேசியம், இறைமை, தமிழர் தேசத்தின் ஆள்புல ஒருமைப்பாடு ஆகியவற்றினால் மேற்குலகிற்கு விசேட நன்மைகள் ஏதுமில்லை. அந்த இறைமையை நிலைநிறுத்துவதன் மூலம் மேற்குலகின் தேவைகள், விருப்பங்கள் எவையும் நிறைவேறப் போவதுமில்லை. அத்தோடு தமிழ் தேசத்துக்கு வெளியே எந்தச் சக்தியோடும் அணி சேராமல், கூட்டிணைவு கொள்ளாமல் தனித்தே - சுயாதீனமாகவே - தமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள் ஈழத் தமிழர்கள்.

அதனால்தான் தமிழர்களின் தேசியம், தேசம், இறைமை ஆகியவை குறித்து அலட்டிக் கொள்ளாமல் தள்ளி நிற்கின்றன சர்வதேச சக்திகள்.

கப்பலில் சமாசம் எடுத்து வந்த சிமெந்து நாளை முதல் ப.நோ.கூ.சங்கங்களுக்கு விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சமாசம் கொழும்பிலிருந்து தருவித்த சிமெந்து நாளை திங்கட்கிழமை தொடக்கம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளன.

மேற்படி சமாசம் கொழும்பில் இருந்து 'றுகுணு' கப்பலில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் 40 ஆயிரம் பைக்கற் சிமெந்தைத் தருவித்திருந்தது . இந்தச் சிமெந்து குடாநாட்டில் உள்ள 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பகிர்ந்து ஒதுக்கப்பட்டுள்ளது. அவை நாளை திங்கட்கிழமை தொடக்கம் பைக்கற் ஒன்று ஆயிரத்து 600 ரூபா வீதம் விநியோகிக்கப்படவுள்ளன.

வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் தலா 20 பைக்கெட்டுக்களுக்குக் குறையாமல் விநியோகிக்கப்படும் என்றும் -

தத்தம் பிரிவு கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சுக் கடிதத்துடன் வருவோருக்கே விநியோகிக்கப்படும் என்றும் - சமாசத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் சிமெந்து விநியோகிக்கப்படும்.

சங்கங்களின் சிமெந்தைப் பெற்றுக் கொள்ளும் பயனாளிகள் அவற்றை விற்பனை செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (1-202-224)

வன்னி நிலைமை குறித்து அரச அதிபர்களுடன் அமைச்சர் டக்ளஸ் கலந்துரையாடினார்

கொழும்பு, ஓக.17

வன்னிப் பெரு நிலப்பரப்பின் தற்போதைய நிலைமை குறித்து அந்தப் பிரதேச அரச அதிபர்களுடன் வடக்கு விசேட செயலணிக் குழுத்தலைவரும் சமூக சேவைகள் மற்றும் சமூநலத் துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் கலந்துரையாடினார்.

சமூகசேவைகள் அமைச்சில் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் முல்லைத்தீவு அரசஅதிபர் இமெல்டா சுகுமார், கிளிநொச்சி அரச அதிபர் நா. வேதநாயகன், வவுனியா அரச அதிபர் எஸ்.சண்முகம், மன்னார் அரச அதிபர் எஸ்.நீக்கிலாப்பிள்ளை ஆகியோர் பங்குபற்றினர்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் தற்போதைய நிலைமை, பொதுமக்களின் இடம்பெயர்வு, இடம்பெயர்ந்த மற்றும் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான நிவாரண விநியோகம், உள்ளிட்ட பல விடயங்கள் விரிவாக கலந்துரையாடப் பட்டுள்ளன.

நேரடியாக அரசாங்கத்தினாலும் அதே வேளை அரச சார்பற்ற சர்வதேச தொண்டு நிறுவனங்களினாலும் வழங்கப்படும் உதவிகள் குறித்து புள்ளி விவரங்களுடன் எடுத்துரைத்த அரசாங்க அதிபர்கள், தற்போதைய நிலைமையில் அரச நிர்வாக அதிகாரிகள் என்ற வகையில் தம்மால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே செயற்பட முடியும் என்பதை எடுத் துக் கூறியதுடன், அரசுத் தலைமையினாலேயே பொது மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதையும் விளக்கிக் கூறினார்கள்.

மற்றொருபுறம் மக்களின் இடப்பெயர்வு காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கல்விளான், அம்பலப்பெருமாள்குளம், வன்னிவிளாங்குளம், கோட்டகட்டி ஆகிய பிரதேசங்களிலுள்ள 4 ஆயிரம் ஏக்கர் வயலும், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரியநாகன்குளத்தில் 400 ஏக்கரும், வன்னேரிக்குளத்தில் 800 ஏக்கருமாக வயல் நிலங்கள் அறுவடை செய்ய முடியாத துரதிர்ஷ்ட நிலைமையினையும் தெரியப்படுத்தினார்கள்.

அரசாங்க அதிபர்களின் தகவல்களையும் கோரிக்கைகளையும் அவதானத்துடன் கேட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்ற வகையில் மோதலின் போது பாதிப்புக்குள்ளாகும் பொதுமக் களை பாதுகாக்க வேண்டிய தார்மீக பொறுப்பும் கடமையும் தனக்குண்டு என்பதைதெளிவுபடுத்துவதுடன் அரசாங்க அதிபர்களினால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற் றும் சகல விவரங்கள் குறித்தும் தான் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் உறுதியளித்தார்.

தென்மராட்சியில் அனர்த்த நிவாரண கொடுப்பனவுக்கு 16 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் தற்செயல் அனர்த்த நிவாரணத்திற்கு விண்ணப்பித்தவர்களில் 16 பேருக்கான கொடுப்பனவு பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

முதற் கட்டமாக தலா ரூபா 10 ஆயிரம் வீதம் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும், பயனாளிகள் தமது தேசிய அடையாளஅட்டை, பங்கீட்டட்டை ஆகியவற்றுடன் வருகைதருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் இக் கொடுப்பனவு பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு-

மகாலிங்கம் புஷ்பரத்தினம்- மட்டுவில் வடக்கு, குணரத்தினம் சங்கர் - கைதடி கிழக்கு, வைரவன் ரதிபதன் - தவசிகுளம், தங்கராசா கிருஷ்ணகுமாரி - கச்சாய்தெற்கு, கணபதிப்பிள்ளை வீரகத்திப்பிள்ளை- தாவளை இயற்றாலை, ரவிச்சந்திரன் கிருஸ்ணகுமாரி - விடத்தற்பளை, சின்னையா யோகராசா - கெற்பேலி, பஜீபன் லீலாவதி - மீசாலை கிழக்கு, சின்னையா தேவராசா - கச்சாய் தெற்கு, நாகரத்தினம் நந்தகுமார் - மீசாலை தெற்கு, இரத்தினம் மகேஸ்வரி - மறவன்புலோ மேற்கு, பிரேமநாதன் அருளானந்தராணி - மறவன்புலோ மேற்கு, சிதம்பரப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை - கெற்பேலி மேற்கு, முருகன் சிட்டாளன் - விடத்தல்பளை, மருதலிங்கம் ஸ்ரீதரன் - கச்சாய் தெற்கு, செல்வராசா குலேந்திரராணி- நுணாவில் மத்தி.

இயற்கை அனர்த்தங்களின் போது வீடு வீழ்ந்தது மற்றும் வீடு எரிந்தது ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோருக்கு இக் கொடுப்பனவு வழங்கப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

சி.டி.எம்.ஏ. பாவனையாளர்களில் இதுவரை 600 பேருக்கு இணைப்புக் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஓக.17

குடாநாட்டில் சி.டி.எம்.ஏ. தொலைபேசிப் பாவனையாளர்களில் பத்து வீதமானவர்களுக்கு மீளவும் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது என்று 'ரெலிக்கொம்' வட்டாரங்கள் தெரிவித்தன .

- குடாநாட்டின் சகல பகுதிகளிலும் அரச திணைக்களங்கள் உட்பட பொது மக்களுக்குமென 7 ஆயிரம் இணைப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த இணைப்புக்களின் சேவை கடந்த இரண்டு மாத காலமாக துண்டிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் பொலிஸ் அனுமதி (கிளியரன்ஸ்) மீள் விண்ணப்பம் கையளிப்பவர்களுக்கே இணைப்பு வழங்கப்படும் என்று 'ரெலிக்கொம்' நிறுவனம் தெரிவித்திருந்தது. அதற்குரிய விண்ணப்பபடிவத்தையும் பாவனையாளர்களுக்கு விநியோகித்திருந்தது.

பொலிஸ் அனுமதிப்பத்திரங்களைப் பூர்த்தி செய்து கையளித்தவர்களின் விவரங்கள் பலாலி படைத் தலைமையகத்திற்கு அனுப்பப் பட்டிருக்கின்றன. இந்த வகையில் பொலிஸ் அனுமதிப் பத்திரங்களை கையளித்தவர்களில் ஆயிரத்து 500 பேரின் விவரங்கள் பலாலிக்கு அனுப்பப்பட் டிருந்தன.

முதற்கட்டமாக 600 பேருக்கு இணைப் புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனை யோருக்கும் படிப்படியாக இணைப்புக்கள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக 'ரெலிக்கொம்' வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. (அ-1-86)

பருத்தித்துறை நகரப் பொதுச்சந்தை: முந்திய இடத்திலேயே நிர்மாணிக்கப்படும் முதற்கட்ட வேலைகள் அனேகமாக அடுத்த வாரத்தில்

கரவெட்டி, ஓக.17

பருத்தித்துறை நகர பொதுச்சந்தைக் கட்டடம் மீள் நிர்மாணிக்கப்படவுள்ளது. சந்தைக் கட்டடம் அது முன்னர் இருந்த இடத்திலேயே நிர்மாணிக்கப்படும் என்று பிரதேச செயலாளர் இரா வரதீஸ்வரன் தெரிவித்தார்.

முதற்கட்ட வேலைகள் அனேக மாக அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான மீள் நிர்மாணத் திட்டத்தின்கீழ் இக்கட்டடம் புனரமைக்கப்படவுள்ளது. மாடிக்கட்டடத்தைக் கொண்ட இந்தச் சந்தைக்கான மொத்த மதிப் பீடு 16 மில்லியன் ரூபா எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தள கட்டட வேலைகள் அடுத்த வாரம் அளவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான ஒதுக்கீடு சுமார் 8 மில்லியன் ரூபா எனவும் மதிப்பிடப்படுகின்றது. (அ-02-70)

பருத்தித்துறை கரையோரப் பிரதசேத்தில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினை தீர செஞ்சிலுவைச்சங்கம் உதவும்

கரவெட்டி, ஓக.17

பருத்தித்துறை கரையோரப் பிரதேசத்தில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினையை நீக்கும் பொருட்டு செஞ்சிலுவைச் சங்கங்களின் சர்வதேச சமாசம் நீர்வழங்கல்திட்டம்ஒன்றை நடைமுறைப் படுத்தவுள்ளது.

இத் திட்டத்தின் மூலம் குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கு அதிகமான கரையோர மக்கள் பயனடைவார்கள் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

செஞ்சிலுவைச் சங்கங்களின் சர்வதேசப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று இந்த வாரம் அங்கு நேரில் சென்று ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று பருத்தித்துறை பிரதேச செயலாளர் இரா.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

இப் பகுதியில் மிக நீண்ட காலமாக குடிதண்ணீர் பிரச்சினை நிலவி வருகின்றது என்றும் -

சுமார் 25 வருடங்களுக்கு முன்னதாக அலன் தம்பதிகளினால் முன்னெடுக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டமே தற்போது செஞ்சிலுவைச் சங்கங்களின் சர்வதேச சமாசத்தால் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும்- தெரிவிக்கப்பட்டது. (அ-02-70)

நாளை

ஆவணி 2	18.08.2008 திங்கட்கிழமை
திதி:	துதியை பி.இ. 02.53 வரை
நட்சத்திரம் :	சதயம் பி.ப. 04.08 வரை
சுபநேரம் :	12.06 - 01.35
ராகுகாலம் :	07.35 - 09.05

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்.மத்தியஸ்தர் சபையின் 3ஆவது ஆண்டு தின நிகழ்வு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.
இந்நிகழ்வில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ்.நீதிவான் இ.வசந்தசேனன், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், மத்தியஸ்தர் சபை தவிசாளர் வி.ஸ்ரீசக்திவேல் ஆகியோர் உரையாற்றுவதை முதல் மூன்று படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை நாலாவது படத்திலும் காணலாம். (படங்கள்- லக்ஸ்மன்)

கச்சதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணத்தில் ஈடுபடவிருந்த கட்சியின் 33 தொண்டர்களையும் பொலிஸார் கைது செய்தனர். கட்சியின் மாநில பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமையில் சென்ற தொண்டர்களே கைதுசெய்யப்பட்டனர்.

இதற்கு முன்னதாக கட்சியின் மாவட்ட செயலாளர் எஸ்.பிரபாகரன், மாநில இளைஞர் அணி செயலாளர் ஆ.சரவணன் ஆகியோர் பாம்பனில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சகலரும் மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

(அ-1)

ஐந்தாம் தரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை யாழ்ப்பாணக்குடாநாட்டில் இருந்து சுமார் 10,000 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்துக்கென 81 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு 27 பரீட்சைநிலையங்களும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 21 பரீட்சை நிலையங்களும் அமைக்க ஏற்பாடாகி இருந்தது.

மன்னார் மாவட்டத்துக்கென 23 பரீட்சை நிலையங்களும் வவுனியா மாவட்டத்துக் கென 31 பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட ஏற்பாடாகியிருந்தது.

கிளிநொச்சியில் விசேட ஏற்பாடு

இதேவேளை-

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து இடம் பெயாந்து கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் வசிக்கும் தரம் - 5 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்ற விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் அனுமதியுடன் நகரில் உள்ள பாடசாலைகளில் அவர்கள் தோற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நகரில் உள்ள பாடசாலைகளில் விசேட நிலையங்களை அமைத்து அவர்கள் தோற்ற வசதி செய்யப்பட்டுள்ளது.

பரீட்சைக்குத் தோற்றும் மனோநிலையில் இல்லை

இதே ஏற்பாட்டின் கீழ் ஜீ.சீ.ஈ. (உயர் தர) பரீட்சையும் நடைபெற்று வருகின்றது.

இடம் பெயர்வு காரணமாக மாணவர்கள் பரீட்சைகளில் தோற்றும் மனநிலையில் இல்லை அதிகமானோர் பரீட்சைக்கு தோற்றுவதில்லை என்று அரசஅதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

(1)

ஓரிடத்தில் தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துள்ளார்கள்.

துணுக்காய், பாண்டியன் குளம், முழங்காவில், ஜெயபுரம், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், அக்கராயன், ஸ்கந்தபுரம் ஆகிய கிராமங்களில் இருந்து மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளில் தங்கியுள்ளனர். அவர்களுடன் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்தவர்களும் தங்கியுள்ளனர்.

உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்க வசதியுள்ளவர்களைத் தவிர்ந்த ஏனையோர் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட் டிருந்தனர்.

பாடசாலைகளில் பரீட்சைகள் இடம் பெற ஆரம்பித்ததை அடுத்து இடம் பெயர்ந்தவர்களை கண்டாவளை, வட்டக்கச்சி, கல்மடு போன்ற பகுதிகளில் சிறு குடிசைகள் அமைத்து தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மரநிழல்களில் தங்கியிருந்தவர் களுக்கு முன்னுரிமை அடிப்படையில் குடிசைகள் அமைக்க பொருள்கள் வழங் கப்படுகின்றன.

அரச சார்பற்ற அமைப்புகள் இனங்கண்டு உதவி

ஐ.நா மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் மக்களின் தேவைகளை இனங்கண்டு உதவிகளைச் செய்துவருகின்றன.

உலக உணவுத்திட்டத்தின் கீழ் கிடைத்துள்ள உலர் உணவுப் பொருள் உதவிகளைக் கொண்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்கப் பட்டு வருகின்றது.

கள நிலைமை மோசமாக மோசமாக, மக்களின் இடம்பெயர்வும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. உடைமைகளை இழந்த நிலையில் அவர்கள் பேரவலத்தை சந்தித்துள்ளார்கள்.

வைத்திய சேவைகள் பாதிப்பு

மக்களின் இடம்பெயர்வு அவலம் ஒருபுறமிருக்க அவர்களுக்குரிய வைத்திய சேவைகளும் கேள்விக்குறி நிலையில் உள்ளன.

வைத்தியசாலைகளின் செயற்பாட்டுக்கு வழங்கப்பட்ட எரிபொருளின் (டீசலின்) அளவு குறைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையின் தேவைக்கு மாதாந்தம் 15 ஆயிரம் லீற்றர் டீசல் வழங்கப்பட்டுவந்தது. கடந்த ஜனவரி தொடக்கம் அந்த அளவு 6250 லீற்றராக குறைக்கப்பட்டது. தற்போது மேலும் 2500 லீற்றராக குறைக்கப்பட்டு விட்டது.

இதன் காரணமாக கிளிநொச்சி வைத்தியசாலை உரிய அளவில்இயங்க முடியாத நிலை தோன் றியுள்ளது. - என்றார் அவர்.

(அ-1)

யாழ்.முன்னரங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாச்சிக்குடாவிலும் கடும் மோதல்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் நாச்சிக்குடா மற்றும் பணிக்கன்மடுப் பகுதியில் வெள்ளிக் கிழமை படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

முழங்காவிலில் இருந்து முன்னேறும் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று இராணுவத் தரப்பு அறிவித்தது.

அந்தப்பகுதியில் 25மிதிவெடிகளை படையினர் மீட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(அ-01)

பாலமோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த புதன்கிழமை தொடக்கம் நேற்று முன்தினம்பிற்பகல் வரை பாலமோட்டை, குஞ்சுக்குளம் பகுதிகளில் மூன்று முனைகளில் படையினர் ஊடுருவல் தாக்குதல் நிகழ்த்தினர்.

ஊடுருவிய படையினர் மீது தீவிர எதிர் தாக்குதலை விடுதலைப்புலிகள் நடத்தினர். இதில் படையினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். அதிகாரிகள் உட்பட 15 படையினர் இத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். 20 இற்கும் அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர்.

இத் தாக்குதல்களின் பின்னர் அப் பகுதியில் தேடுதலை நடத்திய விடுதலைப் புலிகள் படைப்பொருள்களை கைப்பற்றி உள்ளனர் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

படைத்தரப்பின் தகவல்

இதேவேளை-

பாலமோட்டைப் பகுதியில் படையினர் விடுதலைப்புலிகளை விரட்டி அடிக்கும் பல தாக்குதல்களை வெள்ளிக்கிழமை நடத்தினர். இத் தாக்குகுதலில் ஏழு புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இரண்டு புலி உறுப்பினர்களின் சடலங்களை படையினர் மீட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையில் மூன்று படையினர் மிதிவெடியில் சிக்கி காயமடைந்தனர் என்றும் படைத் தரப்பு அறிவித்தது. (அ-1)

சந்திரகிரகணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையில் அதிகாலை 4 மணியளவில் பூரண சந்திர கிரகணம் தென்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது

சந்திரகிரகணத்தை ஆர்வலர்கள் பலரும் வெற்றுக்கண்களினால் பார்த்தனர். (அ-1)

லண்டன் வீதிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு சிகிச்சை பலன் அளிக்காத இளைஞர் உயிரிழந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.இவரது கொலை தொடர்பாக 20 வயதான மற்றொரு தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டதாக குரோய்டஸ் பொலிஸார் தெரிவித்தனர். (அ-02)

வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தனர்.இத்தகவலை தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது. இச்சம்ப வம் நேற்றுக் காலை 10மணியளவில் நடைபெற்றது.

விடுமுறையில் வீடு திரும்பிய படையினரை ஏற்றிச் சென்ற பஸ்ஸே கிளைமோரில் சிக்கிக் கொண்டது. (அ-02)

வீதியில் நடந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"சார்க்" மாநாட்டு மண்டபத்திலிருந்து தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு கொழும்பு கொம்பனி வீதியால் நடந்து சென்றுள்ளார். அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு விடயத்தில் இடம்பெற்றுள்ள ஓட்டை குறித்து நாம் கருத்து சொல்லவிரும்பவில்லை. ஏனெனில் அது தீவிரமான விடயம்.

ஆனால் அவர் வெள்ளைவான் கடத்தல் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்கக் கூடிய சூழ்நிலை அங்கு நிலவியிருக்கிறது.

ஏனெனில் நாராயணன் நடந்து சென்ற கொம்பனி வீதி பல வெள்ளைவான் கடத்தல்கள் நடைபெற்ற இடம். அத்துடன் அவருக்கு சிங்களம் பேசத் தெரியாது. கொஞ்சம் கறுப்பு நிறம் வேறு. அவரிடம் சிறிலங்கா தேசிய அடையாள அட்டையோ காவல் துறையில் பதிவு செய்த பத்திரமே இல்லை.

இப்படியான அடையாளங்களுடன் கொழும்பில் நடமாடும் எந்தத்தமிழரும் விசாரணை எதுவுமின்றி வெள்ளை வானில் கடத்தப்பட்டு விடுவார்கள். இது தான் இங்குள்ள நிலைமை- என்று உள்ளது. (அ)

மரண அறிவித்தல்

கதிரிப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற உதவி நிர்வாக செயலாளர்- ஸ்ரீலங்கா ரெலிகொம்)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் நேற்று (16.08.2008) சனிக்கிழமை மாலை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை- இராசம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும், கண்மணியின் அன்புக் கணவரும், ராசா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கணேஷ், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வனஜா மணி, ஜெயாமணி, மணிசேகர், சிவரமணி, பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாதன், செந்திவேல், குமுதினி ஆகியோரின் மாமனாரும் சிவாணி, சிவாகர், நீரா, அகல்யா, மதுஷன், மகிஷா, நிகிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை, ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 20.08.2008 புதன்கிழமை பி.ப. 2.30 மணிக்கு கொழும்பில் இடம்பெறும்.

இவரது அஞ்சலி நிகழ்வுகள் வல்வெட்டியிலுள்ள அன்னாரது வீட்டில் இன்று இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பேரன்மக்கள்-
க.சுரேஸ்குமார்,
க.வசந்தகுமார்,
க.ஜீவகுமார்,
க.யசோகுமார்,
க.மிதுனலோசன்.

20 ½, உருத்திர மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு.
0112501301

மருதடி வித்தனை லேன்(தூபி வீதி),
வல்வெட்டி.
021 226 3327

க.பொ.த. (உ/த) 2008
நாடகமும் அரங்கியலும்
வழிகாட்டல் - கருத்தரங்கு
ஆரியர்:- P. கணேஸ்
இடம் :- புலோலி
மெ.மி.த.க. பாடசாலை
காலம்:- 18.08.2008
(திங்கள்)
நேரம்:- 9 - 12
மாணவர்களை தவறாமல் அழைக்கிறோம்.
அதிபர், யா/ அம்பன்
அ.மி.த.க. பாடசாலை

G.M.K communication
102, Vannam Rd, Nallur.
யாழில் மிகக்குறைந்த விலையில்
கணனி பாகங்களை பெற்றுக்கொள்ளுங்கள்
DVD rom writer (sumsang) - 3700/=
(Dual layer)
processer(intel 1.8 dualcore)-8100/=
Mother board(Foxconn) - 5900/=
Web cam with head set - 4000/=
17"Lcd Moniter (sumsang)-22500/=
Hard disk (160Gb sata) - 5400/=
mouse , Key board,
blankcds pen drives
& other computer parts
அனைத்திற்கும் 1 year worrenty
மிக குறைந்த விலையில்
computer typing, photo copy, laminating,
printing, fax & calls.
computer games,
G.M.K communication . phone no - 0212223

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பம்
KID'S PROGRAMMES
18, 20.08.2008
Softview Computer College
55, Arasady Road, Jaffna.

வெற்றித்தேர்வு வாழ்த்துக்கள்!
2009.தரம்:5 மாணவர்களுக்கான வெற்றித் தேர்வு-20
2009.தரம்:4 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு-15
2009.தரம்:3 மாணவர்களுக்கான வெற்றித்தேர்வு-10
திருமலை.எஸ்.கணேசவிங்கம் அவர்களின்
விசேட தயாரிப்பாக நாடு முழுவதும் வெளிவரும்.
பாடசாலைகளுக்கு இம்முறை விசேட சலுகை.
ஆசிரியர்களுக்கு இலவசமான பிரதி.
தொடர்பு,தொ.பே: 0212229016, 0773126807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.